188

# வசந்தம்



8
அணா

சர்வசித், ஆடி
ஜூலை, 1947

# ANNOUNCING

## THE

# NEW INDIA ASSURANCE CO.,

LIMITED.

(H. O. BOMBAY)

Have much pleasure in announcing

HAVING COMPLETED

A NEW BUSINESS (LIFE) OF

**Rs. 12,39,71,956 in 1946**

**Against a New Business of**

**Rs. 8,38,31,700 in 1945**

Thus Registering an increase of

NEARLY 50 PER CENT

During this Year The Company has plans for an intensive organisation in the City & Districts undeveloped.

APPLICATIONS FROM PERSONS OF RECOGNISED ORGANISING ABILITY WILL BE CONSIDERED.

*Apply to :*

MADRAS BRANCH,
4 & 5, First Line Beach.

**K. GANAPATHI,**
Branch Manager.



நம் நாட்டுத் தொழிலை
ஆதரியுங்கள்
மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ் :
R. K. ஷண்முகம் செட்டி
அண்டு பிரதர்ஸ்.
நூற்றல் :
20 நெ. முதல் 44 நெ. வரை ஒற்றை,
முறுக்கு, காரம் சல்லை நூல்
தயாரிக்கிரேம்.
எல்லாவிதமான ஜவுளி
ரகங்களும் :
வேஸ்டிகள், லாங்கிலாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்
தயாரிக்கிரேம்,
எங்கஸ்ளுடய வி 116 நெ. லாங்க்ளாத்
மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை
எங்களுடையதே.
வசந்தா மில்ஸ் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.
தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

# தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

**(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)**

**(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)**

| | | | |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... | ... | ரூ. 5,25,00,000 |
| வாக்களிக்கப் பட்ட மூலதனம் | ... | ... | ரூ. 5,04,39,600 |
| செலுத்தப் பட்ட மூலதனம் | ... | ... | ரூ. 2,51,02,200 |
| ரிசர்வும் மற்ற நிதிகளும் | ... | ... | ரூ. 2,54,72,000 |
| டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி | | ... | ரூ. 94,48,67,000 |

**தலைமை ஆபீசு:**

**மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.**

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

**மானேஜிங் டைரக்டர்:-** Mr. H. C. கேப்டன், J. P.

**டைரக்டர்கள்:-**

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினுய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

**லண்டன் ஏஜண்டுகள் :-** மெஸர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

**நியூயார்க் ஏஜண்டுகள்:-** தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

**தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—**

அடோனி, ஆலப்பிலை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கட்ப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.



## துணி உற்பத்தியாளர் கவனிக்க

நீங்கள் உற்பத்தி செய்யும் சட்டைத் துணிகள் கோட்டுத் துணிகள், சேலைகள், வேஷ்டிகள், முதலிய சகலவிதத் துணிகளிலும், பளபளப்பும் கண் கவர்வனப்பும் உண்டாக்க 'காலண்டர்' செய்யுங்கள்.

குறைந்த சார்ஜில் நிறைந்த அழகுடன் 'காலண்டர்' செய்து தரப்படும்.

வெளியூரிலிருந்து வரும் துணிகள் உடனே கவனித்து 'காலண்டர்' செய்து அனுப்பப்படும்.


விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

**TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,**

(Calenderiug Department)

CANNANORE : : NORTH MALABAR.

## சுளுக்குகளுக்கு லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்




சொற்ப செலவில்
சீக்கிர நிவாரணம்

## விரைவில் நிச்சயமான நிவாரணம்

தயாரிப்பவர்கள் :-

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 67 : : சென்னை.



## ஆடை அணிவகுப்பில் இப்பொழுது அதிகம் அடிபடுவது

காலத்துக்கு தகுந்த பாஷனாக எல்லா நெம்பர் நூல், நிறம், பாட்டர்ன், அதிக நேர்த்தியாய் நெசவு செய்த துணிகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் மதருஸ் மாகாணம் பூராவும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜாஸ்தி சக்தியால் ஓட்டப்படும் யந்திரங்களைக் கொண்டு, பெருவாரியாக உண்டாக்கும் மில் துணிகளைவிட, கைத்றி சரக்குகளுக்கு பலம் நீடித்த உழைப்பு அழகு நேர்த்தி, உபயோகம் மென்மை மிகவும் அதிகம்.

மதருஸ் கூட்டுறவு கைத்துணிகள், சங்கத்தின், மதருஸ் மற்ற ஊர்களிலிருந்து நேராக குறிப்பிட்ட கரார் விலையில் விற்பனை செய்யப்படுவதால், நடுவிலிருக்கும் வியாபாரிகளின் லாபத்தை அகற்ற சாத்தியமாகிறது. ஆகவே, எங்களிடம் சாமான்கள் வாங்குவதால், உங்கள் பணம் மீதமடையும், கஷ்டமுமில்லை

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ், சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசுவலைகள், க்வில்ட்ஸ், தலையணிகள்.

## மதராஸ் கோவாபரேடிவ்
## கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் சொஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

# அரவிந்த்

## வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

**இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:**

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், இரேப், பாப்லின், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

The Fashionable Furnishing Fabrics

**DRESS TEXTILES**

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

## S. BEEMIAH CHETTY,

**"WHITE SHOP" Coimbatore.**

**Telegrams :- "UMAYAL".** **Telephone :- 56 A.**

## UMAYAL WEAVING ESTT., LTD.,

**Cannanore, N. Malabar.**

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

**BEDSPREADS**
**TABLE LINEN**
**FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS**
**DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS**
**TURKISH TOWELS**
**BATH GLOVES**
**BATH MATS**
**MUFFLERS ETC.**

**ENQUIRIES EARNESTLY SOLICITED.**

**ENCOURAGE HANDLOOM INDUSTRY.**

**"UMAYAL" FABRICS**
**AN ASSET TO EVERY HOME**
**EVERYTHING MADE TO ORDERS**
**POPULAR FABRICS**
**THROUGHOUT INDIA AND CEYLON.**

**Distributors for Mysore State :-**
**SRI UMAYAL STORES,**
**363, Avenue Road,**
**BANGALORE CITY.**

## சந்தாதாரர்களுக்கு

'வசந்த'த்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிடவேண்டும்.

மானேஜர் :

**வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.**

# 73 கோடி ரூபாய்க்கு மேல் விற்கப்பட்டிருக்கின்றன

## நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

அவைகள் மிக பத்திரமானவை, முதலும் வட்டியும் சர்க்காரால் உத்தரவாதமளிக்கப்பட்டவை. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிகிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மெனட் பத்திரத்தின் மேல் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்தவேண்டியதில்லை.

சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணு அல்லது 4 அணுவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம்.

ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸுகளிலாவது, கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

**இன்றைய பிரபலமான முதலீடு**

AC-260-TM

# வசந்தம்

மலர் 6 சர்வஜித், ஆடி. இதழ் 4

## பொருளடக்கம்


மலர் மணம் ... ... 1

விஞ்ஞான உட்டோப்பியா
'வில்லன்' ... 2

பனி கலைந்தது
கு. ப. சேது அம்மாள் ... 6

புத்தக ஆராய்ச்சி
... ... 16

காதலுக்குப் பின்
அ. சிங்காரவேலு ... 17

மல்லிகை
'தேவிகா' ... 23

கடமை
எச். விஜயகுமார் ... 25

முத்துவின் நேர்மை
எஸ். பி. மாதையன் ... 37

ஆஸ்ரமம்
எஸ். வி. பத்மனுபன் ... 39

மணத்துள் விளைந்த மாணிக்கம்
கிருஷ்ணசாமி நாயுடு ... 42

விமோசனம் ஏது ?
பத்மாவதி ஜகன்னுதன் ... 47

அலையும் கலையும்
ஆர். கே. விசுவநாதன் எம். ஏ. ... 53

காதலியின் தியாகம்
அரு. பாபநாசம் ... 57

வெற்றி யாருக்கு ?
கமலாட்சி சீனிவாசன் ... 63

உள்ளம்
ஆ. கி. நடராஜன் ... 66

பரிசு
ராஜம் ராமமூர்த்தி ... 68

இரேகை சாஸ்த்திரம்
எஸ். எம். நாராயணசாமி எம். ஏ. ... 75

மல்லிகை மொக்கு
நா. நாகலிங்கம் ... 77

அச்சம் தவிர்
டி. சி. ராமசாமி ... 81

விளங்காத அதிசயம்
கே. சி. எஸ். அருணுசலம் ... 83

பொறுமை வேண்டும்
வி. கிருஷ்ணன் ... 86



**இந்தியன் பாங்க் லிமிடெட்**

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,

நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென் இந்தியாவில் எல்லா முக்கிய மான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ரூ. 72,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000

ரிஸர்வ் நிதி ... ரூ. 60,72,602

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**

IBN/10 செக்ரெடரி.



மிகச்சிறந்த ஆயுர்வேத ஒளஷதங் களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

**ஆர்யவைத்ய பார்மசி**

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.


உங்கள் தினசரி உபயோகத்திற்கு
பனி மலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரியமலர்களின் நறுமணம் போன்றுகளைப்பாற்றுவதுமான
டாடா ஓ-டி.-கொலோன்
உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது.
எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.
Tata's
EAU DE COLOGNE
THE TATA OIL MILLS CO. LTD
80°
A TATA PRODUCT
டாம்கோ விற்பனை இலாகா :
நெ. 4/117 திருச்சிரோடு : : கோயமுத்தூர்.

# வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள்:
டி.கே.சிதம்பரநாதமுதலியார் ✣ சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியா

நீண்ட தமிழால் உலகை
நேமியன் அளந்தான் — கம்பர்

## மலர் மணம்

தமிழில் விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதுவதில் பெயர் பெற்றவர் திரு ஆர். கே. விஸ்வநாதம் அவர்கள். தெளிந்த நடையில் எந்தக் கடினமான விஷயத்தையும் சொல்லும் திறம் பெற்ற திரு விஸ்வநாதன் அவர்கள் தரும் "அலையும் கலையும்" என்ற கட்டுரைத் தொடரை இந்த இதழிலிருந்து ஆரம்பித்திருக்கிறோம்.

இளம் எழுத்தாளர்களுக்கு 'வசந்த'ச் சோலையில் இன்ப மணம் நுகர நெடுகிலும் சந்தர்ப்பம் வாய்த்து வந்திருக்கிறது. இந்த இதழில் எஸ். வி. பத்மநாபன், ஸ்ரீமதி பத்மாவதி ஜெகன்னாதன், கமலாட்சி ஸ்ரீனிவாசன், ராஜம் ராமமூர்த்தி, சிறப்பான சிறு கதைகள் வரைந்திருக்கிறார்கள்.

திரு சிங்காரவேலு குறிப்பிடத்தக்க சிந்தனையாளர். சரித்திரம், சிறுகதை, கட்டுரை யாவற்றிலும் நன்கு பரிச்சயமுள்ள அவர், ஒரு மொழி பெயர்ப்புக் கதையை அளித்திருக்கிறார்.

வருகிற இதழில் பல புது அம்சங்கள் வெளி வர விருக்கிறது. 'வசந்த'த்தின்பால் இலக்கிய ரசிகர்கள் கொண்டுள்ள அன்பே இதற்குக் காரணம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

— ஆசிரியர்

197254

# விஞ்ஞான உட்டோப்பியா

["வில்லன்"]

[illegible] அவர்களின் பொது வாழ்[illegible] ஸதாபனங்களும் யாதொரு குறைபாடுகளுமின்றிச் சம்பூரணமான, பரிபக்குவமான நிலையடைந்துள்ள நாடொன்று இன்னும் பிரத்யட்ச உலகில் நாம் காணமுடியாததொரு லட்சிய நாடாகவே இருந்து வருகின்றது. கற்பனை மட்டுமே திகழும் அத்தகைய நாட்டை நாம் "உட்டோப்பியா" என்கிறோம். உட்டோப்பியா என்ற சொல் கிரேக்க மொழியினின்று வருவது. "ஒரு நாடுமில்லை" என்பதே அதன் பொருள். அதை முதன் முதலாக இலக்கிய உலகில் பிரயோகித்தவர் சர் தாமஸ் மூர் ஆவர். 1516-ல் லத்தீன் மொழியில் "உட்டோப்பியா" என்ற தலைப் பெயருடன் எழுதிய தம் நூலில் கற்பனைத் தீவு ஒன்றையும் அதன் சமூக நிலையையும் அவர் அழகுற வர்ணித்தார். அச்சமூகத்தில் வசித்த ஒவ்வொருவனும் தன் உழைப்பினால் அதன் பொதுச் செல்வத்தை வளர்த்தான். அதனிடமிருந்தே தன் வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான யாவற்றையும் பெற்றான். சமய விஷயங்களில் தம்மிடையே இருந்துவந்த அபிப்பிராய பேதங்களை மக்கள் சகித்துப் பொறுத்தனர். தகுதியுடையோரே உத்தியோகங்களில் உயர்வு பெற்றனர். அந்நூலைப் பின்னர் பிஷப்பர்னெட் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

விஞ்ஞானம் மேன்மேலும் அபிவிருத்தியடைந்தது. அதுவும், 18-ம் நூற்றாண்டின் இறுதியில் தலைகாட்டின தொழிற்புரட்சிக்குப் பின், மிக மிக வேகமாக அபிவிருத்தியடைந்தது. விஞ்ஞானம் தொழில் வளர்ச்சியில் மேன்மேலும் பிரயோகிக்கப் பட்டது. தொழிலுற்பத்தி பன்மடங்கு பெருகியது. நீராவிக் கப்பல், ரயில், மின்சாரம், மோட்டார், ஆகாய விமானம், தந்தி, டெலிபோன் போன்றன உலகை ஒற்றுமைப்படுத்தி அதன் விஸ்தாரத்தை மிகவும் சுருக்கி விட்டன. மக்களின் சௌகரிய வாழ்க்கைக்குரிய பொருள்கள் பல உற்பத்தி செய்யப்பட்டன. புதுப் புது ஆராய்ச்சிகளின் பயனாக, மக்களின் நோய்களைக் கட்டுப் படுத்தின பல சுகாதார முறைகள் ஏற்பட்டன. விஞ்ஞானத்தினால் ஆகக் கூடாதது ஒன்றுமேயில்லை என்ற எண்ணம் மேன்மேலும் வலுத்தது. அது ஒரு பொன்னுலகை, ஏன், நாம் உட்டோப்பியா எனக்கூறும் லட்சிய உலகையும், சாத்தியமாக்கிவிடும் என அறிஞர் கருதினர். உலகம் பிணைக்கப்பட்டுச் சுருங்கிய பின் யுத்தம் இனி ஏற்பட முடியாதென ஆசிரியர் எழுதவாரம்பித்தனர். ஆனால் இவர்களின் மனக்கோட்டையில் 1914-ல் இடி விழுந்தது. முதல் மகா யுத்தம் இவை யாவும் மதி மயக்கங்கள் எனத் தெளிவுறுத்தியது.

யுத்தத்தின் பிறகும் விஞ்ஞானம் புதுப்புது வெற்றிகள் கண்டு அபிவிருத்தியடைந்து கொண்டே வந்தது. விஞ்ஞானிகள் பூதபௌதிக ஆராய்ச்சிகளிற் போலவே, உயிர் ஆராய்ச்சிகளிலும் பல புதுப் புது விஷயங்களைக் கண்டு பிடித்தனர்.

கண்டு பிடிக்கப்பட்டதுதான் தாமதம்; அவை வாழ்க்கையின் பல துறைகளிலும் விரைவாகப் பிரயோகிக்கப்பட்டன. விஞ்ஞானத்தினுல் ஆகக்கூடாததென்ன? அது மக்களைப் பலவித நோய்களிலிருந்து காப்பாற்றுகிறது. மக்களுக்குரிய சத்துள்ள உணவு இதுவெனக் காட்டுகிறது. பெண்கள் அடிக்கடிப் பிரசவித்துப் பலவீனமடைகின்றனர். வேண்டாத சந்திகளின் தொகை பெருகுகின்றது. விஞ்ஞானம் நவீன கர்ப்பத்தடை முறைகளைக் கண்டு பிடித்து உதவுகின்றது. மலடி குழந்தைபெற ஆசைப்படுகிருளா? உடல் நலம் வாய்ந்த ஆண் ஒருவனின் விந்து சோதனைக் குழாயில் சேகரிக்கப் பட்டுப் பெண்ணின் கருப்பப் பையில் செலுத்தப்படுகிறது. விஞ்ஞானம் இவ்விதம் கருத்தரிக்க உதவுகின்றது. போக வாழ்க்கைக்குரிய சௌகரியங்கள் தாம் எத்தனை! ஒரு பொத்தானை அழுத்தினுல் போதும், தேவையான பொருள் உடனே கிடைக்கிறது. மனிதன் பிரமாவுடன் போட்டியிட்டுப் படைக்க ஆரம்பித்த பின் அப்பிரமனின் தயவு இனி என்? அவன் கடவுளை மறந்தான்.

விஞ்ஞான நாகரிகம் இந்த நிலையை அடைந்த போதே, அல்டூஸ் அக்ஸ்லி 1932-ல் " தீர நவீன உலகம் " என்ற தம் பெயர்பெற்ற நாவலை எழுதினர். அதில் அவர் விஞ்ஞான உட்டோப்பியா ஒன்றைச் சித்திரித்தார். நாடெங்கும் பிரபல விஞ்ஞானிகளின் தலைமையில், சோதனைக் குழாய்களிலும் புட்டிகளிலும் உயிர்களைச் சிருஷ்டித்து வளர்க்கும் பிரமாண்டமான சோதனை சாலைகள் நடக்கின்றன. ஒரு முட்டைக்கு ஒரு குழந்தை என்பது கர்நாடகமாய் விட்டது. இப்போது ஒரு முட்டைக்கு 96 உயிர்கள் வீதம் சிருட்டியாகின்றன. நம்மிஷ்டப்படி ரீகரகமான உயிர்கள் வீதம் சிருட்டியாகின்றன. கருப்பத் தடை போலவே மரணத்தைத் தடை செய்யும் முறைகளும் உள்ளன. ஆயுள் காலம் அதிகரிக்கப்படுகிறது. பிணங்களையும் வீணுக்காமல் அவற்றிலிருந்து நம் நிலங்களைச் செழிக்கவல்ல செயற்கை உரங்கள் தயார் செய்கின்றனர். சுகவாழ்க்கையே லட்சியம். விஞ்ஞானம் அது ஈடேறச் செய்கிறது. வாழ்க்கையில் சங்கடமேதேனும் எற்பட்டால் அதைப் போக்கவும் வழியுண்டு. 6½ கிராம் சோமாவை விழுங்கி விட்டால், ஒரே தூக்கம், ஒரே அமைதி. கதாநாயகி லெனினுவுக்கு இந்த வாழ்க்கை மிகவும் பிடித்திருக்கிறது. ஆகா! இந்த அபிவிருத்தியே அபிவிருத்தி! என்று பரவசமடைகிருள். ஆனுல் சாவேஜ் என்னும் அறிஞனுக்கு இது பிடிக்கவில்லை. விஞ்ஞானம் அளிக்கும் இத்தகைய சௌகரியங்களை அவன் விரும்பவில்லை. நோய், நொடி, துன்பம், துயரம், துரதிருஷ்டம் இவையே வாழ்க்கைக்கு உறுதியளிப்பன. இவற்றுடன் போராடி அடையும் வெற்றியே வெற்றி. தனிமையிலே, ஆண்டவன் தியானத்திலே சுகம் காண்கிருன். உலகைத் துறந்து, தனி வாழ்க்கை நடத்துகிருன். அமைதியும் அழியா இன்பமும் அடைகின்ருன். ஆசிரியர் இங்ஙனமாக விஞ்ஞானத்தைப் பரிகசிக்கிருர்.

இந்த உட்டோப்பியா பார்ப்பதற்கு அழகாயிருக்கலாம். ஆனுல் உள்ளே வெறும் சொத்தை. இதில் சமூகத்தின் உண்மையான நிலைமை மகா மோசம். விஞ்ஞான அபிவிருத்தியின் பயனுக ஏற்பட்டுள்ள நாகரிகம் சுத்த சட

நாகரிகம். அது அதிகரிக்க அதிகரிக்க, மக்களிடையே விஷய இச்சையே அதிகரித்திருக்கிறது. எல்லோருக்கும் சத்துள்ள உணவு; எல்லோருக்கும் உடல் சிரமமில்லாத, ஆபத்துக்களில்லாத வாழ்க்கை; எல்லோருக்கும் ரேடியோ செட்டுகள்; எல்லோருக்கும் மோட்டார்கள்; எங்கும் அழகுக் கூடங்கள்; எங்கும் கர்ப்பத்தடை வசதிகள், இவற்றிற்கு மேல் என்ன வேண்டும்? அவ்வப்போது பரபரப்பும், திடும்பிரவேசமான நிகழ்ச்சிகள் வேண்டுமா? பண வேட்டை, அரசியல் வேட்டை, காதல் வேட்டை, விளையாட்டுக்கள், அவ்வப்போது யுத்தம் — இவை இருக்கவே இருக்கின்றன.

இத்தகைய சமூகத்தில் சிந்தனை மட்டம். கலையும் இலக்கியமும் பயனற்ற குப்பைக் கூளங்கள். அவ்வப்போது நடக்கும் யுத்தங்கள் மனிதனை உருமாறுதலடையச் செய்வதில்லை. ஒரு வித சாமானிய மக்களாகின்றனர். அவ்வளவே யுத்தம் செய்யும் புரட்சி.

மக்கள் தாம் சுகப்படுகின்றனரா? உண்மையில் கோடிக் கணக்கான மக்கள் பசியினாலும், குளிரினாலும், அச்சத்தினாலும், அதீத வறுமையினாலும் அல்லற்படுகின்றனர். ஒரு சிலரின் நலனுக்காக அவர்கள் சுரண்டப் படுகின்றனர். ஜனத்தொகை பெருகுகின்றது. தொழில் வளர்ச்சியினாலும், தொழிலுற்பத்தி முறையில் ஏற்பட்ட புதிய டெக்னலாஜிகல் அபிவிருத்திகளின் காரணமாகவும் தேவைக்கு அதிகமான உற்பத்தியும் மேன்மேலும் அதி அதிகரிக்கின்றன. இந்த நிலையினாலேற்படும் குழப்பத்தைத் தடுக்கவும், மற்றும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாது காக்கவும் அரசாங்கத்தார் பிளான் அல்லது திட்டம் வகுக்கின்றனர்.

பிளான் என்றால் கட்டுப்பாடு இன்றியமையாததாகிறது. கட்டுப்பாடு எனில் கட்டாயப் படுத்தியாக வேண்டும்; அதாவது பலாத்காரம் பிரயோகித்தாக வேண்டும். இந்த நிலையில் மக்களுக்கு உண்மையான சுதந்திரமேது? ஆதியில் இயற்கை நிலைக்கு அடிமைப் பட்டிருந்த மக்கள் மெல்ல மெல்ல அதனின்று விடுதலையடைகின்றனர். சமூக, பொருளாதார அரசியல் ஸ்தாபனங்களேற்படுகின்றன. நாளடைவில் மக்கள் அவைகளுக்கே அடிமைப் படுகின்றனர். பிறகு அவற்றினின்று விடுதலையடையப் போராடுகின்றனர். சமுதாய வாழ்வில், நாடும் அரசாங்கமுமே முக்கியமாய் விடுகின்றன. தனி மனிதர் அவற்றிற்காகப் பலியிடப் படுகின்றனர். மனிதன் கும்பலோடு கோவிந்தா போடுகிறான். அவன் தன் மனத்தைக் கட்டுப் படுத்துவதில்லை; ஆத்மீக நலனையுணர்வதில்லை. இந்த நிலையில் அவன் விழிப்படைதல் எங்ஙனம்? நாடு விழிப்படைந்தால் மனிதன் விழிப்படைய மாட்டானா என்று கேட்கிறீர்கள்? அப்படியில்லவேயில்லை. நாட்டின் இயல்பு, பண்பு, நடத்தை யாவும் தனி மனிதரின் இயல்பு, நடத்தை, இச்சை, உணர்ச்சி இவற்றைப் பொறுத்துள்ளன. மக்கள் உருமாறுதலடைந்தால்தான் நாடும் இன்றியமையாது உருமாறுதலடையும். உலக சமாதானம், நீதி என்று வாய்ப்பந்தல் விடுகின்றனர். இவை சிறந்த லட்சியங்கள். இவற்றையடைவதற்கான சாதனங்களும் விழுமியனவாக இருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி, பலாத்கார முறைகளைப் பிரயோகித்தால் விழு

மிய பலனேற்படுமா? பலாத்காரம் உள்ளவரையில் உண்மையான சுதந்திரமேற்படப் போவதில்லை.

இந்தப் பரிதாப நிலையை ஆசிரியர் "காஸாவில் கண்ணில்லாதோர்" என்ற நாவலில் சித்திரிக்கிறார். கதாநாயகன் அந்தோணி விடுதலையடையும் பொருட்டு பெரிதும் முயலுகிறான்; உலகத்துன்பங்களைக் கண்டு அவற்றைச் சமாளிக்க வழி கண்டுபிடிக்க முயலுகிறான். 1936-ல் எழுதிய இந்த நாவலில் ஆசிரியர் உலக நிலையைப் பரிகசிக்கிறார்.

இக் குழப்ப நிலையிலிருந்து உலகம் விடுதலையடையுமா? உண்மையான சுதந்திரம் ஏற்படுமா? பயனற்ற வாழ்க்கைபோய், பயனுள்ள வாழ்க்கையேற்பட வழியுண்டா? மக்களை வாட்டும் ஐயமும் மனக் குழப்பமும் ஒழிந்து நிச்சயமும், உறுதியும், தெளிவும் ஏற்படுமா? இவை யாவும் ஏற்பட வழியுண்டு. மனிதன் தான் இழந்த உண்மையான இன்பத்தை மீண்டும் அடைந்து வாழ்க்கையை வளம்பெறச் செய்யலாம். ஆனால் முதலில் தர்மமே, சமாதானமே, அஹிம்சையே உண்மையான நாகரிகமும் அபிவிருத்தியுமென அவன் உணர்தல் வேண்டும். விழுமிய நலனை, லட்சியத்தை அடைய, சாதனமும் விழுமியதாக இருத்தல் வேண்டும். விழுமிய சாதனம் மூலம் லட்சியம் சித்தி பெறுவதே அபிவிருத்தி. தன்னலமும், பயனில் பற்றும் ஒழிய வேண்டும். பற்றற்ற, தன்னலமற்ற பணியே விடுதலைக்கு வழி. தனி மனிதர் இங்ஙனம் உருமாறுதலடைந்தாலொழிய நாடு உருமாறுதலும் விடுதலையும் அடையப் போவதில்லை. இதுவே வாழ்க்கையின் தத்துவம். ஆசிரியர் 1937-ல் எழுதிய "லட்சியமும் சாதனமும்" என்ற நூலில் இக் கருத்துக்களையே வெளியிடுகிறார்.

★

## அரசியல் தந்திரம்

இந்த ஆத்மா, தந்திரமாகச் சச்சரவுகளை — அதாவது மற்ற அரசியல் தந்திரிகளால் ஏற்பட்ட சச்சரவுகளை — சமாளிக்கிற ஓர் பேர் வழி.

— போரம், ஜோகனஸ்பர்க்

# பனி கலைந்தது

[கு. ப. சேது அம்மாள்]

ஏழுவருஷங்களுக்கு முன்பு இளவரசராக இருந்த சித்தார்த்தன் வெளியேறிய பிறகு, இன்று கௌதம புத்தன் பிக்ஷுவாக, தன் தந்தையுடனும், மனைவியுடனும் கபிலவாஸ்து நகரத்தில் பிரவேசித்தார்.

சக்ரவர்த்தியினுடைய ஆக்ஞை பிறந்ததும் உடனே கோஷிப்பதற்குத் தயாராக இருந்த ஜயபேரிகைகளும், வெற்றிச் சங்குகளும், வாத்தியங்களும் காத்திருந்தது. காத்தவாறே நிற்க, நகரத்து பிரஜை யாவரும் பேச்சற்று பிரமித்து விழிக்க புத்தன் சாவதானமாக நகரத்து ராஜவீதிகளைக் கடந்து அரண்மனையில் பிரவேசித்தார்.

மறுநாள் புத்தனுடைய தர்மபிரசாரம், நகரத்தை அடுத்துள்ள குன்றின் தாழ்வரையில் நடக்கவிருப்பதால் நகரத்து மக்கள் யாவரும் அங்கு கூட வேண்டும் என சக்ரவர்த்தியின் ஆக்ஞையை பறையறிவிக்கப் பட்டது.

மகனைக்கண்டதும் கேட்க வேண்டும் என்று நினைத்திருந்த அத்தனை நினைவுகளும் சுத்தோதனருக்கு மறந்துபோய் விட்டது! தெய்வீக ரூபமும், சாந்தமும், தெளிவும் கூடிய கௌதமரைக் கண்டதும் சுத்தோதனர் திகைப்புற்றுவிட்டார்!

கணவனைக் கண்டதும், தன்னை நள்ளிரவில் பிரிந்து சென்ற அநியாயத்தை நினைவுறுத்தி, 'நான் என்ன அபராதம் செய்தேன்?' என்று கேட்டு அலறி அழவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்த யசோதரை முற்றிலும் செயலற்றவளாக வாயடைத்து நின்றாள்!

கபிலவாஸ்துவின் இளவரசனை பிக்ஷுவாகக் கண்ட பெரும் குமுறலிடையே அன்றைப் பொழுது கழிந்துவிட்டது.

மறுதினம் மாலை நேரம்.

மாலைச் சூரியனின் பொன் கதிரால் குன்றும், அதன் தாழ்வரையும் பிரகாச முற்றிருந்தன.

குன்றின் மேல்வரையின் மீது தவவடிவம் தாங்கிய புத்தன் அமர்ந்திருந்தார். வலதுபுறம் அரசன், மறுபுறம் அனந்தன், தேவதத்தனென்ற இரு சகோதரர்களும் அமர்ந்திருந்தார்கள். சுற்றிலும் நகர பிரமுகர்களும், அவருடைய சீடர்களுமிருந்தார்கள், பகவானுடைய காலடியில், பத்தினி யசோதரையும், குழந்தை ராகுலனும் இருந்தார்கள்.

கூட்டம் அமைதி யுறுவதற்காக போதிஸத்வன் தமது கையை உயர்த்தி அமர்த்தினர். உடனே அங்கு நிசப்தம் நிலவிவிட்டது.

போதி முனிவன் தாமறிந்த தர்மவழியை விளக்கிக் கூறத் தொடங்கினர்.

"எனது அன்பினர்களே, எனது பூஜைக்குரிய பிதா அருகிலிருக்கிறார். முதலில் அவருக்கு மரியாதை தெரிவித்து விட்டு, பிறகு நான் தேடிச் சென்று கொண்டு வந்த தர்மநிதியை மக்களுடைய

உய்வுக்காக இங்கு விவரிக்க இருக்கிறேன்.

ஆதியில் ஒரே அந்தகாரமாக இருந்ததாகவும், அந்த இருளில் தியானத்திலிருந்த பிரமத்தின் அருளாக இவ்வுலகம் உண்டானதாகவும் நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நமது இந்த அசேதன திருஷ்டியால், பிரமத்தையும் அறிவையும் காண இயலாது. உள்ளே விதை இருப்பதாக எண்ணி வெங்காயத்தை உரித்துக் கொண்டே போக அதனுடைய வெவ்வேறு தோல்களே வெளிப்படுவதுபோல பிரமத்தை காண முயற்சிக்கும் போது வேறு பல மாயைகள் தோன்றி எண்ணங்களை மறைக்கின்றன.

இந்த பூமியும், நக்ஷத்திரங்களும் தத்தம் வழியே சுழல்வது போல், ஜனன, மரணமும், காரண காரியங்களும் வாழ்வாகிற ஆற்றுப் பெருக்கிடையில் சுழன்று செல்வன.

திவலையினேடு திவலை சேர்ந்த வண்ணமாக, ஓய்வின்றி ஓடி கடலை அடைந்து, அங்கிருந்து மேகமாக உயரக் கிளம்பி அங்கிருந்து மறுபடி நீர்த் துளிகளாகக் கீழே விழுந்து பல துளி வெள்ளமாகி ஓடுகிறதல்லவா—? அதே போன்றதுதான் மானிடனின் வாழ்வு.

இந்த மாயாஜாலங்களை அறிவதே மானிடனுடைய முதல் கிரியை. மாறுபட்டுக்கொண்டே இருக்கும் இயற்கை நியதிகளைப் போலவே, மானிடருள்ளும் சண்டையும், சௌஜன்யமும், அன்பும், பகையும் மாறி மாறி எழுந்து மனித குலத்துடன் போராடுகின்றன.

மனிதன் அவற்றின் மாயையில் மயங்கி அறிவை யிழந்து பிரார்த்தனை செய்தால் தெய்வம் அருள் தந்து தன்னைக் காப்பாற்றி விடுமென்ற மூட நம்பிக்கையில் ஆழமாக இறங்கிக் கொண்டான்!

ஏற்கனவே, வாழ்க்கையிலுள்ள பிணி, பசி வாதைகளுடன் காம குரோதாதிகளும் கூடி கைகலக்க தடுமாறித் திரியும் மனிதன், விரதங்கள் என்று வேறு தன்னை வாட்டித் துன்புறுத்திக் கொள்ளுகிருன்!

என் அன்பினர்களே, அதோ தெரிகிற வயலைப்பாருங்கள்! நெல் விதைத்திருக்கிறீர்கள்; நெல்லை அறுத்து எடுப்பீர்கள். நன்மைக்கு விதை விதைத்தீர்கள், நன்மையைக் காண இருக்கிறீர்கள். நல்லதைச் செய்தால் நன்மைதான் விளைகிறது. தீமையைச் செய்து விட்டு நன்மையை எதிர்பார்ப்பதெங்ஙனம்?

நஞ்சை நிலம் போன்றது மானிட தேகம், நன்மை விளைவிக்கத்தகுதியானது. நிலம் நஞ்சையென்ற நினைவில் விஷவிதை விதைத்து நெல்லை அறுக்க இயலாது!

சகோதரர்களே, நமது கர்மத்திற்கு தக்க பலனைத்தான் நாம் பெறலாம். கர்மகதியை நடத்திச் செல்லும் விதிதான் சாச்வதமானது!

தீமையைச் செய்துவிட்டு, பிறகு தெய்வத்திடம் பாப பரிகாரத்திற்காக, யாக. யக்ஞங்களையும் பலிகளையும், விரதங்களையும் செய்து நன்மையை யாசிக்கிருன்!

நாரைக் கயிருகத் திரிப்பவன் மனிதன், அதனல் கட்டப்படுபவனும் மனிதனே! மனித

னுடைய சுக, துக்கங்களிலிருந்தே அவனுடைய அனுபவம் உரு வெடுக்கிறது. தேவர்களிலிருந்து, புழுபூச்சிகள் வரை தம் வினைகளையே பலனாக அடைகின்றனர்.

புண்ணிய கர்மாவின் பயனாக சுவர்க்கலோகத்தை அனுபவிக்கலாம். ஆனால் புண்ணியத்தின் நிறை தீர்ந்ததும் மறுபடி வீழ்ச்சியடைய வேண்டியதே! பாபமாவது சாச்வதமோ என்றால் அதுவுமில்லை. பாபத்தின் பயன் கரைந்ததும் மறுபடி ஏற்றம்!

எது நிரந்தரம்?

ஒன்றுமில்லை! மாறுதலே நியதியாகக் கொண்டுள்ள காலசக்கரத்தில் சிக்கியுள்ள நீங்கள் அதினின்றும் விடுபடும் முயற்சி செய்யாவிடில் வாழ்வு, வாழ்வுக்கு ஆதாரமான உயிரைச் சுமந்து கொண்டிருப்பது கொடிய வாதனைதான்.

இப்போது நான் சொல்லுவது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஏனெனில் வாழ்வில் உள்ள துன்பத்தை எடுத்து ஓதிய நானே வாழ்க்கையில் இன்பம் இருக்கிறது என்றால் நீங்கள் மலைப்பீர்கள்.

ஆனால் உண்மையைத் தெரிவிப்பதே என் நோக்கம். மக்களே, உலகம் இனியது, வாழ்வு இனிது! ஆம் ஆனந்த மயமானதுதான் உலகம்; அதாவது வாழத் தெரிந்தவர்களுக்கு!

ஆறு வருஷங்களுக்கு முன்பு நான் என் சகோதரர்களின் சுக, துக்கங்களுக்காவது மனம் விண்டு துயருற்றிருக்கிறேன். ஆனால் இப்போது துயரினின்றும் விடுபட்டவனாக சந்தோஷத்தோடு இருக்கிறேன். ஏன்? எனது சகோதரர்களின் அறியாமையே அவர்களுடைய சகல கஷ்டங்களுக்கும் காரணம்.

அனைத்திற்கும் மேலானதான சக்தி ஒன்று நம்மை ஆளுகிறது, மலரில் ஒளியும், மணமும், மேகத்தில் வர்ணசாயைகளும், பக்ஷி, மிருகங்களின் நிறச்சோபைகளும் அவைகளின், இடியும், மின்னலும், காற்றும், மழையும் அதன் ஆக்கங்கள்! அழிந்து போனவற்றிலிருந்து அழகானவை உற்பத்தி செய்தும், அழகை அழிப்பதும் அதன் கட்டம்! ஆக்குவதும் ஆள்வதும், அழிப்பதும் அதன் ஆதிக்கம்!

இத்தனை சுய உரிமை படைத்த அந்தச் சட்டம் எவ்வாறானது?

கேளுங்கள், சட்டத்தை அனுசரிப்பவன் லாபமடைகிறான், எதிர்ப்பவன் அடைவது நஷ்டம்! ஒளிந்து செய்யும் நன்மைகளுக்கு பிரதி பலனாக அமைதியையும், ஆனந்தத்தையும் தருகிறது. அதே போல ஒளிந்து செய்த தீமைக்கு துன்பத்தையும் துக்கத்தையும் தருகிறது! சுருக்கமாக அந்த சக்தியின் உபதேசம் என்னவெனில்:– நன்மைசெய், அதே பெறுவாய் தீமைசெய், அதன் பலனையும் தவறாது பெறுவாய் என்பதே' மன்னிப்பும் கோபமும் அதற்கில்லை அதன் தராசில் மயிரிழைகூட பிசகின்றித் தீர்ப்பளிக்கும். அதைத் தடுக்க யாருக்கும் வலிமையில்லை. ஏன் அதனுடைய சுகம் அன்பு மயமானது. ஆனந்த கிரீடம் தரித்த சக்தி அது.

சகோதரர்களே! ஒருவன் துன்பங்களுக்கு காரணத்தை அறிவாலறிந்து பொறுமையோடு அதை சகித்துக்கொண்டு தன் சக்திக்கியன்ற மட்டில் பிறரிடம் அன்புடனும் உண்மையுடனும் நடந்

துகொண்டு அதன் மூலமாகத் தான் முன் செய்த வினைகளை அறுத்துவிட முயன்று கொண்டு, தீமைக்குப்பதில் செயலாகநன்மை புரிந்து, எதையும் தாழ்மையோடு ஏற்று அனுபவித்து ஆணவ மாயைகளை சுட்டெரிப்பவனுக்கு அவனுடைய மரண காலத்தில் வாழ்வின் வீதத்தில் தீமையெல் லாம் நீருகி, நன்மை மிகுந்து நிற்கும்.

ஆசைகளைத் துறந்து விட்ட அவனை இவ்வுலகத்தின் துன்பங் கள் நெருங்கமாட்டா. எனவே அவனுடைய அமைதிக்கும், ஆனந் தானுபவத்திற்கும் பங்க மேற் படாது. அவன் நிர்வாணத்தை அடைகிருன்: அதாவது உயிரு டன் ஒன்ருகி விடுகிருன்.

ஓம், மணிபத்மேஹம்! ஓம் பனித்துளி கடலில் விழுந்து விட்டது!

மக்களே! இதுதான் கர்ம மெனப்படுவது. அறிந்துகொள் ளுங்கள். ஜன்மாந்தர வினைகள் யாவும் அடுத்த ஜன்மத்தைத் தொடர்வன.

தான் நெய்த பட்டிலே வசிக் கும் பட்டுப்பூச்சிபோலும், முட்டையினின்றும் வெளிப்பட்ட பாம்பின்மீது கோடுகளும் வாயில் விஷப்பற்களும் உண்டாவது போலும், கர்ம வினையானது நல்லதோ, கெட்டதோ அதற்குத் தக்கபடி மனிதனுடைய குணத் தையும், தொழிலையும் ஏற்படுத்திக் கொள்ளுகிறது. இன்னும் கேளுங் கள்: இக்கர்மமானது பிறருக்கு உபகாரத்தைச் செய்யும். அதே போல அபகாரத்தைச் செய்யவும் கூட சாதன மாகிறது.

பாபி இறந்தால் அந்த திசையில் வியாதியும் துன்பமும் இடம் பெறுகிறது. நல்லவர்கள் இறந் தால் நல்லவாக்குப் பிறந்து அத ஞல் உலகம் உய்கிறது! அனைத்தும் இவ்வாறு இடம்பெற கல்ப முடி வில் அன்பே அரசனுகி ஆட்சி புரியும்.

ஆனல் அது வரையில் பாபத் தீயால் தாக்கப்படாமல் நிர்வாண மெய்த அவாவுடையோன் மேன் மையுள்ள நான்கு உண்மைகளை அறியட்டும்.

முதல் உண்மை துன்பம்:— வாழ்வு ஒரு பெரும் துயரம். அத னிடையில் பிறக்கும் இன்பமோ, க்ஷணகால அளவுதான். பிறக்கும் போது, பிறந்த பின் மதலையின் அவஸ்தைகள் பிறகு யௌவன காலத்தின் துயரங்கள், தாபத்துய ரங்கள் இவைகளால் வாழ்க்கை நிரம்பிவிடுகிறது! மின்னல்போல சீக்கிரத்தில் மடியும், காதலும், அதனுடைய மூலமாக இருக்கிற தருணியும் சுகமானதே. ஆடவ னுடைய ஆண்மை மெச்சத் தக்கதுதான். ஆனல் எல்லாம் மடிவுதான்! சுகம் நசித்து விடுகி றது. ஆண்மை அமர்க்களத்தில் வெட்டுண்பதும் உண்டு.

தனது சுகத்திற்காக மனிதன் மனிதனை அரிக்கிருன். பிராணி கள் உயிராசை கொண்டு பிற உயிரை வதைக்கின்றன. ஆகாயம் நிரம்ப கார்மேகங்களிருப்பினும் அது நாம் வேண்டும்போது பெய் வதில்லை!

நோயாளியையும், மூது கிழவ னையும் அணுகி 'இவ்வாழ்வு எப்படி?' என்று கேளுங்கள்; பிறந்தவுடன் அழுகிற குழந்தை தான் பெரிய ஞானி! என்ற பதில் கிடைக்கும்.

இரண்டாவது உண்மை; துன் பத்திற்கு காரணமாவன:— ஆசை

களே துக்கத்தைதருவன. விஷயங்களும் உந்திரியங்களும் கலந்தால் மோகம் இண்டாகிறது. கனவை நினைவாக்கப் பார்க்கிறீர்கள். நான் என்ற அகங்காரத்தால் கட்டுண்டு, உண்மையின் உயர்வைப் பார்க்க இயலாமலும், அந்த ஆனந்தத்தை அறிய முடியாமலும் மாயையைக் கடக்க விருக்கும் இந்த இரண்டு உபாயங்களையும் அறிய முடியாமலும் போகிறது.

அஞ்ஞானத்தினுல் பிறக்கின்ற ஆசைகளும், சச்சரவுகளும் ஓயாத சந்தடியாகி உலகம் பொய்த் தோற்ற மளிக்கிறது. உண்மை இதயங்கள் துடிக்கின்றன. மனித குழுவில் ஏமாற்றமும், பகையும், கோபமும் அதிகரிக்கவே நன்மை விளையவேண்டிய இடத்தில் விஷ வித்துகள் முளைத்து விடுகின்றன. அதை உண்ட உயிர்கள் அதன் பலனையே அடைகின்றன.

மூன்ருவதாக துன்பத்தின் முடிவு:– காலகிரமத்தில் வாழ்வின் மேல் உள்ள ஆசைகளையும், தன்னலத்தையும் துறந்து மனதை வசப்படுத்திக் கொண்டு தன்னைத்தான் ஆள்பவனே அரசன். இவனுடைய மகிமை விண்ணுலக இன்பத்தைவிட உயர்ந்தது. அவன் தனது கடமைகளை சரிவர செலுத்தி, முடிந்த அளவு பரோபகாரமும், ஜீவ தயையும், தர்மமும் செய்து, யாவருக்கும் அன்பு செய்து வாழ்பவனுக்கு அவ்வுயிரில் தனது பழைய தீமைகளையும் மடித்தவனுகிருன். புதிதாக சேர்ந்ததும் ஒன்று மில்லாததால் அவனுக்கு ஜனன மரணம் கிடையாது.

நான்காவது உண்மை:– அது எல்லோருக்கும் நடக்கும் படியான சுலபத்தோடு சமீபமாகவுமிருக்கிறது. எட்டு பாகமாகி அமைந்திருக்கும், சாந்தத்திற்கு பாதை விடுகிறது.

முயற்சி யுள்ளவன் சற்று முன்பும், அதைத்தாமதமாகச் செய்பவன் பின்பும், ஆக உயிர்கள் யாவும் அங்கு ஒன்ருகியே தீரும்.

எட்டு பாகங்களுள்ள அந்த வழியை அறியுங்கள்:–

நற்கொள்கை:–

[1] தர்மத்திற்கு ஒப்புறவாக, ஒழுங்குள்ள, மனிதனுடைய விதிக்குக் காரணம் கர்மமாகையால் அதை நன்கு நடத்திக் கொண்டு புலன்களுக்கு அதிபதியாக இருங்கள்.

(2) நல்லெண்ணம்:– ஜீவப் பிராணிகளுக்கு நன்மையே சிந்தியுங்கள். கோபமும், பகையும் மடிந்ததுமே, வாழ்வின் இனிய கீதம் உங்கள் புலனில் ஒலிக்கும்.

(3) நல்வாக்கு:– அரசனுடைய அரண்மனைக்குள்ளது போல பாதுகாப்புடன் உங்கள் வாக்கிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு சொல்லும், இனிமையும், அன்பும் அமைதியும் பெற்று யாரையும் நோவுபடுத்தாமலிருக்கட்டும்.

(4) நன்னடத்தை:– ஒருவர் செய்த குற்றத்தை அழியுங்கள். நன்மையை விஸ்திரியுங்கள். ஸ்படிகத்தின் ஊடே புகுந்து செல்லும் நூல்போல் உங்கள் கிரியைகளில் அன்பு ஊடுருவிச் செல்லட்டும்.

இந்த நான்கைவிட விசேஷித்த தானது மற்ற நான்கு பாகத்தின் நடப்புகள். அவையாவன. தூய்மை, தியானம், தனிமை, ஆனந்தம் எனப்படுவைகள். முதலில் சொன்ன நான்கு பாக நடப்பைத் தாண்டியவர்களுக்கு பிறகு

நிற்கும் நான்கு நடப்புகளும் புலனாகும்.

முதல்படி இல்லற அனுபவம், பெற்றோர், மனைவி மக்கள் அருமையாவும் எனக்குத் தெரியும் அப்போதைய சுகமும், சந்தோஷமும் விளையாட்டுகளும், இனிமையாவும், யதார்த்தியாகவும் தான் தோன்றுகின்றன. பொய்கள் கூடவலிவுபெருகின்றன. ஒரோர் சமயங்களில், வாழ விரும்புபவர்கள் இவற்றின் மீது வாழ்ந்து, மாயைகளோடு பழகி, கொஞ்சம் கொஞ்சமாக அதை கையிலடக்க வேண்டும் பிறகு ஐம்புலன்களை அடக்கி விடுலை பெற்று நிற்பவர்களிருப்பிடம்தான் முதற்படி.

அங்குள்ளவர்களுக்கு, நான்கு உண்மைகளும் எண்மடங்கு வழியும் தெரியும். அடுத்த உயிரில் நிர்வாண பதவிக்குரியவர்கள்.

நினைவுகளற்று,. சந்தேகங்களும் மனவிருத்திகளும் ஒழிந்தவர்களிருப்பிடம் இரண்டாம்படி. இதே உயிரில் மோட்சமடைபவர்கள்.

இவ்விரண்டையும் தாண்டி, சகல உயிர்களையும் சமமாக பாவிப்பவர்களாய் தூய்மையோடிருப்பவர்களாயிருப்பதே மூன்றாம்படி. அவர்களுக்குஇனிப் பிறப் பிறப்புகள் இல்லை. அவர்களையும், வாழ்க்கையையும் பிணைத்திருந்த மாயை யென்னும் கயிறு அறுந்து விட்டது.

இதிலும் உயர்ந்ததுதான் கடைசியான நான்காம்படி. அதில் நிற்பவர்கள் புத்தர்கள்.

கடைசியான நான்காவது படியை அடைய ஒருவன் வரும் வழியில் வீரன்கை அம்பு பட்ட மிருகங்கள் இறந்து கிடப்பது போல அவனுடைய பத்து பாபங்களும் மடிந்து கிடக்கின்றன. தன்னலம் பேணல், தீய கோட்பாடுகள், ஐயறவு, பகைமை, காமம், உயிராசை, சுவர்க்க சுகவேட்கை, டம்பம், மோகம், கர்வம் என்னுமிவைகளே பத்து பாபங்கள்,

புத்தர்களுக்கு நிர்வாணத்தைத் தவிர வேறில்லை. அவனை அசைக்கக்கூடிய வலிவு எதற்குமில்லை. வாழ்ந்து, இறந்து, தனது கர்மவினைகளைத் தீர்த்து விட்டவர்கள் விருப்பு வெறுப்பற்றவர்கள்.

நண்பர்களே, இந்த 'தர்மபத'மாகிய ஐச்வரியம் உலகத்துச் செல்வம் யாவினும் சிறந்தது. ஈடு இணையற்றது. அனைவரும் கேளுங்கள் ஐந்து விதிகளாக நான் வகுத்தவை.

ஒரு பிராணியைக் கொல்வதால் அது தன் தாழ்ந்த ஜன்மத்திலிருந்து உயரும் நல்வினையைத் தடுக்கிறீர்கள். ஆதலால் கொல்லாமை நன்று.

ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கி உதவிக் கொள்ளுங்கள். ஆனால் உதவுவதாக மோசம் செய்யாதீர்கள். ஆசையாலோ, பலாத்காரமாகவோ பிறருடையதைப் பறிக்காதீர்கள்.

வாக்கு சுத்தத்தால் மனது சுத்தமாகிறது. ஆதலால் பொய்யும், அவதூறும் புகலாதீர்கள், அறிவை அழிக்கும் மயக்க வஸ்துக்களை உபயோகியாதீர்கள். தெளிந்த அறிவும், நோயற்ற உடலுமுடையவர்களுக்கு மது தேவையில்லை!

அநீதமான சிற்றின்பங்களையும், பரஸ்திரீ கவனத்தையும் அறவே நீக்குங்கள்.

இவைகளே வாழவேண்டியவன் பற்றவேண்டிய விதிகள்''

என்று போதி முனிவன் கூறி முடித்தபோது அந்தி மயங்கி நிலவு வந்து விட்டது. அந்த தூய ஒளி யில் ராஜ ராஜனை சுத்தாதனர் தம் மகனுடைய பாதங்களைப் பற்றி முத்த மிட்டு, "என் குழந் தாய், நானும்கூட உன் சீடன் தான்" என்றார்.

யசோதரை எழுந்து நின்று "பகவன், தங்களுடைய வாக்கா கிற ஸாம்ராஜ்யத்தை ராகுலனுக் குத்தரவேண்டுகிறேன்" என்றாள்.

பகவானுடைய முக ஒளி அப் பொழுதுதித்த சந்திரிகைக்கு ஒப் பாக சோபித்தது.

★

இளவரசன் போதி ஸத்வராக கபிலவாஸ்துவுக்குத் திரும்பி வந்த மூன்றும் நாள். உச்சிப் பொழுது நெருங்கிக் கொண்டிருந் தது. சுத்தோதனருடைய உத் தரவுப்படியே, குடிமக்கள் பிக்ஷா ன்னத்தை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து கொண்டி ருந்தார்கள்.

பகவானுடைய நியமப்படி நடுப்பகலில், வெட்ட வெளியான இடத்தில் அவருடைய போஜனத் திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சுத்தோதனரும், யசோதரையும் பார்த்தவாறிருக்க மக்கள் கொண் டுவந்த அன்னத்தை போதி முனி வனுக்கு முன்னிருந்த இலையில் பறிமாறினர்கள். அறுசுவை பதார்த்தங்களும் தனித்தனியாக முறைப்படி பறிமாறப்பட்டிருந் தன. இலை முன்பு உட்கார்ந்த கௌதமர் தம் இலையிலிருந்த அவ் வளவு பதார்த்தங்களையும் ஒன்றாக் கிக் கலந்தார். பட்சிகளைக் கூவி அவைகளுக்கு வேண்டிய அளவு இலையிலிருந்த அன்னத்தை வாரி இறைத்து விட்டு மிகுதியிருந்த அன்னத்தை முப்பத்திரண்டு கவ ளமாக உட்கொண்டு நீரை அருந்தி விட்டு எழுந்தார். யசோதரை புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு விம்மியபடியே அங்கிருந்து போய் விட்டாள்.

மகனுடைய செய்கையையும், நாட்டுப் பெண்ணின் உயிர் துடிக் கும் சோகத்தையும் கண்டு சக்ர வர்த்தியினுடைய மனம் கொதிக்க லாயிற்று. கண்கள் அனலைக் கக் கின. கோபத்தால் அவருடைய சரீரமே நடுங்க பீகர சப்தத்துடன் "கௌதம, இந்த உணவு நியமம் கூட தர்ம ரீதியாக வகுக்கப்பட் டதா; காண்போர் நெஞ்சு அதி றும்படியாக?" என்றார்.

"பிதாவே, சாந்தமடையுங்கள், நேற்றுதான் எனது தர்ம கோட் பாடுகளை தெளிவுற தெரிவித்திருக் கிறேன். ஆயினும் இன்றும் சொல்லுகிறேன். பிக்ஷுவுக்கு ஏற்பட்ட உணவின் அளவு பகல் ஒரு வேளை முப்பத்திரண்டு கவ ளமே. அதற்குக் குறைவாக உண்டால் பிராண சக்தி நிலை கொள்ளாது. அதிகமாக உட் கொண்டாலோ, பிராணதாரத் திற்கு மிஞ்சிய சக்தி ஏற்படுகிறது ஆதலால் இந்த முப்பத்திரண்டு கவள அன்னம்தான் பிக்ஷுவின் உயிருக்கு மித உணவு."

"அதுவும் இவ்வாறு எல்லாம் ஒன்றாகக் கலந்துதான் உண்ண வேண்டுமா?"

"ஆம், கண்டிப்பாக. அவை களை ருசிப்பது நாக்கின் தேட் டைக்கும் உணவு ருசி சபலத்திற் கும் இடம் தருவதாகும். கலப் பட ருசிதான் நாவை பதப்படுத்தி வைக்கும் உபாயம். இந்திரிய வியாபாரங்களுக்கு ஆஸ்பதமான உணவில்தான் அதிகமான நிபந்

தன்னை இருக்க வேண்டும். என்றால் வகுக்கப்பட்ட பௌத்த மத போதகர்களாகும் பிக்ஷுக்களுக்குள்ள நிபந்தனைகளில் முக்கியமானது ஆகார நியமம்தான். இன்னும் ஒன்று, நாளை தினம் நான் வெளியேற வேண்டும்......''

''எங்கே போகப் போகிறாய்?''

''அதைக் குறிப்பிட்டுச் சொல்வதெப்படி? தினந்தினமும் ஊர் ஊராகச் செல்வேன்......''

''கௌதம, உனது கிழத் தந்தையை நீ எத்தனை வகைகளில் தான் துயருறுத்த இருக்கிறாய்?

இங்கிருந்தே நீ செய்யும் தர்ம போதனையை மக்கள் கேட்க நான் ஏற்பாடு செய்கிறேன்—சித்தார்த்த......என் குமார......''

''தந்தையே, தாங்கள் சக்ரவர்த்தி, தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட மக்களை இங்கு தருவிக்கத் தங்களால் இயலும். ஆனால் அது முறையன்று, அவ்விதம் மக்கள் கட்டாய அழைப்பில் வந்து தர்ம போதனையைக் கேட்பதில் பலனேற்படாது! நான் ஊரூராகச் சென்று எனது மார்க்கத்தைப் பரப்புவதே உசிதமானது. எனது இந்த முடிவு ஊர்ஜிதமானது. தந்தையே வீணாக என்னைத் தடுக்காதீர்கள்'' என்று பணிவோடு வேண்டினார் கௌதமர்.

சுத்தோதனருடைய கடைசி முயற்சியும் இடிந்தது! பிக்ஷுவாகவாவது தமது அருகில் மகன் இருக்க வேண்டும் என்று பிரயத்தனம் செய்த அவர் தமது தோல்வியின் அதிர்ச்சியில் தாக்குண்டு, தைரியமிழந்தவராக, ''மகனே, கிழத்தந்தையைத் தவிக்கவிட்டு விட்டு மக்களை உய்விக்க என்று தவம் பூண்டு வெளியேறத் துணிந்துவிட்டாய். கடைசியாக உன்னிடம் ஒரு வரம் யாசிக்கிறேன்''

சட்டென்று காதுகளைப் பொத்திக்கொண்டார் கௌதமர். தீவிர மன உறுதியைக்கூட பிதுர் வாஞ்சை சோதிக்க முற்பட்டது! மனக்கலக்கத்திற்கு இடம் கொடுக்கக்கூடாதென்று சிரமப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டு, ''பிதா தங்களுக்கு என்ன வேண்டும்?'' என்றார்.

''ஒன்றும் அதிகமில்லை. உனது பௌத்த தர்ம ஆசரணையில், 'பௌத்த பிக்ஷுவாக விரும்புபவன், தனது தகப்பன் முன்னிலையில் பௌத்தமத போதகர் முன்பு பிக்ஷுவாக வேண்டும்' என்ற நிபந்தனையை முதல் பகுதியாக வைக்க வேண்டும். நான் படும் இந்த சோகம் என்னோடு மட்டும் இருக்கட்டும். என் குடி மக்களுக்கும் இத்துயர் வேண்டாம்...''

பகவான் சிறிது யோசித்து விட்டு ''தந்தையே அவ்விதமே ஆகட்டும். தங்கள் விருப்பப்படியே 'தகப்பனருடைய சம்மதத்தின் மீதுதான் ஒருவன் பிக்ஷுவாகலாம்' என்ற நியதியை முதல் கோட்பாடாக நிறுவுகிறேன். எனக்கு அனுமதி தாருங்கள்...'' என்று கேட்டார் கௌதமர்.

மறுநாள் உதயத்தில் சகோதரர்களான அனந்தனும் தேவதத்தனும் அவரைப் பின்பற்றி சீடராகி அங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள்.

தந்தைக்கும், மகனுக்கும் நடந்த இந்த வாதம் யசோதரைக்கும் தெரிவிக்கப் பட்டது.

பிக்ஷுவாக, பிக்ஷான்னத்தை புசித்துக் கொண்டாவது அரண்மனையில் இனி இருப்பாரென்று

எண்ணி இருந்த அவளுடைய ஆறு தலிலும் இடி விழுந்தது. செய்தியைக் கேட்டதும் மயக்கம் போட்டு கீழே சாய்ந்தாள் யசோதரை.

மறுபடி மூர்ச்சை தெளிந்து அவள் கண் விழிக்கும்போது பகவான் நகரத்தை விட்டு வெளியேறுவதாகச் செய்தி கிடைத்தது. ஆ, வென்று கூவிவிட்டு இடத்தை விட்டு எழுந்தாள். "அப்பனே ராகுலா, ஓடிவா, உன் தந்தையைப் பார்ப்போம்" என்று அங்கு விளையாடிக் கொண்டிருந்த ராகுலனைக் கை பிடித்து வலித்துக் கொண்டு அந்தப்புரத்தை விட்டு வீதி வழியாக ஓடத்தொடங்கினாள்.

வீதியில் நின்று அவர் வரும் திசையை விசாரித்தாள். அது தெரிந்ததும் எதிர்கொள்ளும் பாதையைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அங்கே போய் நின்றாள் சற்று நேரத்திற்கெல்லாம் பிக்ஷுக்களின் கூட்டமொன்று வருவதை யசோதரையும், ராகுலனும் கண்டார்கள். அரண்மனையிலிருந்து வெளிப்பட்டது முதல் "அப்பா எங்கே, எங்கே?" என்று நச்சரித்தபடியே இருந்த ராகுலன், அந்த துறவிக் கூட்டத்தைக் கண்டதும் யசோதரையின் உடல் நடு நடுங்குவதைக் கண்டு அவன் பயந்து நின்றான்.

கூட்டம் யசோதரை நின்ற இடத்திற்கு வந்து விட்டது. கூட்டத்தின் நடுவில் ஒளி உருவமாகத் திகழ்ந்து கொண்டு சிம்மம் போன்ற ராஜ கம்பீர நடையுடன் வரும் புத்ததேவனை நன்றாகப் பார்க்க வேண்டும் என்று உற்று பார்க்கப் பார்க்க கண்கள் பூத்து, பார்வை மங்கிற்றே தவிர அவரை கண்குளிரக் காணமுடியவில்லை அவளுக்கு.

"ஏன் அம்மா, என்ன அப்படிப் பார்க்கிறாய்? யாரையம்மா பார்க்கிறாய்?" என்று திகைப்புடன் கேட்டான் ராகுலன்.

"அப்பா, என்செல்வமே, உன்னைப் பெற்ற தகப்பனாரைத் தானடா......"

"தகப்பனாரா? யார் அம்மா அது?"

அவன் இவ்வாறு கேட்ட பிறகு தான் தந்தையைக் காண்பிக்க வென்று வந்தது, நினைவுக்கு வந்தது. "அதுவா — அதோ பார்! கூட்டத்தின் நடுவில் நிமிர்ந்த நடையுடன் சிம்மம்போல வருகிறாரே; அவர்தான் உன் பிதா — உன்னைப் பெற்றவர் — போ, ஓடு! போய் அவரிடம் நின்று 'பிதுரார்ஜிதம் கேட்டு வாங்கிவா!" என்று அனுப்பினாள்.

ஓடினான் ராகுலன். ஓடிச் சென்று கூட்டத்திடையில் சென்று கொண்டிருக்கும் கௌதம புத்தருடைய வஸ்திரத்தின் நுனியைக் கையில் பற்றிக் கொண்டு "தந்தையே, பிதுரார்ஜிதம் வேண்டும் எனக்கு" என்று கேட்டான்; அப்படியென்றால் என்னவென்றே தெரியாத குழந்தையான ராகுலன்.

பிதா நின்றார். பக்கத்திலிருந்த அனந்தனை அழைத்து "இவனுக்கு பிதுரார்ஜிதம் கொடு!" என்றார்.

"பிதுரார்ஜிதம் கொடுப்பதா இப்பாலனுக்கு!"

"கொடு" என்று ஒரே வார்த்தை சொன்னார் போதிஸத்துவன்

மறு விநாடி காவி உடை தரப்பட்டது ராகுலனுக்கு! அனுப்பிய

தாயை மறந்து விட்டவனுக கூட்டத்தோடு நடந்து சென்ருன் ராகுலன்.

"ஆஹா, என் மகனுமா என்னைத் துறந்தான்" என்று அலறிய யசோதரை, பகவான் புத்த தேவருடைய மறு தின யாத்திரையில் பிக்ஷுணியாகி உடன் சென்று கொண்டிருந்தாள்.

அஹிம்ஸா மூர்த்தியான புத்தன் எண்பதாவது வயது வரை தர்ம போதனை செய்து நிர்வாண மடைந்த பின்பு, அவருடைய சீடர்கள் திசைகள் தோறும் சென்று புத்தருடைய மேலான தர்மத்தையும், அந்த தர்ம போதனைக்கான இடங்கள் பௌத்த சங்கம் என்பதையும் எடுத்துச் சொல்லி தேவனுடைய மார்க்கத்தை ஸ்தாபிக்க முற்பட்டார்கள்.

புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி சங்கம் சரணம் கச்சாமி! என்று ஒலித்தது நாடெங்கும்!






வரப்பெற்றோம்:

அஜந்தா (புத்தகத் தொடர்) முதல் புத்தகம்; ஆசிரியர்: கே. ஸ்ரீ. ராமநாத் பிரசுரம், ராயப் பேட்டை ஹைரோட், சென்னை 14; விலை: 1—0—0.

●

ஒளி (முதற் கதிர்); பதிப்பாசிரியர்: பண்டித வித்வான் ந. ரா. சுந்தர ராசன்; வெளியீடு: திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தினர், 83, ஜோன்ஸ் ரோடு சைதாப் பேட்டை, சென்னை 15. விலை: 0—8—0.

●

மகாத்மாவின் மாணவர்; ஆசிரியர்; எம். சரஸ்வதி; பிரசுரம்: பேபி புக் பீரோ' 23, 24 ராமசாமி தெரு, மண்ணடி, ஜி. டி. சென்னை; விலை: 0—3—0.

●

இருபா இருபஃது; ஆசிரியர்; ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார்; தருமபுர ஆதீன வெளியீடு;

●

மனோரதம். ஆசிரியர்: கே. ஸ்ரீ; பிரசுரம்: பேசும் படம் வெளியீடு; பேசும் படம் காரியாலயம், சென்னை 14; விலை: 1—4—0.

●

[மாதமணி: ஆசிரியர் டி. சி. ராமசாமி. ஓல்டு போஸ்டாபீஸ் ரோடு கோயமுத்தூர். விலை அணா 0—8—0.]

இந்தப் புது மாதப் பத்திரிகை சமீபத்தில் தோன்றியுள்ள புதுப் பத்திரிகைகளில் குறிப்பிடத் தக்கது. பத்திரிகையைக் கையில் எடுத்ததும், முகப்பு நம்மைக் கவர்கிறது. மேலட்டை தனி ரகம். உள் பக்கங்களில் பிரபல ஆசிரியர்களின், கதை, கட்டுரை, கவிதைகள் காணப்படுகின்றன. சினிமாப் பகுதியும் சேர்ந்திருக்கிறது. நாவல் பகுதியும் நிறைந்திருப்பது மகிழ்ச்சிக்குறிய அம்சம். அதுவும், சமீபத்தில் வெளிவந்த நல்ல நாவல்களில் ஒன்றான "வாழ்க்கைச் சுழல்" நாவலின் ஆசிரியர் ஏ. ஷண்முகம் அவர்களே "குங்கும அலங்காரி" என்னும் தொடர்கதையைச் சித்தரித்திருக்கிறார். கதைப் பிரியர்களுக்கு திருப்தி அளிக்கும் முறையில் சுவாரஸ்யமாகக் கதை செல்லுகிறது. இந்தப் புதுப் பத்திரிகைக்கு தக்க ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# காதலுக்குப் பின்...

அ. சிங்காரவேலு

அழகான காலை நேரத்தில் யாரும் சந்தோஷமில்லாதிருப்ப தென்பது முடியாத விஷயந்தான். அவளைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள். எட்னு தனக்குள் தீர்மானித்தாள். வீடுகளில் ஜன்னல் கதவுகள் விரியத் திறந்தபடி கிடந்தன; அதிலிருந்து 'பியோனு' வாத்தியங்களின் சத்தமும், சிறு விரல்கள் மாறி, மாறி வாசிக்கும் பொழுது உண்டாகும் சிறு சத்தமும் வந்து கொண்டிருந்தது. மரங்கள் தளிர்த்து, மலர்கள் மலர்ந்து, உதயத்தைக் கண்டு ஆனந்தித்தாடின. சிறு பையன்கள் கத்திக் கொண்டு தெருவோடே ஓடிக் கொண்டு இருந்தார்கள். நாய்க் குட்டி யொன்று குலைத்துக் கொண்டிருந்தது. ஜனங்கள் வேகமாயும், மெதுவாயும் போய்க் கொண்டும், வந்து கொண்டுமிருந்தார்கள். கொஞ்ச தூரத்திலே, பெண்மணி யொருத்தி சிறு குடை யொன்றைப் பிடித்துக்கொண்டு வருவதை — அவள் இப்பொழுதுதான் — அந்த வருடத்தின் முதன் முதலாக, பெண்ணின் சிறு குடை யொன்றை அவள் கண்ணால் கண்டாள்.

எட்னுவும், அவள் நினைத்தபடி அவ்வளவு துக்கமாயும் காணப் படவில்லை. அந்தப் பதினெட்டு வயதில், அவள் நல்ல ஆரோக்கியத்தோடிருக்கும் பொழுது, அழகிய கன்னங்களும், உதடுகளும்' பிரகாசிக்கும் கண்களும் அப்படி ஓர் சோகமாக அவளைக் காட்டுவதென்பது சுலபமானதல்ல. அதையும் தவிர, அவள் பிரெஞ்சு நீல உடையும், பூவேலை செய்த வஸந்த குல்லாயும் தரித்திருக்கும் போது? உண்மை. அவள் கையில் கருப்புத் தோல் பைண்டு செய்யப்பட்ட புஸ்தகம் ஒன்று கொண்டு வந்தாள். அதில், ஒருவேளை, துக்ககரமான சம்பவங்களின் குறிப்புகள் குறிக்கப் பட்டிருக்கலாம். சாதாரண லைப்ரரி புத்தக பைண்டிங்கைப் போல்தான் இருந்தது அதற்கும். அவளைப் பற்றிய வரையில், அவள் லைப்ரரிக்குச் செல்வது வீட்டை விட்டுப் பிரிந்து போய்ச் சற்று மனச் சாந்தி பெறுவதற்கும், நடந்ததையும் நடக்க வேண்டியதைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பதற்குமே.

ஓர் பயங்கர சம்பவம் நிகழ்ந்து விட்டது. அதுவும் திடீரென்று. முதல் நாள் இரவு ஜிம்மியும், அவளும் தியேட்டரில் அக்கம் பக்கமாய் உட்கார்ந்திருந்த பொழுது, உண்மையில் கொஞ்சமும் முன் எச்சரிக்கை யில்லாதபடி, 'சாக்லெட்' மிட்டாயை அவள் தின்று விட்டு, பெட்டியை மீண்டும் அவனிடம் கொடுத்தாள்-அவளுக்கு ஓர் நடிகன் பேரில் காதல் ஏற்பட்டு விட்டது.

அந்தக் காதல் உணர்ச்சி எப்படி யிருக்குமென்பதைக்கூட அவள் அதற்கு முன் மனதில் கூட எண்ணிப் பார்த்ததே இல்லை. அது பயங்கரமான ஓர் கொடிய வேதனையைப் போன்றிருந்தது. அதைச் சொல்ல வேண்டுமாயின், துக்கம், சோர்வு, பயம், சஞ்சலம்,

வெறுப்பு ஆகியவற்றில் நினைக்க முடியாத ஓர் பயங்கர மன நிகழ்ச்சி ஏற்பட்டால் எப்படியிருக்குமோ அதே போன்ற ஓர் உணர்ச்சிப் பிரவாகம். ஓர் தாபம்! அந்த நடிகன் அவளை அதே இடத்தில் சந்திப்பினும் சரி, அவள் அவனேடேயே, உலகத்தின் அந்தக் கடைசி வரை, எல்லையற்ற ஓர் இறுதி வரை, அவள் தந்தையைப் பற்றியோ, தாயைப் பற்றியோ, ஜிம்மியைப் பற்றியோ, அல்லது அவள் இன்ப இல்லத்தைப் பற்றியோ, எண்ணற்ற சிநேகிதர்களைப் பற்றியோ மீண்டும் நினைக்கக் கூட இல்லாதபடி போய் விடுவாள்.

நாடகம் அழகுடனும், மகிழ்ச்சியுடனும் ஆரம்பமானது. அதிலே சாக்லெட் சூல்மாண்ட் கட்டம். அதன் பின் அந்த நடிகன் குருடாகி விடுகிறுன். மிகக் கொடிய சம்பவம்! எட்னு கத்திக் கதறி விட்டாள். ஜிம்மியின் கைக் குட்டையை எடுத்து முகத்தையே மூடிக் கொண்டாள். அதுமட்டுமல்ல அங்கே வரிசைகளில் வீற்றிருந்த அத்தனை பேருமே கண்ணீரில் மூழ்கி விட்டார்கள். அவர்கள் கூட அந்தக் கட்டத்தைப் பார்த்த போது அலறி சத்தம் போட்டு விட்டார்கள். ஜிம்மி உலர்ந்த கண்களுடனும், இரக்கத்துடனும் கைக் குட்டையில்லாவிடில் அவள் என்ன செய்வாள்? என்றெண்ணியபடி, அவளை ஒரு கையால் பிடித்து, பெண்ணே அழாதே! என ஆறுதல் கூறினன். அதன் பின் அவள் கடைசி சாக்லெட்டை எடுத்து அவனைத் திருப்தி செய்விக்க அவனிடம் பெட்டியைக் கொடுத்தாள். மீண்டும் அங்கே அந்தக் கொடிய காட்சி. காதலன் மேடையில் தனியே, மங்கிய ஒளியில், அறையிலிருந்து வெளியே வருகிறுன்; வெளியே பாண்டு வாத்தியம் முழங்குகிறது; அவன் ஜன்னலண்டை போவதற்கு, அவன் முயல்கிறுன்; எவ்வளவு துயரம். எத்தகைய பரிதபிக்கத்தக்க நிலைமை! ஆஹா! அவன் கடைசியில் தெருவுக்குப் போய் விடுகிறுன். அங்கே தட்டியைப் பிடித்துக் கொண்டு, அவன் சோபையற்ற முகத்தில் ஒளிக் கிரணங்கள் வீச, அவன் நிற்கின்றுன்; பாண்டு சப்தம் தொலைவில் மறைந்து விடுகிறது.


அது எப்படி—உண்மையாக—நிஜமாகவா? ஆனுல் அவளுக்கு வாழ்க்கை அப்படி ஒரு போதும் இருக்க முடியாதென்று தெரியும். ஜிம்மியிடமிருந்த தன் கையையெடுத்துப் பின்னல் சாய்த்துக் கொண்டு சாக்லெட் பெட்டியை மூடி விட்டாள்.

எட்னுவும், ஜிம்மியும் சம்பந்தம் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒன்றரை வருட காலமாக சேர்ந்தே இருக்கின்றுர்கள். இருவருமாய் சேர்ந்து கொண்டு பாட்டனிக்கல் தோட்டங்களுக்குச் சென்று, பசும் புல் தரையில் உட்கார்ந்து கொண்டு ஒயினும், டீயும், பிஸ்கத்தும் சேர்ந்தாற் போல் சாப்பிடுவதைக் கண்ட எல்லோருக்குமே, அவர்கள் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளப் போகின்றுர்கள் என்பது தெரியும். அவள் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்த போதெல்லாம் கூட அவள் கையில் ஓர் மோதிரம் அணிந்து வந்திருந்தாள். அது முதல் இதுவரை, ஒருவருக் கொருவர் சத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனல் அது இப்பொழுது இல்லை. அது முற்றிலும் மாறிப்

போய் விட்டது. ஜிம்மி அதை உணர்ந்து பார்த்திருப்பானென்று நம்புவதே அவளுக்கு கஷ்டமாக இருந்தது. அவள் கன்னிமடத் தோட்டத்திற்குள் திரும்பிய போது, துக்கமாயும், சாதுர்யமாயும் அவள் சிரித்தாள். கல்யா

வரக் கூடும். இல்லை, அவள் தன்னையே ஏமாற்றிக் கொள்வதால் என்ன பிரயோஜனம்; அவன் அங்கே வரமாட்டான். அவன் வாழ்க்கை சஞ்சலமானது; அழிந்தது; அதை நிவர்த்திக்க முடியாது ஆனல் அவன் இளமையில்,



ணம் ஆகும்வரை காத்திருந்துத் தெரிந்து கொள்வதைவிட, இப்போதே தெரிந்து கொள்வது எவ்வளவு நல்லதாகும்! அவன் இப்போழுது அங்கே வந்தாலும்

காலம் சற்று மாறுதலைச் செய்யும், ஓர் சின்ன மாறுதலேனும். நாற்பது வருடத்தில், அவன் வயதானவனகி விட்டான்; அவன் அவளைப் பற்றி ஒரு வேளை அமைதி

யாக நினைத்துப் பார்க்க முடியும். ஆனால் அவள் - அவள் எதிர் காலம்?......

எட்னா அந்தப் பாதை வழியே கடைசிக்குச் சென்று விட்டாள். அங்கே மரங்கள் செந்தளிர் விட்டு, வெண்ணிற புஷ்பங்கள் கொத்துக் கொத்தாய் பூத்துத் தொங்கின. அவள் ஓர் பச்சைப் பலகையின் மேல் உட்கார்ந்துகொண்டு அந்தப் பூங்காவனத்தை பார்த்துக் கொண்டிருந்தாள். கன்னிமாடப் புறுக்கள் ஆகாசத்தில் உயர சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன; சகோதரி எக்னெஸின் பாட்டுக் குரல் கேட்டது; அவள் சங்கீதப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆ! என்ன, என்ற கன்னிப் பெண்களின் குரல்கள் ஒலித்தன; ஆ! என்ன, என்ற எதிரொலி கேட்டது.

அவள் ஜிம்மியை விவாகம் செய்து கொள்ளாவிடில், உண்மையில் அவள் வேறு யாரையுமே விவாகம் செய்து கொள்ள மாட்டாள். அவள் காதலிக்கும் அந்த மனிதன், அந்தப் பிரபல நடிகன்—எட்னா அப்படியாக இருக்க முடிதென்று அவள் பொதுவாக நினைக்கவில்லை. அவ்வளவு விபரீதமாக இருந்தது. அவள் அப்படியிருக்க வேண்டுமென்று விரும்பியதுகூட இல்லை. அவள் காதல் அவ்வளவு விபரீதமாயிருந்தது. அது அவளை மௌனமாகவே வதைத்து வேதனைப் படுத்திவிடும். அதுதான் அத்தகைய ஓர் காதலாக இருக்க வேண்டுமென்று அவள் நினைத்துக் கொண்டாள்.

"ஆனல், எட்னா! நீ ஒரு போதும் மாற மாட்டாயா? உன்னை நான் மீண்டும் நினைப்பதற்கில்லையா?" என்றான் ஜிம்மி.

ஆ, அதைச் சொல்வதில் எவ்வளவு துக்கமிருந்த போதிலும் அதைச் சொல்லியேயாக வேண்டும். "இல்லை ஜிம்மி, ஒருக்காலும் மாறப் போவதில்லை."

எட்னா தன் தலையைத் தாழ்த்தினாள். சிறு மலர் ஒன்று அவள் மடியில் வீழ்ந்தது. அதே கணம் சகோதரி எகனெஸின் குரல் ஒலிக்கலாயிற்று. 'ஆ! இல்லையா! என.' அதே எதிரொலி எழும்பிற்று ஆ! இல்லையா என......

அப்பொழுது அவள் எதிர் காலத்தைப் பற்றிய நினைவுகள் அவள் மனக் கண்களில் உருவெடுக்கலாயிற்று. எட்னா அவற்றையெல்லாம் பார்த்தாள். அது அவள் மூச்சையே பறித்து விடும் போல் இருந்தது. அவள் பிரமித்துப் போனாள். ஆனல் எல்லாவற்றிற்கும் பின், அப்படியே எதுதான் இயற்கையாய் இருக்க முடியும்? அவள் கன்னி மடத்திற்கு போக வேண்டியவள்...... அவள் தந்தையும், தாயும் ஏதேனும் புத்தி சொல்லி அவளை மறித்து தடுத்து வீணாக்கி விடுவார்கள். ஜிம்மி, அவன் நினைத்து ஏங்கிக் கொண்டிருக்க வேண்டியவன். அவர்கள் இன்னும் அவள் மனதை புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் அவளுக்கு மேலும், மேலும் கஷ்டத்தையே கொடுக்கின்றார்கள். உலகமே கொடுமையானது. மிகப் பயங்கர கொடுமை வாய்ந்தது! அந்தக் கடைசிக் காட்சிக்குப் பின்னாகிலும், அவள் ஆஸ்தி ஆபரணங்கள் எல்லாவற்றையும் அவளுக்கு வேண்டிய நண்பர்களுக்கு கொடுக்கும் போது, அவர்கள் சபல சித்தம் படைத்தவர்கள் - அவள் ரொம்ப அமைதியாக, அவள் கன்னிமடம் போய்

விடுகிருள். இல்லை, ஓர் கணம். அவள் போகும் அன்று மாலை, அந்த நடிகனது கடைசி மாலையாகும். போர்ட் வில்லினில், அவனுக்கு ஓர் பெட்டி கிடைக்கிறது. அதில் நிறைய வெள்ளைப் புஷ்பங்கள். ஆனல் அதில் பெயருமில்லை, விலாசம் போட்ட சீட்டுமில்லை. ஆனல் ரோஜா மலர்களின் அடியில், வெள்ளைக் கைக்குட்டையில் சுற்றப்பட்டு, எட்னவின் கடைசிப் புகைப் படம் கீழ்கண்ட விலாசத்துடன் இருக்கின்றது :

"உலகத்தை மறக்க, உலகம் மறக்கும்."

எட்ன அந்த மரங்களடியில் உட்கார்ந்திருந்தாள் ; அவளது கை விரல்களில் அந்த வேத நூல் இருந்தது. சகோதரி அன்ஜெலாவின் நாமத்தை உச்சரித்தாள். அழகு குலைகிறது ! அவளது அழகிய தலை முடியெல்லாம் வெட்டப்படுகின்றன. அவள் தன் சுருண்ட தலைமயிர் ஒன்றை ஜிம்மிக்கு அனுப்புவாளா? அது எப்படியோ அவளுக்கு தோன்றிவிட்டது. நீல அங்கி அணிந்து வெள்ளைத் தலை முக்காட்டுடன், சகோதரி அஞ்செலா கன்னிமடத்திலிருந்து தேவாலயத்திற்குச் செல்கிருள்; தேவாலயத்திலிருந்து திருப்பி அங்கே வருகிருள். அவளைப் பின்பற்றி ஓடும் சிறு குழந்தைகளை ஆசீர்வதிக்கின்ருள். அவளது பார்வையிலும், துயரம் தோய்ந்த கண்களிலும், அவளது இனிய புன்முறுவலிலும் ஏதோ அற்புதம் திகழ்கின்றது. ஓர் தீர்க்கதரிசி ! அந்தக் கடுங்குளிரிலும், மொழுகுவர்த்தி ஜ்வாலையிலும், பிரகாசம் பொருந்திய கோயிலுள்ளும் அவள் நடக்கும் பொழுது அதைப்பற்றி முணகுவதை அவள் காதில் கேட்கின்ருள். ஓர் தீர்க்கதரிசி ! அந்தக் கன்னிப் பெண்ணைப்பற்றி, அவளது இளமையைப்பற்றி, அவளது அழகைப்பற்றி, அவளது துயரக் காதலைப்பற்றி, அவளது முடிவைப்பற்றி அங்குள்ளவர்களுக்குச் சொல்லப்படுகிறது: "வாழ்வில் வீணய்ப் போன ஒருவன், அங்கே அந்த நகரத்தில் இருக்கின்ருன் என்றும்."

பெரிய தேனீ ஒன்று பனியில் உறைந்து போகவும், அந்த நுண்ணிய மலர் அதன் மேல் சாய்ந்து, ஆடி அசைந்து விட்டது. தேனீ பறந்து செல்லவும், அது சிரிப்பதைப்போல் ஆடலாயிற்று. அசட்டையான அந்தப் புஷ்பத்திற்கு சந்தோஷம் !

சகோதரி என்ஜெலா அதைப் பார்த்துவிட்டு "இப்பொழுது மாரி காலம்" என்ருள். ஓர் இரவு, அவள் அறைக்குள் படுத்துக்கொண்டிருந்த பொழுது, ஓர் சத்தத்தைக் கேட்டாள். அந்தத் தோட்டத்தில் ஏதோ ஓர் பிராணி, பூனைக் குட்டியாகவோ அல்லது ஆட்டுக் குட்டியாகவோ இருக்க வேண்டும். அந்தச் சத்தம் அவள் தூக்கத்தைக் கலைத்து அவளை எழுப்பி விட்டது. அவள் பயமில்லாதபடி எழுந்து போய் அதனை உள்ளே எடுத்துச் சென்ருள். ஆனல் மறுநாள் காலை பூஜைக்கு மணியடித்த பொழுது, அவள் ஜுர மிகுதியால்—சித்தப் பிரமையால்—பிதற்றிக் கொண்டிருந்தாள்...... அவள் குணமடையவில்லை. அவள் கதை மூன்றே நாளில் முடிந்து போய் விட்டது. அந்த தேவாலயத்தில் அவளுக்குச் சடங்குகள் நடத்தி, ஆச்ரமக் கன்னிப் பெண்களுக்கென்றுள்ள

கல்லறைச் சதுக்கத்தில் அவளை அடக்கம் செய்து அதிலே சிலுவையை நாட்டினார்கள். எல்லாம் சாந்தியானது. சகோதரி என்ஜெலா......

அப்பொழுது அது மாலை நேரம். இரண்டு பேர் மெதுவாது நடந்து சென்று அந்தக் கல்லறைக்குப் பக்கத்தில் போய் முழந்தாளிட்டு அழுதார்கள். "எங்கள் மகள்! எங்களின் ஏக புத்தரி!" இப்பொழுது அங்கே மற்றும் ஒருவன். கறுப்பு உடை தரித்து அவன் மெதுவாக வந்தான். அங்கே வந்ததுமவன் தன் கறுப்புக் குல்லாவை எடுத்தான்; எட்னு நடுக்கத்துடன் பார்க்கிருள். அவன் தலை மயிர் நரைத்து வெள்ளை வெளேரென்று இருந்தது. ஜிம்மி! காலங் கடந்து விட்டது, ரொம்ப காலமாகி விட்டது! அவன் முகத்தில் கண்ணீர் வழிந்தோடுகிறது; அவன் அழுகிருன். காலம் தவழ்ந்து விட்டது! தேவாலயத்தின் வெளிப்புறமுள்ள இலையற்ற மரங்கள் அசைந்தாடுகின்றன; அவன் ஓங்கிக் கத்தி அலறுகிருன்.

எட்னுவின் கறுப்புப் புத்தகம் கீழே அந்தப் பாதையிலே விழுகின்றது. அவள் குதித்தாள்; அவள் இதயம் துடித்தது. என் அருமைக் காதலி இல்லை. இன்னும் காலம் தாழ்ந்து விடவில்லை. அதெல்லாமே தவறு, ஓர் பயங்கரக் கனவேதான். ஆனல் அந்த வெள்ளைத் தலை மயிர்! அவள் அதை எப்படிச் செய்திருக்க முடியும்? அவள் அதைச் செய்யவில்லை. அட ஆண்டவா! என்ன சந்தோஷம்! அவள் இளமையாயும், கபட மற்றும் இருக்கிருள். ஆனல் அவள் இரகசியம் ஒருவருக்கும் தெரியாது. எல்லாம் அவளுக்கும், ஜிம்மிக்கும் சாத்தியமான காரியங்கள்தான். அவர்கள் திட்டமிட்ட அந்த வீடு கட்டப்பட வேண்டும்; அவர்கள் தோளில் ஏறித் தோட்டத்தில் மலரும் அந்த ரோஜா மலர்களைப் பார்க்க ஓர் குழந்தை பிறந்தாக வேண்டும்; அவனுக்கு ஓர் தங்கை பிறக்க வேண்டும்...... ஆனல், எட்னு அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்ததும், காதல் அந்தக் காற்று வாக்கிலே பறந்து வருவதைப் பிடிப்பதைப் போன்று தன் கைகளை நீட்டிப் பிடிப்பாள்; தோட்டத்தைப் பார்ப்பாள்; மரங்களிலிருக்கும் வெண்பனித் திரையைப் பார்ப்பாள்; நீல வானத்தோடு ஒட்டிப் பறக்கும் மாடப் புருக்களைப் பார்ப்பாள்; அந்தக் கன்னி மாடத்தின் சிறிய ஜன்னல்கள் வழியாக. அவள் இப்பொழுது உணர ஆரம்பித்தாள், அவள் வாழ்க்கையில் முதன் முதலாக—அவள் அது போன்ற ஓர் உணர்ச்சியை மனதால் எண்ணியது கூட இல்லை. அவள் காதலைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டு, விட்டாள், ஆனல்...... காதலில்!

[காதரைன் மான்ஸ் பீல்ட் எழுதியது.]

★

# மல்லிகை

"தேவிகா"

ஆருயிர் நண்ப,

அன்று ஒரு நாள். நாமிருவரும் பூக்கடையில் பூக்கள் வாங்கும் பொழுது "எனக்கு மல்லிகை மீதுதான் அதிக ஆசை" என்று சொன்னாய்.

"சண்பகம், முல்லை, இருவாட்சி, ரோஜா, மனோரஞ்சிதம் முதலிய நானாவிதப் புஷ்பங்களிருக்க மல்லிகையின் மீது மட்டும் அவ்வளவு ஆசை ஏற்படக்காரணமென்ன?" என்று கேட்டேன்.

"மல்லிகையைக் காணும் பொழுது என் வாழ்க்கையில் நடந்த ஒரு இனிய நிகழ்ச்சியின் இன்ப நினைவு எழுகிறது. வாழ்வில் நாம் வேண்டுவ தென்ன? இன்பந்தான். ஆக, இன்பம் தரும் பொருள்கள் மீது — மல்லிகை இன்பந் தருகிறது — பற்றுதல் அதிகமாயிருப்பது இயல்பு" என்று பதிலளித்தாய்.

"இன்ப நினைவுக்குக் காரணமாயிருக்கும் அந்த இனிய நிகழ்ச்சி யென்ன?" என்றுடேன்.

"சொல்வதற்கு இது சந்தர்ப்பமல்ல. ஊருக்குப் போனதும் எழுதுகிறேன்" என்றாய்.

இதுவரை அதைப் பற்றிக் கடிதமேயில்லை! ஹூம், எப்பவோ எழுதி அனுப்பு!!

உனக்கு இன்பமளிக்கும் மல்லிகை எனக்குத் துன்ப நினைவுகளைக் கிளப்பும் ஒரு சோக சம்பவத்தைப் பற்றி ஞாபகமூட்டுகிறது. என்னுடன் கலாசாலையில் ஒரு நண்பர் படித்துக் கொண்டிருந்தார். அவர் பெயர் சிவராஜ். அலையைப்போல் நெளிந்திருக்கும் அழகிய கிராப்பு. பரந்த நெற்றி. நீண்ட புருவங்கள். சாந்தமும் கவர்ச்சியும் நிறைந்த கண்கள். அவற்றை அழகு படுத்தும் தங்க பிரேம் போடப்பட்ட அழகிய மூக்குக் கண்ணாடி, அகன்ற மார்பு, அதற்கேற்ற உயரம், எடுப்பான நடை, வெண்கலக் குரல் இவ்வளவும் வாய்க்கப் பெற்ற அவர் ஒரு கவி. தமிழ் அவருடைய தாய் பாஷைதான். எனினும், தமிழில் அவருக்குக் கவிதைகள் எழுதத் தெரியாது!

அன்னிய மொழியான ஆங்கிலத்தில் கருத்தும் இசையும் நிறைந்த பாட்டுக்கள் புனைவதில் கைதேர்ந்தவர். அவர் பாட்டு இயற்றும் விதமே அலாதி. சிலர் மதுவின் துணையினாலும், வேறு சிலர் சிகரெட்டின் உதவியாலும், மற்றும் சிலர் காப்பியின் தூண்டுதலாலும், இன்னும் சிலர் கஞ்சாவின் அனுக்கிரகத்தாலும் கவிதைகள் புனைவதுண்டு எனக் கேட்டிருக்கிறேன்; படித்திருக்கிறேன். இவருக்கோ அவைகள் ஒன்றும் தேவையில்லை; மல்லிகைப் புஷ்பம் தான் வேண்டும். ஒன்றல்ல; ஒரு மாலையல்ல; நிறைய விடு பூக்கள் வேண்டும்!

அந்த விடு பூக்களைத் தன்னுடைய வெல்வெட் மெத்தை மீது தூவிப் படுத்துத் தூங்குவார்.

விடிந்ததும் பற்களைத் துலக்கக் கூட மாட்டார். கலைந்திருக்கும் கிராப்பையும், 'நைட் டிரஸ்ஸை யும்' சரிப் படுத்திக் கொண்டு, என்னையும் இன்னும் சில நண்பர் களையும் வட்டமாக உட்கார வைத்து அன்றிரவு தன் இதயத் தில் பொங்கிய கவிதையை இசை யோடு பாடுவார். அவருடைய பாட்டில் இன்பமோ, துன்பமோ எது பிரதானமாயிருந்தாலும் சரி, நாங்களும் அப்படியே மாறி விடு வோம். அவ்வளவு அற்புதமான கவிதைகள். "அவைகளை ஒரு புத்தகமாக வெளியிட்டால் ஆங் கில இலக்கியத்திற்குச் சிறந்த தொண்டு புரிவதுடன், பேரும் புகழும் கிடைக்கும்" என்று யோசனை கூறினேம்; வற்புறுத்தி னேம்.

"பேருக்கும் புகழுக்கும் நான் கவிதைகள் இயற்றுவதில்லை; என் னுடைய ஆத்ம திருப்திக்காகவே" என்று எங்கள் யோசனையை நிரா கரித்து விட்டார்! இதனல், எங் களுக்குள் உள்ளூர வருத்தம் ஏற் பட்ட போதிலும், நட்பு முறை யில் மாறுதல் எதுவும் ஏற்பட வில்லை.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் இறுதிப் பரீட்சையை எழுதிவிட்டு அவரவர் ஊருக்குப் போய் விட் டோம். கடிதப் போக்கு வரவு மட்டும் நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் அவரிடமிருந்து வந்த கடிதத்தில் "இத்தனை நாளும் எந் தக் கவிதைப் பெண்ணை மனதில் எண்ணி எண்ணிக் கவிமலர்கள் புனைந்து கொண்டிருந்தேனே அந் தக் கன்னிகை இயற்கையோடு இணைந்து விட்டாள். ஆதலால், என் உள்ளத்தில் இனிப் பூப்ப தற்குப் புதுமையில்லை" என்று எழுதியிருந்தார்.

காதலியை இரக்கமற்ற கால தேவனின் சுடும் கரங்கள் தீண்டி விட்டன. நதியருகே ஒரு மல்லி கைப் பூப்பந்தலின் கீழ் அவள் முடிவற்ற துயிலில் ஆழ்ந்து விட் டாள். அந்தக் "கடைசி" ஏற் பாட்டையும் நண்பன் கவித்துவ மாகவே செய்திருந்தான்.

நானும் அங்கு போயிருந்தேன். ஒரு அழகான சின்னஞ்சிறு குடி சையிலே அருகே வாழ்க்கையைக் கழித்து வருகிறன். என்னைக் கண்டதும் "வா அப்பா" என்று பரிவோடு அன்பு ததும்பச் சொன் னன். இதயத்தின் ஆழத்துச் சோகத்தை முகக் கோடுகள் காட் டின. பூத்திருந்த மல்லிகைச் செடி மலர்களைக் குலுக்கி வர வேற்றது.

என்னைச் சமாதானப் படுத்து வதற்காக இரவு நதி மணலில் படுத்திருக்கும்போது "இனி மேல் தமிழிலே பாட்டு எழுது கிறேன். ஆனல் என் படுக்கை இனி மலர்ப்படுக்கை அல்ல. மல் லிகை மணமும் அங்கில்லை........." என்ருன்.

அந்த வேளை அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஏனென் ருல் வெண்ணிலா லேசாக மேகப் படுதாவில் ஒளிந்து கொண்டது... மேலே எழுத எனக்கும் மனசு வரமாட்டேன் என்கிறது.........

இப்படிக்கு

.........................

★

# கடமை

எச். விஜயகுமார்

*[பின்னிரவு. கலிங்க நாட்டரசன் கலிங்கனின் செல்வப் புதல்வி மிருணாளினியும், அரண்மனைச் சிற்பி அமரவர்மனும் ஒரு குதிரை மீது அமர்ந்து கலிங்கத்தை அடுத்த காட்டிலே வந்து கொண்டிருக்கின்றனர்.]*

அமரன்: அரசகுமாரி! கண்முன் நடப்பதானாலும் கனவாகவே தோன்றுகிறது. உண்மையில் நடக்கும் நிகழ்ச்சியே எனினும் உன்மத்தனின் கற்பனை போல நம்பமுடியாததாக இருக்கிறது. என்ன விந்தை இது? கணக்கற்ற காவலர்கள் வணங்கிப் பணியும் கலிங்க நாட்டு இளவரசி இன்று காரிருளில் கடுங் குளிரில் காட்டுப்பாதையின் வழியே கடமையையும் கட்டுகளையும் தகர்த்தெரிந்து கல் செதுக்கிப் பிழைக்கும் ஒரு ஏழைச் சிற்பியுடன் பெற்ற தந்தையையும் பெரிதென மதிக்காமல் ஓடி வந்திருக்கிறாள் விந்தையிலும் விந்தை!

மிருணாளினி: விந்தையல்ல அமரா! சிந்தனை செய்துதான் முடிவு செய்தேன். புனிதமான காதலுக்கு முன் பூமியும், பொருளும், சொத்தும், சுகமும், அரசும், ஆட்சியும் மிக மிக அற்பமெனத் தோன்றின. கடமை ஒன்றே என்னை தடுக்க முயன்றது! ஆனால்...... (இலேசாகச் சிரித்து) ஹூம்! கடமையாம் கடமை. பெற்றோர்கள் பால் செலுத்த வேண்டிய கடமை பிள்ளைகளுக்கு உண்டு. ஆனால் பிள்ளைகள் பால் செலுத்த வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு யில்லையா? நம் காதலை மறுத்துத் தம் கடமையிலிருந்து விலகினார் என் தந்தை. என் தந்தையே கடமையிலிருந்து விலகிய போது எனக்கு மட்டும் என்ன கடமையாம்? ஆகவே உன்னுடன் வந்தது எனக்குத் தவறெனத் தோன்றவில்லை.

அம: பெண்மையின் பரிபூரண உருவமாக இருக்கும் உனது ஆண்மையைக் கண்டு வியக்கிறேன் இளவரசி.

மிரு: ஏன்? பெண்களென்றால் கோழைகளாகவே இருப்பார்களென்று எண்ணமோ?

அம: உலகிலில்லாத புதுமையொன்று நடந்தால் வியப்பு ஏற்படுவது இயற்கைக்கு மாறுபட்டதல்லவே!

மிரு: உங்கள் எண்ணம் தவறானது. பெண்களின் வீரம் புவியில் இல்லாத புதுமையல்ல. ஆண்களின் அதிகாரத்தால் பெண்களின் வீரம் அடங்கிப் போயிருக்கிறது. எனினும் அது நீறு பூத்த நெருப்பு என்பது நினைவிலிருக்கட்டும். உற்சாகக் காற்று வீசினால் உடனே நீறு எல்லாம் பறந்து நெருப்பு தனது வல்லமையைக் காட்டும்.

அம; உண்மையே! அகலாது அணுகாது தீக் காய்வதைப் போல பெண்களிடம் பழக

வேண்டும். அணங்கும் அன லும் ஒன்றேயன்றோ!

மிரு: காவியமும் இயற்றத் தெரி யும் போலிருக்கிறது!

அம: சிற்பமும் ஒருவகைக் காவி யந்தானே. ஆமாம் அதிருக் கட்டும். இவ்வளவு கட்டுக் காவல்களையும் கடந்து இக் காரிருளில் அந்தப் புரத்தி லிருந்து எப்படித் தப்பித்து வந்தாய்.

மிரு: என் உயிர்த்தோழி உதய தாரா உதவினள். இன்று அமாவாசை அல்லவா; வழக்கம் போல் காளியன்னையின் கோவி லுக்குச் செல்லப் புறப்பட் டேன். காவலரும் பின் தொடர்ந்தனர் எனினும் இன் றையதினம் காளியின் புண்ணிய தினமாதலால் நான் தனி யாகவே தேவியைத் தரிசிக்க வேண்டு மென்று கூறி அவர் களைத் திரும்பிச் செல்லும்படி உத்திரவிட்டு விட்டேன். பின் காளி கோவிலுக்குச் சென்று ஊருக்கு வெளியே தாங்கள் காத்திருந்த இடத்தை வந் தடைந்தேன்.

அம: தந்திரம்தான் பெண்களு டன் பிறந்ததாயிற்றே! கேட்க வேண்டுமா?

மிரு: பெண்களிடம் சுதந்திரம் தான் இல்லை என்றால் வெறும் தந்திரம் கூட இருக்கக் கூடாதா?...... (ஏதோ நினைவு வந்து நாதா... குரல் நடுங்க)

அம: உயிரே! ஏன் கலக்கம்? ஏன் உன் மலர் முகம் எதிர்பா ராத விதமாக வாட்டமடைந்து விட்டது. தந்தையின் நினைவோ?

மிரு: அல்ல. அன்னையின் கோவி லுக்குள் அடியெடுத்து வைத்த தும் அப்சகுனங்கள் உண்டா யின. அதை நினைத்து என் உள்ளம் அஞ்சுகிறது,

அம: மானே! அபசகுனங்களா? வாழ்வுப் பாதையில் அடி யெடுத்து வைக்காதற்கு முன் னமே அபசகுனங்களா?

மிரு: ஆம் சுவாமி, நினைக்கவும் மனம் நடுங்குகிறது. கோவி லுக்கு முன் வாசலிலேயே கரிய இருளில் கிளியின் அலறலைக் கேட்டுத் துணுக்குற்று அருகில் சென்று பார்த்த போது ஆண் கிளி ஒன்று இறந்துபோன பெண்கிளியின் மேல் விழுந்து அலறித் துடித்துக்கொண்டிருந் தது. அதைக் கடந்து உள்ளே சென்றதும், அன்னையின் அரு கில் அல்லும் பகலும் எரிந்து கொண்டிருக்கும் அமரவிளக்கு திடீரென அணைந்தது. என்கையி லிருந்த பழத்தட்டும் கைநழுவிக் கீழே விழுந்து சிதறியது. அன் னையின் அடிகளில் விழுந்து வணங்கி ஆசியைக் கோரி நிற்கையில் அன்னையின் அபயக் குரலுக்கு மாறாக ஆந்தையின் அலறல் கேட்டது. என்ன தீங்கு நேருமோ!

அம: அன்பே, கோரமான நிகழ்ச்சிகளை மனதில் ஏன் கற் பனை செய்து கொள்ள வேண் டும்? அவ்விதம் ஒன்றும் நிக ழாது. "வாழ்வில் இன்னல்கள் உண்டு. அதை அறிந்து வாழ்க" என அன்னை நம்மை அறிவுறுத் தினள் அவ்வளவுதான்! இதற் காக அஞ்சுவதா ?

மிரு: அன்பே! அஞ்சுவ தஞ் சாமை பேதமையல்லவோ?

[மிருணாளினி உடல் நடுங்குகிறது.]

அம: கண்மணி, வருவன வந்தே தீரும். அஞ்சுவதால் அடுப்

பவை அஞ்சி நம்மை விட்டுப் போகுமா? ஏன் உன் உடல் நடுங்குகிறது. உன்னைக் கேட்கிறேன். தினந்தோறும் இரத்தின கம்பளத்தில் சுருண்டு, பட்டுப் பஞ்சத்தின் அணைப்பில் குளிரறியாது உறங்கிய நீ கடுங் குளிரில் கானகத்தில் முன் பின் அறியாத ஒருவனின் ஸ்பரிசத்தில் இருக்கும் போது உன் மேனி நடுங்காமல் வேறென் செய்யும்? கண்ணே அம்பெனப் பாயும் குளிர் காற்றில் மிக மிக அல்லலுறுகின்றாய். எல்லாம் ஏழைச் சிற்பியாகிய என் பொருட்டுத் தானே! இன்னும் சிந்தித்துப்பார்! என்னை அடைந்து நீ என்ன சுகத்தைப் பெற வியலும்? கல்லையே தீண்டித் தீண்டி கரடு முரடான இந்தக் கரங்கள் உன் மலர் மேனியைத் தொடும் பொழுது......

மிரு : ... கற்பக விருக்ஷத்தின் மெல்லிய நறுமணமான இன்பக்காற்று என்னை ஸ்பரிசிக்கும் போது எவ்வித சுகத்தை அடைவேனோ அச்சுகத்தை உனது ஸ்பரிசத்தால் பெறுவேன். நீ சிலை செய்யும் பொழுது நான் ஒரு சிலையாகி விட்டால் உன் கைகளிலேயே மூழ்கிக் கிடக்கலாமே என்று கூட எனக்குத் தோன்றுவதுண்டு. உனது அந்தக் கண்ணனின் சிலையைப் பார்த்த முதலே உனக்கு நான் என் இதயத்தைப் பறிகொடுத்து விட்டேன் இனி அக்காதலை எங்ஙனம் மாற்ற இயலும். அணை கடந்த ஆற்றுநீரைத் திரும்பக் கொண்டு வர முடியுமா? (மிருணாளினியின் பேச்சில் நடுக்கம் தென்படுகிறது)

அம : குயிலே! நீ என்னதான் ஆண்மையுடன் பேசினாலும் குளிரில் உனக்கு ஏற்படும் நடுக்கத்தை மறைக்க வியலாது ஆம்! மிகவும் சோர்ந்துகூட விட்டாய். வெகுதூரம் வந்து விட்டோம். அதோ! அங்கே தூரத்தில் ஒரு பாழ் மண்டபம் தென்படுகிறது. அங்குச்சற்று இளைப்பாறுவோம்.

மிரு : வேண்டாம் அமரா! இந் நேரம் நான் அந்தப்புரத்திற்கு வராத செய்தி அரசருக்கு எட்டியிருக்கும். உன்னுடன் நான் ஓடிவந்த செய்தியும் அவரது செவிகளுக்கு எட்டாமலிருக்க முடியாது. ஆகவே வீரர் நம்மைப் பின் தொடர்வார்கள். பொழுது விடிவதற்குள் வேறொரு நாட்டில் நாம் இருக்க வேண்டும்.

அம : ராஜகுமாரி! நாம் வெகு தூரம் வந்துவிட்டோம். ஆகவே கவலையை யொழி. சிறிது இளைப்பாறி பின் மறுபடியும் நமது பிரயாணத்தைத் துடங்குவோம், குதிரையும் கூடக் களைத்து விட்டது. இதோ மண்டபம் வந்துவிட்டது இறங்கலாம்.

[இறங்கிக் குதிரையை அருகி லிருந்த மரமொன்றில் கட்டிவிட்டு அமரனும் அரசகுமாரியும் மண்டபத்தில் உட்காருகின்றனர். அரசியின் கண்கள் குவிகின்றன.]

கண்ணே! சோர்வு உன்னைத் தாக்குகின்றது. வழி நடந்த களைப்பால் வாடித் துவண்ட இளங் கொடிபோலக் காண்கிறாய். குளிரோ ஊசிபோலக் குத்திக் குருதியைப் பனியாக்குகிறது. சிறிது கண்ணயர்! நான் அருகில் சென்று உலர்ந்த சருகைப் பொறுக்கிவந்து அனல் மூட்டி உன் குளிரை நீக்குகிறேன்.

மிருணா: மாரா! சோர்வுமில்லை துக்கமுமில்லை. அவ்வபசகுனங்களின் நினைவே என்னை அச்சுறுத்துகின்றது. என்னைத் தனியே இவ் வடர்ந்த காட்டில் படர்ந்த இருளில் விட்டுச் சருகைப் பொறுக்கச் செல்ல வேண்டாம். நான் சிறிது தலை சாய்க்கிறேன். நீயும் அருகில் அமர்ந்தால் எனக்குச் சற்றுத் தைரியமாக இருக்கும்.

அம: அன்பே! வாழ் மண்டபத்தில் வளர்ந்த நீ பாழ் பண்டபத்தில் படுத்துறங்க வேண்டி வந்தது! என் இன்பக் களஞ்சியமே! உன் கவலையே என் நெஞ்சைப் பிளந்து வேதனை அளிக்கின்றது.

மிரு: என் வாழ்வே! விதியும் தெய்வமும் வீணர்கள் பேச்சு காதலின் பாதை களிப்பு மிக்க தொன்றன்று. மேடு பள்ளங்களும் விஷம் நிறைந்த முட்களும் அடர்ந்தது. மன உறுதி இருந்தால் தான் அதனைக் கடக்க வியலும்.

[திடீரென்று குளிர் காற்றின் அலை ஒன்று வீச அமரன் மிருணாளினி இவர்களின் மேனி நடுங்குகின்றது.]

அம: தேவி! கொடும் நெருப்பின்றி இக்கடுங் குளிர் நீங்காது கல் மேனி படைத்த என்னையே ஆட்டிவைக்கும் இக்குளிர் மென் மேனியளான உன்னை என்னதான் செய்யாது! ஆம்! சுள்ளிகளைப் பொருக்கிக் கொண்டுவந்துதானாக வேண்டும். சற்று இரு இதோ! இக்கணமே வந்து விடுகிறேன்.

(எழுந்து செல்ல முயற்சிக்கிறான் மிருணாளினி தடுத்து) என் அன்பே! காரிருளில் தனியே செல்லவேண்டாம், கூரிய முட்களும்கொடிய பாம்புகளும் கணக்கின்றி இருக்கும். நானும் உடன் வருகின்றேன்.

அம: (சிரித்து) கூரிய முட்களும் கொடிய பாம்புகளும் என்னைத் தான் வருத்துமோ! உன்னை ஒன்றும் செய்யாதோ! பேசாமல் அமர்ந்திரு. விரைவில் வந்து விடுகிறேன்.

மிரு: என் தெய்வமே! எனக்கு ஏனோ அச்சமாக இருக்கிறது. விரைவில் வந்துவிடு வெகு தொலைவில் செல்லவேண்டாம்.

அம: இதோ, க்ஷணத்தில் வந்து விடுகிறேன்.

[இருளில் மறைகிறான்]

மிரு: (தனியே) என்னருமைத் தந்தையே! நீங்கள் மட்டும் "சரி" என்று ஒரு வார்த்தை வாய் திறந்து சொல்லியிருந்தால் உங்கள் செல்வப் புதல்வி அரண்மனையையே விட்டு இவ்விதம் ஆரண்யத்தின் அந்தகாரத்தில் வந்து அல்லலுற்றிருக்க மாட்டாள். நீங்கள்உங்கள் கடமையினின்றும் தவறியது மன்றி என்னையும் தவறச் செய்து பல இன்னல்களுக்கு உள்ளாக்கினீர்கள். ...ஹூம்...இன்னலா? எனக்கா? இல்லை இல்லை! காதலுக்காக காதலனுக்காக எதையும் பொறுத்துக் கொள்ளும் சக்தியை எனக்குத் தெய்வம் அளித்திருக்கிறது...

[அருகில் சரசர வென்ற சப்தம் கேட்கின்றது. மிருணாளினி திடுக்கிடுகின்றாள். திகிலுடன் சுற்றும் முற்றும் தனது கூரிய கண்களைத் திரும்பிப் பார்க்கின்றாள். ஒரு நீண்ட கருநாகம்! மிரு

ணளினி அஞ்சி ஓடுவதற்கு எழு கின்ருள். ஆனல் அச்சமிகுதியால் கால்கள் நடுங்க அக்கணமே மயங்கிக் கீழே விழுகின்ருள். குமரியின் பூப்போன்ற பாதத்தில் தன் கொடிய பற்களைப் பதித்துக் கடும் விஷத்தைக் கக்கிச் சென்று விடுகிறது நாகம்.

அமரன் கைகளில் சுள்ளி களுடன் வருகிருன் அருகில் வந்ததும் துவண்டு விழுந்து கிடக்கும் இளவரசியைக் கண்டு தடாலென்று சுள்ளிகளைக் கீழே போட்டுவிட்டு ஓடிவந்து மிருணளினியின் தலையைத் தன் மடியில் வைக்கிருன்.

அம: என் உயிரே! இது என்ன கோலம்? இது என்ன? கண்கள் ஏன் இருண்டவை போலக் காணப் படுகின்றன! வாயில் நுரை வேறு தள்ளுகிறதே என்ன இது?

மிரு: (தடுமாரிய குரலில்) பாம்பு! ...பாதத்தில்... (கண்கள் மூடி விடுகின்றன. ஆவி பறந்து விடுகிறது)

அம: (அவளது உடலின் மீது புரண்டு விழுந்து) ஐயோ! என் கண்ணே! என்னைத் துடிக்க விட்டுச் சென்றனையோ! ஓ பாழும் தெய்வமே! காரிருளில் தனியே கைவிட்டுச் சென்ற காரிகையைக் கருநாகம் தீண்ட கண்களால் கண்டு களித்துக் கொண்டிருந்தாயா? இப்போது ஒருவரைப் பிரிந்து மற்ருெருவர் துடிப்பதைக் கண்டு களிகூரப் போகிருயா! எவிதியே! (சிறிது நேரம் கதறி அழுகிருன் பின் தெளிந்து) மிருணளினி! என் உயிரே! காதல் வாழ்க்கை நடத்தலாம் என்று கனவு கண்டு வந்தாய். கருநாகம் தீண்டிய கடும் நஞ்சால் உலகைத் துறந்து என்னை உன்மத்தனுக்கிச் சென்ருய். என்னைத் தனியே விட்டுச் செல்லாதே என்று தடுத்தனை. கூரிய முட்களும் கொடிய பாம்புகளும் இருளில் இருக்கும் என என்னைப் போகவிடாமல் பிடிவாதம் செய்தனை. இப்பொழுது நீ என்ன கதியில் கிடக்கின்ருய்? உன் தந்தம் போன்ற வெண்மேனி, தண்மையுடன் நீல நிறங் கொண்டு தடுமாறிக் கிடக்கின்றது. குருதியினும் சிவந்த உனது குமுத வாயினின்றும் உன் நல்லுயிரைக் கௌவிய நஞ்சுநுரை வழிகின்றது. இறப்பிலும் உனக்கு இன்பமில்லை போலும். அரண்மனையில் நீ இறந்திருந்தால் அண்டமுழுதும் அழுது கதறி, உன்னை உன் கடைசித் துயிலைக் காணக் கரை புரண்டு ஈமக்காட்டில் எதிர்கொண்டழைக்கும் உன்னை எரிப்பது வெந்தணல்தான் எனினும் அஃது சந்தனமரத்திலிருந்து வந்ததாக இருக்கும்...... ஹூம். என்ன கதறி என்ன பயன். நீ சென்ருய்; என்னைத் துடிக்க விட்டு மறைந்தாய் உயிர் போன பின்பு எனது இவ்வுடலை வைத்தென்ன செய்வது? இதோ இவ்வாளைக் கொண்டு என்னுயிரை மாய்த்து நீ இருக்குமிடம் கடிதில் வந்து காண்கிறேன்.

[என் கை வாளை உருவுகையில் அருகில் ஏதோ அரவம் கேட்கிறது. திடுக்கிடுகிருன் அமரன்]

அம: என்ன அது? என்ன சப்தம்! என்னருமைக் காதலியின் இன்னுயிரைக் கவர்ந்த அரவமா? அன்றி அவளது சவத்தை நாடி சடுதியில் வந்தடைந்த

காட்டுப் பேயா? யாராயிருப்பினும் சரியே! வாளுக் கிரையாவது உறுதி. பாம்பாயிருப்பின் பல்லாயிரம் துணுக்குகளாகும். என் காதலியின் உயிரைக் கவர்ந்த கடும்பாம்பை வறிதே விடுவேனு......

[தடாலென்ற இடி யோசையுடன் ஒரு மின்னல் கணநேரமே இருந்தது. கடிதில் மறைந்த அம்மின்னலொளியில் சற்றுத் தொலைவில் நிற்கும் துறவி ஒருவரின் உருவம் தென்படுகிறது. அமரனின் நெஞ்சு படபடக்கின்றது]

அம: யாரது? காரிருளில் துறவியைப் போல் கபட வேடம் தரித்துக் கானகத்தே நிற்பது யார்? காதலியின் ஆவியைக் கவர்ந்த காலனு? அன்றிப்பெண்ணின்சவத்தை நாடி வந்தடைந்த பேயா?

துறவி: (அருகில் வந்து) அன்பார்ந்த மகனே! யான் ஆவியைக் கவரும் அந்தகனுமல்ல, பிணத்தை நாடும் பேயுமல்ல. வாழ்வின் இன்ப துன்பங்களை அனுபவித்துப் பின் வாழ்வில் சலிப்புத் தோன்ற எம்பெருமான் இணையடிகளை நாடி இக்காட்டில் ஏகாந்த வாசம் புரியும் எளியதோர் துறவி. சற்றுத் தொலைவிலிருக்கும் சந்திரமதி நதிக் கரையில் எனது உறைவிடம் உளது. காரிருளில் கானகத்தில் கதறியழும் ஓசையைக் கேட்டு உறுதுயர் கொண்ட உயிர்தான் யாதோ என அறிய உடனே ஓடிவந்தேன். அன்பா! நீ யார்? இங்கே பூமியின்மீது பிணமெனக் கிடக்கும் பூங்கொடி யார்? எங்கிருந்து வருகின்றீர்? உங்கள் வரலாறு யாது? உள்ளவைகளை உள்ளம் விட்டு உண்மையை ஒளியாது உரை. உற்ற உதவி செய்வேன்!

அம: (தடாலென்று அவர் காலில் விழுந்து) முனிபுங்கவ! (அதற்கு மேல் பேச வியலாமல் விம்முகிறுன்.)

துறவி: (அமரனை நிறுத்தி வைத்து) என்னருமைப் புதல்வனே! எழுந்திரு. ஆட்கொள்ள ஆண்டவன் இருக்கிறுன். உலகம் யாவையும் அவனது உந்தியிலடக்கம்: எழுந்து நினக்குற்ற துயரை தயக்கமின்றிக் கூறு:

அம: (கைகளைக் கூப்பியவாறு) சுவாமி! என்னைப் பற்றி நானென்ன கூறுவது? அமரன் என் பெயர். சிலை செதுக்கும் சிற்பி நான்! இம் மங்கை கலிங்கன் ஆசையாய்ப் பேணும் அருந்தவப் புதல்வி.

துறவி: (வியப்புடன்) என்ன? இம்மங்கை இளவரசி மிருணுளினியா? அரசிளங்குமரி பாழ்மண்டபத்தில் பிணமாகக் கிடக்கின்ருளா? நீ...நீ அமரச் சிற்பியா? நம்பத் தகாததாக வன்றோ? இருக்கிறது.

அம: ஆம் ஸ்வாமி நம்பத்தகாததுதான்! மேலும் நடக்கக்கூடாதது நடந்து விட்டது. நானும் இந்நங்கையும் காதற் கயிற்ருல் கட்டுண்டோம். காதலை மறுத்தனன் கலிங்க மன்னன். ஈருடல் ஒருயிராயின நாங்கள் வாழ வேறுவகையறியாது உலகில் யாருமறியா ஒரு இடத்தில் சென்று உய்ந்துவாழ வந்தோம் வழி நடந்த களைப்பால் வருந்தினுள் மங்கை! படுத்துக் களைப்பாறப் பாழ் மண்டபம் வந்தோம். நான் சருகைப் பொறுக்கச் சென்றிருக்கையில்

சர்ப்பம் தீண்டி இவள் மாண்டாள். விதி செய்த சதியை நினைத்து அழுது என் உயிரை மாய்க்க முயல்கையில் தங்கள் தரிசனம் கிடைத்தது. தன்யனானேன். இனி நான் மகிழ்வுடன் மாள்வேன்!

துறவி: உன்மத்தன் போல உளறுதே! நீயாவது மாள்வதாவது! உன்னால் கொடுக்க முடியாத உயிரை மாய்ந்துக் கொள்ள உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உலகில் உன் கடமை இத்துடன் முடியவில்லை. முடிக்க வேண்டிய கடமைகள் முற்றும் முடிந்தபின் உனக்கு விருப்பமானால் துறவை மேற்கொள்ளலாம். ஆனால் உயிரை மாய்க்கமட்டும் உனக்கு உரிமை கிடையாது.

அம: இந்நிலைமையில் நான் வேறன்ன செய்வது ஸ்வாமி! எந்த முகத்துடன் நான் அரசர் முன்னிலையில் செல்ல வியலும்?

துறவி: அவைகளனைத்தையும் நாளை பொழுது புலர்ந்தபின் யோசிப்போம். இக் கடுவிருளில் இம் மங்கையின் உயிர் நீங்கிய உடலை வைத்துத் தனியே இருப்பது தகாது. இந்த சவத்தை எடுத்துத் தோளின்மேல் போட்டுக் கொண்டு குதிரையையும் அவிழ்த்துக் கொண்டு என்னுடன் ஆசிரமத்திற்கு வா! இரவை ஆசிரமத்தில் கழிக்கலாம்

அம: பெரியீர்! கதியற்ற எனக்குத் தாங்களே அடைக்கலம்! தங்கள் சித்தப்படியே செய்வோம். மங்கை யிறந்த துயரம் மட்டும் நான் மாளுமளவும் என் மனதினை அரித்துக் கொண்டே இருக்கும்.

துறவி: அத்துயரமே நீ செய்து முடிக்க வேண்டிய பெரியதோர் கடமையைச் செய்வதில் பேருதவியாக இருக்கும் வா! செல்வோம்!

[அமரன் மிருணாளினியின் பிணத்தைத் தோளின்மீது போட்டுக்கொண்டு பரியையும்அவிழ்த்து விடுகிறான். முனிவர் வழிகாட்ட அமரன் தொடர்ந்து செல்கிறான்.]

## 2

[பொழுது விடிந்து விட்டது. பல பெண்கள் சேர்ந்து பேசுவதைப் போலப் புள்ளினங்கள் கத்திப் புதுமையுணர்ச்சியை ஊட்டுகின்றன. சந்திரமதி நதி மண வீட்டுக்குச் செல்லும் மங்கையின் புதுச் சேலையின் சல சல வென்னும் சப்தத்தைப் போலச் சப்தம் செய்து கொண்டு ஓடுகின்றது. அருகிலிருக்கும் சிறு சிறு கோவில்களில் காலை மணியின் கணீரெனும் ஓசை காதிற் இனிமையாகக் கேட்கிறது. ஆங் காங்கு தவசிகள் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். அமரனும் துறவியும் ஆற்றில் நீராடித் திரும்பிக் கொண்டிருக்கும் வழியில் .........]

துற: அன்ப! யான் உரைத்தவை யனைத்தும் உளத்தே கொண்டனையா?

அம: கொண்டேன் பிரபோ! ஆனால் இப்பாழும் மனம் கேட்க மாட்டேன் என்கின்

றதே! காதலி மறைந்தபின் எப் பொருளிலும் பற்றுள்ளம் ஏற் படுவதில்லை. எதைக் காணினும் என்னை யறியா வெறுப்பு ஒன்று என்னுள்ளத்தே தோன் றுகின்றது.

துற: மகனே! மாயை அப்பேர்ப் பட்டதுதான். குறிப்பிட்ட ஒரு பொருளின் மேல் மிகுந்த பற்று கொண்ட உள்ளம் அப் பொருள் கைநழுவி விட்டதா யின் மற்றப் பொருள்களின் மீதும் வெறுப்பைக் காட்டுவது இயற்கையே! எனினும் அதற் காகக் கடமையினின்றும் தவறு வது கண்மூடித் தனமாகும். இதோ பார்! இப்பச்சைசைப் பசேலென்ற புல்வெளி! தமது ஆரவாரத்தால் இவ்வாரணியத் தையே ஆட்டி வைக்கும் புள் ளினங்கள்! யார் வந்தாலும் போனலும் லட்சியமின்றி தன் பாட்டிற்கு ஓடிக் கொண்டிருக் கும் சந்திரமதி நதி இவைக ளெல்லாம் இயற்கை யன்னை இசைந்தளித்த இன்பக் களஞ்சி யங்கள் என இன்று உலகோர் சொல்கின்றனர். ஆனல் வெகு நாட்களுக்குப் பின்......? இவ் வடர்ந்த பசுமையான புல்வெளி ஒரே மணற்காடாக இருக்கும். பாடி யாடும் இப் பறவைகள் எங்கோ மறைந்து எங்கணும் பரந்த பாலைவனமே பார்வைக் குத் தென்படும். இவ்வினிய சிற்ருறு ஓடிக்கொண்டிருக்கும் இடத்தில் மக்களை ஏமாற்றி மடியவைக்கும் கானல் நீர்ச் சுனைகள் காணப்படும். மேலும்:

அம: ஸ்வாமி! இதெல்லாம் துறவிகளின் வேதாந்தம். வாழ்க்கையின் தத்துவங்களை யும் துன்பங்களையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் இளமைப் பருவத்தில் நான் இருக்கிறேன். இன்பம் ஒன்றே இளமையின் லட்சியம் துடிதுடிப்பு எல்லாம். கைவிட்டுச் சென்ற பொருள் திரும்பிக் கிடைக்காது என்பது மெய்தா னெனினும் மனம் அதனை ஏற்றுக் கொள்ளவ தில்லை. அறிவு அதனை ஏற்றுக் கொண்ட போதிலும் மனமதை அதனல் மாற்ற வியலவில்லை. இவ்விதம் அறிவிற்கும் மனதிற் கும் இடையிலுள்ள போராட் டத்தில் அகப்பட்டு விழிக்கின் றேன். ஆவி நீத்தல் ஒன்றே அரிய வழி. ஆனல் அதற்கும் என்னிடம் வாக்குறுதி வாங்கி என்னைத் தடுத்து விட்டீர்கள். இனி தங்கள் கட்டளை எதுவா யினும் மனமுவந்தோ மன மின்றியோ செய்வது ஒன்றே என் வாழ்வின் லட்சியம். கட் டளையாதோ?

துற: (புன்னகை பூத்து) அப்பா! அனைத்தும் உண்மை. நானும் ஒரு காலத்தில் உன் போன்ற இளைஞனக இருந்தவன் தானே. இளமைக்கும் முதுமைக்கும் ஏற்படும் மனப் போராட்டங் களையும் யான் நன்கு அறி வேன். ஆகவே உன்னைக் குறை கூறுவதில் பயனில்லை. எனினும் நான் கூறியபடி செய்ய வேண்டும். உன் வாழ்வில் நீ செய்து முடிக்க வேண்டிய பெரிய தொரு கடமை இருக்கின்றது.

அம: அது எதுவோ ஸ்வாமி! யான் அறியக் கூறுங்கள்.

துற: கூறுகிறேன் அன்ப! கூர்ந்து கேள்! ஆசிரமத்துக்குச் சென் றதும் அரச குமாரியின் சவத்தை எடுத்துக் கொண்டு நீ கலிங்கத்துக்குச் செல்ல வேண்

டும். சென்று அரசனிடம் உனது செய்கைக்காக வருந்தி மன்னிப்புக் கோரவேண்டும்...

அம: என்ன கூறினீர் பிரபோ, இளவரசியின் பிணத்தை எடுத்து நகருக்குள் செல்லவா? அரசரை அண்டி அவ்ரது மன்னிப்பைப் பெறவா! அது நடக்கக் கூடிய காரியமா ஸ்வாமி! எமன் வாய்க்குள் சென்றவன் மீண்டதுண்டா? அரசரது மன்னிப்பைப் பெறுவதென்பது கனவில் கூட நடக்கக்கூடியதொன்ரு? அவரிடம் யான் அகப்பட்டால் பிறகு மரணமே எனக்குக்கதி என்பதை நீர் அறியீரா?

துறவி: அறிவேன் மைந்த! அறிந்தேகூறினேன். பணியைச் செய்வதே உன் கடமையன்றி பலனே எண்ணுவதல்ல! உன் கடன் பணிசெய்து கிடப்பதே! ஆகவே அஞ்சாமல் செல்.

அம: அச்சம் எல்லாம் துச்சமெனக் கருதியே அரச குமரியுடன் ஓடி வந்தேன். அஞ்சி யிருந்தேனுனல் அவளை அண்டியே இருக்கமாட்டேன்' அஃதிருக்கட்டும் ஸ்வாமி! எனக்கு மன்னிப்புக் கிடைக்கும் என்று தாங்கள் கருதுகிறீர்களா?

துறவி: கேட்கவேண்டியது உன் கடமை. கிடைப்பதைப் பற்றிக் கவலை யொழிக.

அம: உத்திரவு பிரபோ! கதிரவன் உச்சிக்கு வருவதற்கு முன்னமேயே புறப்படுகின்றேன். தங்கள் ஆசியும் அன்புமே எனக்கு அழியாத் துணைகள். ஆமாம்! அங்கு நான் சென்று முடிக்க வேண்டிய கடமை முற்றும் இவ்வளவே தானே? பெரிய தொரு காரியமிருப்பாதக வன்ருே புகன்றீர்கள்?

துற: அங்கு சென்ற பின் அனைத்தும் தெற்றென விளங்கும். நான் உனக்குக் கூறவேண்டியவைகளெல்லாம் இவ்வளவே தான். உனது கடமையை வெற்றியுடன் முடித்து வெற்றியுடன் திரும்பி வருவாயாக. அதோ ஆசிரமமும் நெருங்கி விட்டது.

அம: ஆக்ஞை ஸ்வாமி! ஆண்டவனின் அருளும் தங்களது ஆசியுமிருப்பின் அனைத்தும் நலமாகவே முடியும். வணக்கம்.

## 3

*[கலிங்கநாடு அரசர் தமது அரண்மனையில் தனியறையில் அமர்ந்துள்ளார் சோக ரேகை படிந்து சோர்ந்த முகத்துடன் அமர்ந்திருக்கும் அவரது அகன்ற விழிகளினின்றும் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்கிறது! மகளை நினைத்து மனம் நொந்து கண்ணீர் சிந்தும் கலிங்கனைத் தேற்றியவாறு அருகில் அமைச்சர் அன்பானந்தர் அமர்ந்திருக்கையில்...........]*

அன்பா: அரசே! அழுது கண்ணீர் சிந்தும் அரசரை இன்று தான் முதன் முறையாக என் வாழ்வில் பார்க்க முடிந்தது. மகளைப் பிரிந்த துக்கத்தால் மனம் வ்ருந்துமாயின் மன்ன

ருக்கு வேண்டிய கல் நெஞ்சம் தங்களுக்கு இருந்தாக வேண்டும்.

அரசன் : அன்பானந்தரே! நீர் கூறுவது விசித்திரமாக வன்றோ இருக்கின்றது! மன்னனும் மனிதன் இதயம் படைத்தவன் தானே. மனிதற்குரிய உணர்ச்சிகள் யாவும் மன்னர்க்கில்லாமல் போகுமோ?

அன் : மன்ன! உண்மைதான் எனினும் மன்னன் மற்ற மனிதர்களினின்றும் வேறு பட்டவன். மனிதர்க்குரிய உணர்ச்சிகளனைத்தும் கடந்து நிற்பவனே மன்னனுக இருக்க முடியும். தாய் தந்தை தமையன் தம்பி, தமக்கை தங்கை, தாரம் தனயன் முதலிய பாசபந்தங்களில் இருந்து கொண்டே இல்லாதவன் போல இருப்பதுதான் மன்னர்க் கணிகலம். சுகமும், துக்கமும் சமமெனப் பாவித்து எவ்வித இடுக்கணினும் மனமசையாது உறுதியுடன் விளங்குபவனே உண்மை மன்னன். யாவுமறிந்த உமக்கு யான் என்ன கூறுவது.

அர : அன்பரே! புகன்றவை யாவும் பொன் மொழிகளே எனினும் மகளைப் பிரிந்து வருந்தும் என் மனதைத் திருப்ப முடியவில்லையே! என் அரசு முழுவதையும் இழந்திருப்பினும் இவ்வளவு துக்கத்தை யான் அடைந்திருக்க மாட்டேன். மனைவி இறந்த துயரை மகளின் முகத்தைப் பார்த்து மறந்திருந்தேன். ஆனல் அந்தோ! என் வாழ்வில் இன்ப மென்பதே இம்மையுமில்லையா? கண்ணே மிருணு! காதலே பெரிதெனக் கருதி உனது கடமையை உதறிச் சென்று விட்டாயா? போயும் போய் ஒரு சிற்பியிடமா காதல் கொள்ள வேண்டும்! உம்... இதுவும் என் விதி!

[மறுபடியும் கண்ணீர் சிந்துகின்முன்.]

அன் : அரசே! பின்னும் மகளை நினைத்துப் பேசுறுகின்றீர். மனம் தேறியிருங்கள்! மகளை அவசியம் பார்க்கலாம். எட்டுத் திசைகளிலும் ஏவலாளர்களை அனுப்பி நமது இளவரசியையும் சிற்பியையும் எங்கிருந்தாலும் அழைத்து வரும்படி யேவியுள்ளேன். காலையில் சென்றுள்ளார்கள், இன்னும் சிறிது பொழுதில் வந்து விடுவார்கள்.

[காவலாளன் உள்ளே நுழைகிருன்.]

காவ : அரசர் வாழ்க! அமைச்சர் வாழ்க! மகாப்பிரபோ! நம் மதிப்பிற்குரிய சேனதிபதி வீர சேனர் தங்களை உடனே காண ஆவலுள்ளவராக தங்கள் உத்திரவை எதிர் நோக்கி வெளியே காத்துள்ளார்.

அம : உடனே வரச்சொல் (சேவகன் செல்கிருன்) சென்றபின் அரசன் மந்திரியை நோக்கி அமைச்சரே! அங்கங்கள் இடதில் துடிக்கின்றன. யாது செய்தியோ அறியேன். ஒருக்கால்...

[சேனதிபதி உள்ளே நுழைகின்முன்.]

சேன : மஹாராஜா! வெற்றியுண்டாகட்டும்!

அர : வருக! வீரசேனரே! இதென்ன! தங்கள் முகம் ஏன் இவ்விதம் வாட்டமுடன் காண்

கின்றது? அண்டமெல்லாம் எதிர்த்துப் புரண்டு வந்தாலும் அசையா மனதுடன் அஞ்சாமல் எதிர்க்கும் அந்த அலட்சியம் நிறைந்த புன்னகை தங்கள் முகத்திலிருந்து எங்கே மாயமாக மறைந்து விட்டது?

சேனு: அரசே! என்ன கூறுவது? பெருத்த பேரிடி...... (தயங்குகிருர்)

அர; வீரசேனரே! என் தயக்கம்? ஏதாவது அமங்கலமான செய்தியா?

சேனு: (தயக்கமுடன்) ஆம்...... இல்லை அரசே! மகிழ்ச்சிக்குரிய செய்திதான். சிற்பி அமரனை சிறைப் பிடித்து விட்டனர் வீரர்கள்.

அர: (துள்ளி யெழுந்து) என்ன? என்ன சொன்னீர்கள்? சிற்பியைச் சிறைப்பிடித்து விட்டீரா? மிருணளினி எங்கே? எங்கே மிருணளினி?

சேனு! அரசே! இளவரசியார்...!

அர: இதென்ன இவ்வளவு தயக்கம் வீரசேனரே! இளவரசிக்கு என்ன? சுகம்தானே விரைவில் கூறுங்கள்!

சேனு: கூறுவதற்கு ஒன்றுமில்லை அரசே! விதி சதி செய்து விட்டது! அரசகுமாரி அரவந்தீண்டி ஆவிதுறந்தார்...

அர: ஆ! ஐயோ! பேரிடி! மிருணு!

[தடாலெனக் கீழே விழுந்து மூர்ச்சை யாகின்ருர்.]

அமை: ஆ...! உண்மையாகவா? வீரசேனரே! உண்மைதானு இச்செய்தி? (தலையில் அடித்துக் கொள்கின்ருர்.)

சேனு: உண்மைதான் அன்பரே! யாவும் விளக்கமாகப் பின் சொல்கின்றேன். தன்னிலையிழந்து கிடக்கும் அரசரை முதலில் தேற்றலாம்!... யாரங்கே?

[சேவகன் உள்ளே நுழைகிருன்.]

சேவ: உத்திரவு பிரபோ?

அமை: அரசர் மூர்ச்சையாகிக் கிடக்கின்ருர்! அவரைத் தேற்றப் பணிப் பெண்களை பன்னீருடன் அனுப்பு!

சேவ: உத்திரவு! [செல்கிருன்]

[அன்பானந்தர் அரசரது தலையை மடியில் எடுத்து வைத்துத் தேற்றுகின்ருர். சேனுதிபதி அருகிலேயே ஏதோ யோசனை செய்தவாறு நின்று கொண்டிருக்கிருர். சிறிது பொழுதில் பணிப் பெண்கள் பன்னீருடன் வர, அரசரை அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு அமைச்சரும் சேனுதிபதியும் அறையை விட்டு வெளியே வருகின்றனர். இருவரது முகத்திலும் ஏக்கம் தேங்கி நிற்கின்றது. இருவரும் சிறிது பொழுது மௌனமாகவே இருந்தபின்......]

அமை: வீரசேனரே! எதிர்பாராதது நடந்து விட்டது. கனவிலும் நினைக்காதது கண்முன் நிற்கிறது. நேற்று இப்பொழுதில் சுகமே இருந்த இளவரசி இன்று இப்பொழுதில் உயிரற்ற பிணமாகக் கிடப்பாளென்று யார்தான் கற்பனை கூடச் செய்திருப்பார்கள்? காதல் சாதலில் முடிந்தது... இன்ப வாழ்க்கையைப் பற்றிய கனவு எல்லை யில்லாத துன்பக் கடலில் ஆழ்ந்து அழிந்தது. சிற்பியின் காரணமாக அரசரின் வாழ்க்கை சின்னு பின்னமாகிவிட்டது.

சேன: அமைச்சரே! சிற்பியைக் குறைகூறிப் பயனில்லை. அவனது துயர் அரசரது துயரைக் காட்டிலும் ஆயிர மடங்கு அதிகமானதாக இருக்கின்றது. மனித வாழ்க்கையில் இளமை என்பது இனியதொரு தூக்கம். காதல் அதில் காணும் இன்பக் கனவு.

அமை: காதலின் சித்தாந்தத்தை பற்றிப் பேசிக் காலம் கடத்துவதில் பயனில்லை. சிற்பி எங்கே அகப்பட்டான்? அதைச் சொல்லுங்கள்.

சேன: அரசகுமாரியின் சவத்தைத் தோள்மீது போட்டுக் கொண்டு குதிரையின்மீது வந்து கொண்டிருந்தவனை நகர வாயிலில் காவலர்கள் பிடித்துச் சிறைசெய்து என்னிடம் கொண்டுவந்தார்கள். அவனை சிறையில் வைக்குமாறு கட்டளையிட்டு அரச குமாரியின் சவத்தை அந்தப்புரத்திற்கு அனுப்பி வைத்தேன்.

அமை: அரவந் தீண்டியதைக் குறித்து அமரன் என்ன சொல்கின்முன்?

சேன: சொல்வதென்ன? செய்தி என்ன வென்று கேட்டால் செயலற்றுப் போகிருன். எனினும் மிகுந்த சிரமத்துடன் விசாரணை செய்ததின் பேரில் அவன் கூறியது இதுதான், இளவரசியுடன் இரவோடிரவாய் மறைந்தபின்னர் வழியில் களைப்புத்திரப் பாழ் மண்டபமொன்றில் பாவையுடன் அமர்ந்த காலை, பாம்பொன்று தீண்ட பாவிகை இறந்தாளாம் இதற்குமேல் அவனிடமிருந்து எவ்விதச் செய்தியையும் அறிந்துக் கொள்ள வியலவில்லை:

அமை: விசித்திரக் காதலின் விபரீத முடிவு வேறென்னவாக இருக்கமுடியும்? சபையில் விசாரணையின் பொழுது மரண தண்டனையைத்தவிர அவனுக்கு வேறென்ன கிடைக்கப் போகிறது. இளவரசி உயிருடனிருந்திருந்தால்......

சேன: இருந்திருந்தால் அமரன் இங்கு ஏன் வருகிருன்? காதலியைப் பிரிந்தவனுக்குக் கடுந் தண்டனை அந்தப் பிரிவு ஒன்றே போதுமே! இதற்குமேல் மரண தண்டனை வேறு வேண்டுமா?

அமை: வீரசேனரே! நீர் எப்பொழுதும் லௌகிக விஷயங்களை மனதில் வைத்தே பேசுகிறீர். இது ராஜிய விஷயம் என்பது நினைவிலிருக்கட்டும். காதல் காவியத்தில் தான் செல்லும்... ஹூம் கலிங்கத்திற்கு ஒன்றன் பின் ஒன்ருகப் பேரிடிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஐந்து ஆண்டு கட்குமுன் அரசியார் அமரத்துவமடைந்தார். இன்று அரசரின் ஒரே புதல்வியான அருமை மிருணு அரவந்தீண்டி ஆவி நீத்தாள். கலிங்க நாட்டுக்குத் தனது சிற்பக்கலையால் சிறப்பளித்து வந்த கலைஞன் மரணதண்டனை விதிக்கப்பட்டு மாளப் போகிருன். முதலிலேயே சேரிட மறிந்து சேர்ந்திருந்தால் இந்நிலை வந்திருக்காது.

(அடுத்த இதழில் முடியும்)



★

பாப்பா கதை:

# முத்துவின் நேர்மை

எஸ். பி. மாதையன்

ஒரு ஊரில் முத்து என்ற ஒருவன் தன் தாயாருடன் வசித்து வந்தான். முத்து மிகவும் நேர்மையான நடத்தை உள்ளவன். பொய் பேச மாட்டான். எல்லோரும் அவனை நேசித்தனர். மற்றவர்கள் அவனைப் புகழ்ந்து பேசும்போது அவனுடைய தாயார் பெருமைப் படுவாள். ஆனால் பெருமையினால் மட்டும் வயிறு நிறைந்து விடுமா? சம்பாதிக்க வேண்டாமா?

ஒரு நாள் முத்துவின் தாயார் அவனைப்பார்த்து "முத்து, இவ்வளவு வயதாகியும் நீ சம்பாதிக்கப் போகாமல் இருந்தால் நாம் எப்படி சந்தோஷமாக வாழ முடியும். எங்காவது வேலை கிடைத்தால் போகிறதுதானே" என்று சொன்னாள். முத்துவும் "அப்படியே ஆகட்டுமம்மா, நான் போய் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

பக்கத்து ஊருக்குச் சென்றான். வேலை ஏதாவது கிடைக்குமா என்று விசாரித்தான். அந்த ஊரிலேயே வேலை இல்லாதவர்கள் பலர் இருந்தனர். முத்துவுக்கு மட்டும் எப்படி வேலை கிடைக்கும்? வேலை கிடைக்காமல் போனதோடு வயிற்றுக்குச் சாப்பாடு கிடைப்பது கஷ்டமாய் விட்டது. எப்படியோ சமாளித்துக் கொண்டு அடுத்த ஊருக்குச் சென்றான். அங்கும் வேலை கிடைக்கவில்லை. சாப்பாட்டுக்கும் கஷ்டம். இப்பொழுதுதான் முத்துவுக்கு சம்பாதிப்பதில் உள்ள கஷ்டம் தெரிந்தது. தன்னால் சம்பாதிக்க முடியாது என்று எண்ணினான். அவன் மனம் வருந்திற்று. பசி பொறுக்க முடியவில்லை. முடிவாக சில வீடுகளில் சென்று கை நீட்டிப் பிச்சையெடுத்தான். தர்மத்தில் நம்பிக்கை உள்ள ஒன்றிரண்டு வீடுகளில் கொஞ்சம் போட்டார்கள். அது முத்துவுக்கு அரை வயிற்றுக்கும் போதவில்லை.



வழியில் இருட்டி விட்டது. சுற்று முற்றும் பார்த்தான். சற்று தூரத்தில் நான்கைந்து வீடுகள் சேர்ந்தாற்போல் மங்கலாகத் தெரிந்தன. அங்கு சென்றான். இன்று இரவு மட்டும் படுத்துக் கொள்ள ஒதுக்குப் புறமான இடமாகப் பார்த்துப் படுத்துக் கொள்வதாகச் சொல்லி அங்குள்ளவர்களை வேண்டினான். அவர்களில் ஒருவன் ஒரு வீட்டைக் காட்டி, "அதற்குள் சென்று வேண்டுமானால் படுத்துக்கொள், அதில் யாரும் கிடையாது." என்றான். முத்து அவனை மனதிற்குள் வாழ்த்

திக் கொண்டே வீட்டுக்குள் சென்று தரையில் படுத்துக் கொண்டான். பசி மயக்கமும், நடந்த களைப்பும் அவனை தூக்கத்தில் ஆழ்த்தின.

விடிய இன்னும் சற்று நேரமிருந்தது. முத்து ஆழ்ந்த தூக்கத்திலிருந்தான். சேவல் கூவிற்று. முத்து ஒரு கனவு கண்டான். யாரோ ஒரு மகான் கனவில் தோன்றி நீ பட்ட கஷ்டத்திற்கு கூலி கிடைக்காது போகவில்லை. இந்த வீட்டின் வாசல்படியைப் பெயர்த்தெடு......உனக்கு இனி



நல்ல காலம்" என்று சொன்னார். திடுக்கிட்டு முத்து விழித்துக் கொண்டான். விடியற்காலத்தில் காணும் கனவு பலிக்குமென்பார்கள். முத்து கனவில் பெரியவர் சொன்னபடியே வாசற்படியை பெயர்த்தெடுத்தான். ஒரு குடம் காணப்பட்டது. அதற்குள் நகைகளும், பணமும் இருந்தன. முத்து பிரமித்தான். சற்று நேரத்திற்குப்பிறகு பழைய படி படியை மூடிவிட்டு வெளியில் வந்தான். இன்னும் நன்றாக விடியவில்லை. முத்துவின் மனதில் பல எண்ணங்கள் உண்டாயின. தான் பட்ட கஷ்டங்கள், தன் தாயார் தன்னை நினைந்து வருந்திக் கொண்டிருப்பாள் என்ற சிந்தனைகள், புதையலைக் கண்ட மகிழ்ச்சி எல்லாம் அவன் மனதைக் குழப்பின.

புதையலுடன் தன் வீட்டுக்குப் போக வேண்டுமென்று எண்ணினான். ஆனால் நேர்மையும் கபடுமற்ற அவன் மனம் சற்று நேரத்தில் அந்த எண்ணத்தை விட்டு விட்டது. புதையலை வீட்டுக்குடையவரிடம் சேர்த்து விடுவதே நியாயம் என்று முடிவு செய்தான். அதன்படியே வீட்டுக்காரனைத் தனியாக அழைத்து விஷயத்தைச் சொன்னான். அதைக் கேட்ட வீட்டுக்காரன் ஆச்சரியப்பட்டு 'அந்த வீட்டில் பேய் இருக்கிறதென்றுதான் நாங்கள் அதில் வசிக்கவில்லை. வழிப்போக்கர்கள் வந்து தங்குவார்கள். ஆனால் விடிந்ததும் அவர்கள் தாங்கள் கண்ட கெட்ட கனவுகளைச் சொல்லுவார்கள். நீயும் அந்த மாதிரிதான் சொல்லுவாயென்று நினைத்தேன். ஆனால் நீ சொல்வது ஆச்சர்யமாயிருக்கிறது" என்று சொன்னான். பிறகு இருவரும் சென்று பார்த்தார்கள். முத்து சொன்னபடியே இருக்கக் கண்டான். வீட்டுக்காரன் மிகவும் மகிழ்ந்து "அப்பா, நீ மிகவும் யோக்கியன், கபடமில்லாதவன் அதனால்தான் உனக்கு இது தெரிந்தது. இதை நீயே எடுத்துக் கொள். இந்த வீடும் உனக்கே கொடுத்து விட்டேன். நீ இங்கேயே இருந்து விடு" என்று சொன்னான். முத்துவும் மகிழ்ச்சியடைந்தான். தன் தாயையும் அழைத்துக் கொண்டு வந்து அங்கு சுகமாகக் காலம் கழித்தான்.

# ஆஸ்ரமம்

எல்.வி. பத்மனாபன் ....

வித்தியாபுரம் என்ற ஊர் அழகான சின்னஞ் சிறு கிராமம். இப்போது விசாலூர் என்றுதான் ஜனங்கள் அழைக்கிறார்கள். வித்தியாபுரம் எப்படிப் பெயர் மாறிற்று என்பதை சரித்திர ஆராய்ச்சிக்காரர்தான் சொல்ல வேண்டும். ஆனால், அங்குள்ள அனாதை விடுதியைப்பற்றிச் சிறு குழந்தைக்குக்கூட நன்றாகத் தெரியும். அனாதை விடுதியின் பெயர் அந்தப் பக்கம் எல்லா இடங்களிலும் பரவி இருந்தது. தூரா தூரத்திலிருந்தும் பலர் வருவார்கள் போவார்கள்.

அங்குள்ளவர்கள் அந்த விடுதி ஏற்பட்டதைப் பற்றி பலவாறாகப் பேசிக் கொண்டார்கள். எத்தனையோவிதக் கதைகள் அது பற்றி வழங்கி வந்தது. அதிலே இதுவும் ஒன்று.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு அக் கிராமத்தில் கள்ளுக் கடை ராமசாமிக் கவுண்டர் என்றால் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். இவர் தகப்பனாருக்கு ஏராளமான சொத்திருந்தும் இவர் குடும்பத் தலைவராய் வந்தபிறகு பல வழிகளில் பணத்தை விரயம் செய்துவிட்டார். இருந்த போதிலும் நிலங்களாக ஒரு ஐம்பதாயிரம் ரூபாயும், கள்ளுக்கடை வகையறாவில் ஒரு பத்தாயிரமும் இருந்தது.

அந்த ஊரிலே கருணாகர முதலியாரின் மகன் சந்திரசேகரன் என்பவன் ஒரு பி. ஏ. பட்டதாரி. முற்போக்குப் பேர்வழி. பெற்றோர்கள் அவன் சிறு குழந்தையாக இருக்கையிலே காலமாகி விட்டார்கள். சகோதரி வீட்டிலேதான் வளர்ந்து வந்தான். மேலே படிக்க விருப்பமில்லாமல் படிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி போட்டுவிட்டு நம் நாட்டின் அடிமை நிலையை உணர்ந்து, மிகவும் வருந்தி இயன்ற மட்டும் நம் நாட்டின் அடிமை நிலையை நீக்கப் பாடுபடுவதாக சங்கல்பம் செய்து கொண்டான். இதற்காகப் பல மேடைகளில் ஏறிப் பிரசங்க மாரி பொழிந்து தள்ளினான். மிக விரைவில் அவன் பேச்சின் கவர்ச்சி ஜனங்களை வசீகரித்து விட்டது. சிறிது காலத்திற்குள் தலைவனாகவும் பெயர் எடுத்து விட்டான். பல கிராமங்களுக்குச் சென்று பிரசாரம் செய்து, அநேகருக்கு அறியாமை என்ற இருட்டை நீக்கி நாம் இருக்கும் நாடு எது? என்ன நிலையில் இருக்கிறது? என்ன செய்ய வேண்டும்? என்ற வீர உணர்ச்சியை எழச் செய்தான். ஜனங்கள் நம் நாட்டுச் சாமான்களையே வாங்கலாயினர். அன்னிய பகிஷ்காரம் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவலாயிற்று. தன்னுடைய வீட்டிலேயே பள்ளியை ஏற்படுத்தி பகலில் சிறுவர்களுக்கும், இரவில் வேலையிலிருந்து வந்த குடியானவர்களுக்கும் இலவசமாகப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவே இச்செய்தி பக்கங்களிலுள்ள கிராமங்களில் பரவி அங்குள்ள

ஜனங்கள் இதில் திரள் திரளாகச் சேரலானார்கள். இடம் முதலிய வசதிகள் இல்லாததால் பெரிய மனிதர்களிடம் எல்லாம் சென்று பண உதவி கேட்டான். அநேகரிடம் வசைகளும், சில இடங்களில் அவமானமும்பட்டு எப்படியோ ஒரு ஐநூறு ரூபாய் சேர்த்தான். இன்னும் நூறு ரூபாய் வேண்டும் என்று தோன்றவே கள்ளுக்கடை ராமசாமிக் கவுண்டரிடம் சென்று கேட்டான்.

அவள் இஷ்டப்படியே நடப்பார். இது ஒன்றைத் தவிர. எனினும் தன் மகளிடம் பிரியமாகவே இருந்தார்.

சேகரன் அன்று வந்தபோது, நிர்மலா வீட்டு வாயிலில் நின்று கொண்டிருந்தாள். யாரோ அறிமுகமில்லாதவர்கள் தான் வருகிறார்களாக்கும் என்று உள்ளே போக எத்தனித்தவள், முகத்தைப் பார்த்ததும், அங்கேயே நின்று மிக மரியாதையாக,



ராமசாமிக் கவுண்டர் மிகவும் நல்லவர்தான். சேர்க்கையினால் கொஞ்சல் 'தண்ணீர்' போட்டும் பழகியிருந்தார். அடிக்கடி அருமை மகள் நிர்மலா சொல்வதையும் பொருட் படுத்துவதில்லை. பெயருக்கேற்ப நிர்மலமாகவும், நல்ல அழகியாகவும் விளங்கிய நிர்மலாவுக்கு இது ஒன்றுதான் பெருங் கவலை. தாயார் இருந்து பார்க்கக்கொடுத்து வைக்கவில்லை. தன் மகளிடம் தந்தை அளவு கடந்த பிரியம் வைத்திருந்தார்.

"அப்பாவையா தேடிக்ககாண்டு வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

இருவரும் ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தாலும், சிறு வயதில் ஒரே இடத்தில், ஒரே மரத்து நிழலில், ஒரே ஆற்றில் நீந்தியும், குதித்தும் விளையாடினவர்கள் என்றாலும் வயது அவர்களுக்கு இடையே திரையிடத்தான் செய்தது.

சேகரன், "ஆமாம்" என்று சொல்லிவிட்டு, வீட்டில் இல்லையாக்கும் என்று நினைத்து "சரி,

நான் வருகிறேன்" என்று புறப்பட்டான்.

உண்மையில் அன்று ராமசாமிக் கவுண்டர் வீட்டில்தான் இருந்தார். எக்கச் சக்கமான நிலைமையில் இருந்தார். பூலோகத்தில் இருந்தாலும் சொர்க்கத்தில் இருப்பதாக அவரது நினைப்பு! இந்தத் தர்ம சங்கடமான நிலையில் தன் தந்தையிடம் அழைத்துச் செல்ல அவளுக்கு விருப்பமில்லை.

போகும் போது திரும்பி என்னவோ சொல்ல முயன்றான். அவள் கண்களில் திரண்ட கருமேகத்தைக் கண்டதும் அவன் நெஞ்சம் துணுக்குற்றது. மௌனமாக நடந்தான்.

மறுபடி இரண்டொரு தரம் வந்த போது, "ஆகட்டும் பின்னால் பார்க்கலாம்" என்றே சொல்லி அனுப்பினார் கவுண்டர்.

ஒருநாள் மாலை, சேகரன் வந்த போது நன்றாகக் குடித்திருந்தார் கவுண்டர். அவர் கண்கள் கலங்கின. சேகரன் கொஞ்சம் உபதேசம் ஆரம்பித்தான். கவுண்டருக்குக் கோபம் எல்லையை மீறி விட்டது. மறுபடியும், "குடிக் காதீர்கள்" என்று கள்ளு புட்டியை எடுக்கப் போனான் அவன். இதற்குள் கவுண்டர் புட்டியைப் பிடுங்கி அவன் தலையின் மேல் ஓங்கி அடிக்க "ஐயோ!" என்ற சப்தத்துடன் கீழே விழுந்து விட்டான் சேகரன். கவுண்டரே நடு நடுங்கி விட்டார். அவ்வழியே வந்த போலீஸார் இச் சப்தம் கேட்டு உள்ளே வந்து கவுண்டரைக் கைதுசெய்து ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். சிகிச்சைக்கு அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். இச்செய்தி உடனே நிர்மலாவுக்கும் எட்டி விட்டது.

நிர்மலா ஆஸ்பத்திரிக்குச் சென்று சேகரைக் கண்டு நடு நடுங்கிப் போனாள். அவளே அவனுக்குச் சகாயத்திற்கு ஆஸ்பத்திரியில் இருக்கலானாள். மயக்கம் தெளிந்து, தான் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதை அறிந்தான்.

சிறிது நேரம் கழித்து நிர்மலாவைப் பார்த்து, "கவுண்டர் (தகப்பனார்) எங்கே" என்று கேட்டான். அவள் கண்களில் நீர் வழியத், தன் தகப்பன் சிறையில் இருப்பதை தெரிவித்தாள். கோர்ட்டில் விசாரணை செய்தார்கள். அவன் தன் வாக்குமூலத்தில் கவுண்டர் தன்னை ஒன்றும் செய்யவில்லை என்றும் தானே குடி மயக்கத்தினால் நிலை தடுமாறி பக்கத்திலுள்ள கல் தூணில் மோதிக் கொண்டு விட்டதாகவும் தகுந்த ஜோடனையுடன் சொல்லவே கவுண்டர் குற்றவாளியல்ல என்று விடுதலை செய்யப்பட்டார்.

கவுண்டர் வெளியே வந்ததும், முதலில் சேகரனைச் சென்று சந்தித்தார். "அப்பா சேகர், நடந்ததை மறந்து விடு. எந்தக் காரியத்திற்காக வந்தாயோ அதைச் செய். என் செல்வம் முழுவதும் – நிர்மலா உள்பட இனி உன்னுடையதே என்றார்."

சேகரன் கனவு நனவாகியதைக் கண்டு உள்ளம் பூரித்தான். விரைவாக அனாதை ஆஸ்ரமம் வளர்ந்தோங்கியது. அவர்கள் இருவருடைய, இளம் காதலர்களுடைய அன்பிலே மலர்ந்த இந்த விடுதி, சேவை செய்வதைத் தன் லட்சியமாக்கிவிட்டது.

எத்தனையோ பேர் வருகிறார்கள். ஆனால், ஒவ்வொருவர் உள்ளத்திற்கும் அது புதுக் காட்சி அளிக்கிறது. கதைகளும் புதிது புதிதாகத்தான் தோன்றுகிறது!

# மனத்துள் விளைந்த மாணிக்கம்

அ. கிருஷ்ணசாமி நாயுடு

மார்துற்ற மேனி வரையுற்ற வில்லி தில்லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில்காள் கழிகாளெழிற் புள்ளினங்கா
ளேதுற் றழிதியென்னீர் மன்னுமீர்ந் துறைவர்க் கிவளோ
தீதுற்ற தென்னுக் கென்னீரிதுவே நன்மை செப்புமினே.

இச்செய்யுள்தான் மனத்துள் விளைந்த மாணிக்கம். நிலத்தில் மாணிக்கங்கள் பிறக்கின்றன. கற்களோடு கற்களாய்க் கலந்து கிடக்கின்றன. அக்கற்களிலிருந்து ரத்தினங்களைப் பிரித்தெடுப்பர். மண்ணைக் கழுவுவர்; சாணையில் பிடிப்பர்; குணங் குற்றங்களை யாராய்ந்து தரம் பிரித்து வைப்பர். பின்னர் ஆபரணங்களில் வைத்து அழகு பார்ப்பர்; ஆனந்தம் கொள்வர். மண்ணோடு மண்ணாகக் கல்லோடு கல்லாகக் கிடந்த மாணிக்கத்தின் மாண்பை யறிந்த மதிவல்லவரால் சாணையில் பிடித்துச் சுத்தம் செய்து கொடுக்கப், பணிகளில் தேர்ந்த பொன் தட்டார் அணிகளில் வைத்துக் கொடுக்க, அம் மாணிக்கத்தின் மதிப்பை யாவரும் அறிந்து மகிழ்வர். அதைப் போல இம்மனத்தில் விளைந்த மாணிக்கத்தைப் பார்ப்போம்.

மாணிக்கங்களில் நன்றாக விளைவு பெற்ற மாணிக்கங்கள்தான் மாண்பைப் பெறுகின்றன. இம் மாணிக்கச் செய்யுளும் செவ்வனே விளைந்த மாணிக்கம். அம்மாணிக்கம் மண்ணில் விளைந்தது. இம் மாணிக்கம் மனதில் விளைந்தது. மண்ணில் விளைந்ததைக் கண்களால் கண்டு களிக்க வேண்டும்: மனதில் விளைந்ததை அறிவால் ஆராய்ந்து களிக்க வேண்டும்.

ஒரு ஆண் மகனும் பெண் மகளும் தம்முள் தாமே காதல் கொண்டனர். அக்காதலினால் சில நாள் கூடியிருந்தனர். பின்பு காதலன் ஏதோ ஒரு காரணமாகப் பிரிந்து போனவன் குறித்துப் போன காலத்தில் வரவில்லை. அதனால் காதலி காதலனைக் காண வேண்டுமென்னும் எண்ணம் நாளுக்கு நாள் அதிகமாயிற்று. தனது காதல் எண்ணத்தை வாய்விட்டு வெளியில் சொல்லாதிருக்கவும் முடியவில்லை. உள்ளத்தில் ஊறி ஊறிப் பெருகிய காதல் உடம்பில் தேங்கித் தேங்கிக் காமமாக மாறி விட்டது. எனவே வெளியில் யாருடனும் சொல்ல வேண்டுமென்றால் பச்சை பச்சையாக அன்றோ சொல்ல வேண்டும். என் காதலனைக் காண வேண்டும்; அவனோடு புணர வேண்டும் எனப் பச்சை மொழியில் தனது காம மிகுதியைச் சொல்லப் பெண் மக்களுக்கு மனம் வருமா? எவ்வளவு தான் காமம் தலைக்கு ஏறினாலும் பெண் மக்கள் தமது காமத் தன்மையை வாய் விட்டுச் சொல்லுதல் பெண் தன்மைக்கு மாறுபட்டதாகும்.

கடல் போன்ற காமத்தில் முழுகினாலும் பெண் மக்கள் தமது காமத் தன்மையை வாய் விட்டுச் சொல்ல மாட்டார் எனத் திருவள்ளு

வர் சொல்லுகின்றார். பெண்ணின் இயல்பைக் கடந்த பெண்களும் சிலர் உளர். அத்தகைய பெண்களில் ஒருவள் கம்பர் கற்பித்த சூர்ப்பனகை. அச்சூர்ப்பனகை சொல்லுகிறாள்.

"தாமுறு காமத் தன்மை தாங்களே நுவல்வது என்பது
ஆமெனல் ஆவது அன்றால் அருங்குல மகளிர்க்கு"

எனத் தன் காமத்தின் மிகுதியைச் சொல்லாதவள் போல ஸ்ரீராமனிடம் சொல்லுகிறாள்.

அச்சூர்ப்பனகை சொல்லுகிறபடியே நாணம் அச்சம் முதலியன உள்ள குலத்தில் பிறந்த பெண் மக்கள் தமது காமத்தின் மிகுதியை யாரிடம் சொல்லி ஆற்றுவர். அழுகையோ கோபமோ உள்ளத்தில் பொங்கி எழுகின்றது. அதை வாய் விட்டுச் சொல்லாமல் அடக்கி வைக்க முடிகிறதில்லை. அதனால் வாய் விட்டு அழுகிறார்கள்; வைகிறார்கள். ஒரு என்ஜினுக்குள் ஸ்டீம் அதிகமாகுமேயானால் என்ஜின் வெடித்துப் போகும். என்ஜின் வெடிக்காமலிருப்பதற்குத் தான் புகை போக்கி வைத்திருக்கின்றனர். அதைப் போல மக்கள் உள்ளத்தில் பொங்கிய வெப்பத்தால் உள்ளம் வெடிக்காமலிருப்பதற்காக வாய் விட்டுச் சொல்லுகின்றனர். உள்ளம் என்ற யந்திரம் துயரத்தால் வெடிக்காமலிருப்பதற்காக வாய் ஒரு புகை போக்கியன்றோ? ஆயினும் என்ன? உள்ளத்தில் பொங்கிய துயரத்தை எவ்விடத்தும் யாரிடத்தும் சொல்லுகின்றார்களா? அதுவும் பெண் மக்கள் தமது காம மிகுதியை யாரிடமேனும் சொல்வார்களா? சொல்லாவிட்டால் உள்ளம் வேகின்றது. வெடிக்கின்றது. சொல்லுவோமென்றால் வாய் என்ற புகைப் போக்கியை நாணம் என்ற கதவு மூடிக் கொள்ளுகின்றது. பாவம்! என் செய்வாள்! அப்பெண் மகள். சொல்லவும் முடியவில்லை; சொல்லாமலிருக்கவும் முடிய வில்லை. அதற்காக ஒரு தீர்மானம் செய்தாள். என்ன? வாய் விட்டுப் பேசும் மக்களிடம் சொன்னால் தானே வெளியில் சொல்லுவார்கள்; தூற்றுவார்கள். பேசாத பொருள்களோடு சொன்னால் யாரிடம் சொல்லும்! அதற்கு வாயெங்கே? என முடிவு செய்து கொண்டாள்.

இம்முடிவின் பேரில் தனது காதலனிருக்கும் ஊருக்குப் போனாள். அங்குள்ள மலர்ப் பொழில்களையும் கழிகளையும், பறவைகளையும் பார்த்துப் பேசத் தொடங்கினாள். ஆனால், தொடங்கிய உடனே அப்பொழிலாவது, கழியாவது, பறவையாவது வாய் விட்டுப் பேச மாட்டா என்பதை மறந்து விட்டாள். ஏன்? காமமிகுதி மறக்கச் செய்தது. வாய் விட்டுப் பேசுமென்றே நினைத்துக் கொண்டாள். அப்படி நினைத்தால் தானே மனதிற்கு ஆறுதலுண்டாகும். ஆகவே அவ்வணங்கு சொல்லுகின்றாள்.

ஒரு மாதை இடப்பாகத்தில் உடையவரும், இமைய மலையை வில்லாக உடையவரும் ஆன பரமசிவனுடைய தில்லை நகரைச் சூழ்ந்துள்ள மலர்கள் நிறைந்த சோலைகளே! தண்ணீருள்ள கழிகளே! பறவைகளே! என்னைப் பார்த்து எதற்காக வருத்தப்படுகிறாய் என்று கேட்காமலிருக்கிறீர்களே! என் மனதில் மன்னிய குளிர்ந்த துறையை

யுடைய எனது காதலனிடம் (பரமசிவனிடம்) இப்பெண் வருத்தப் படுகிறாள். அது எதற்காக எனச் சொல்ல மாட்டோம் என்கிறீர்கள்! இதுவா நல்ல தன்மை! சொல்லுங்களேன்! என்று சொல்லுகிறாள்.

இவ்வாறு பேசுவதை அகப்பொருள் இலக்கண நூலார் "காமம் மிக்க கழிபடர் கிளவி" என்பர். அஃதாவது:- தனது கணவனைக்காண வேண்டுமென்று வருந்துகின்ற மனைவி தனது வேட்கை மிகுதியினால் கேளாத பொருள்களை — கேட்கும் பகுத்தறிவில்லாத பொருள்களை — கேட்பனவாக நினைந்து அப்பொருள்களைக் கூப்பிட்டுப் பேசுவது. "கேட்பன போலவும் கிளக்குந போலவும் அஃறிணை மருங்கினும் அறையப்படுமே" என்பது கவிஞரின் மரபு.

இவ்வாறு எங்களைப் பார்த்துக் கேட்பதற்குக் காரணம் என்ன வென அப்பொழில்களும், கழிகளும், புள்ளினங்களும் கேட்டன. அதற்கு அப்பெண் சொல்லுகின்றாள். ஓ! பொழில்களே! நீங்கள் எனது காதலனுடைய தில்லை நகரைச் சூழ்ந்திருக்கின்றீர்கள். எனக்கும் என் காதலனுக்கும் உள்ள நட்பை நீங்கள் அறிவீர்கள். அறிந்தென்! நான் வந்து உங்கள் முன்னிலையில் நின்று உங்களை அழைத்து என் காம மிகுதியைச் சொல்லும் பொழுது, என் வருத்தப் படுகிறாய்? என்று ஒரு ஆறுதலும் சொல்லவில்லையே! அம்ம! சோலையே என்னைப் போல நீயும் மக்களை — பெண் மக்களை — பெற்றிருக்கிறாயே! அம்மக்களுக்கு மலர்களென்று பெயர் வைத்தனையே! அம்மலர்களும் நானும் ஒன்றன்றோ? என் வருத்தம் உனது மலர் மகளுக்கு நேர்ந்த வருத்தத்தைப் போல எண்ணப்படாதா? உனது மகள் கணவனைப் பிரிந்து வருத்தப்பட்டால் அவ்வருத்தத்தைப் பார்த்து உன் உள்ளம் உருகாதா! என் என்று கேட்க மாட்டாயா?" என்று இப்பெண் வினவினாள். அதனால் அச்சோலை அம்மாள் அகம் குழைந்து விட்டாள்! ஆ! இப்பெண்ணின் துயரத்திற்கு ஏதேனும் பரிகாரம் சொல்ல வேண்டுமே என்று ஏங்கினாள். அவ்வேக்கத்தில் ஒரு தெளிவு உண்டாயிற்று.

வருத்த முறும் பெண்ணைப் பார்த்துச் சோலை அம்மாள் சொல்லுவது:— காதல் நிறைந்த பெண்ணே! உனது காம மிகுதியைக் கண்டு வருந்துகின்றேன்! வருந்தி என் செய்ய? உனது கணவரிடம் சென்று சொல்லக் கூடாத நிலைமையில் அவர் வாழ்க்கை அமைந்து விட்டதே! என் செய்வேன்!

அப்பெண் — சோலை அம்மையே! சற்றுத் தெளிவாக சொல்லுவாயாக.

சோலை — பெண்ணே! உண்மைப் படுத்துவதற்குச் சாட்சி வேண்டுவதில்லை. நீயே பிரத்தியட்சமாகப் பார்த்துக் கொள்ளலாம். பார்; அவர் உடம்பில் — பரமசிவன் உடம்பில் பாதி பெண் வடிவமாய் இருக்கிறது; பார்.

பெண் — கழிகளே! நீங்கள் தான் சோலையைச் சுற்றியிருக்கிறீர்களே! நீங்களாவது எனது துயரம் என்ன என்று கேட்கப் படாதா? என் துயரத்தை எனது கணவரிடம் சொல்லக் கூடாதா?

கழிகள் — பெண்ணே! நாங்கள் சோலையைச் சுற்றியுள்ளது உண்மையே! உனக்குச் சொல்லுவதைப் போல எங்களுக்கும் சொல் லித் தடுத்து விடுகிறார்கள். ஆகையால் நாங்கள் எங்களிடம் இருக்கும் பறவைகளுடன் உனது நிலைமை எல்லாம் சொல்லியிருக்கிறோம். அது தான் எங்களால் முடிந்ததம்மா!

பெண் — (துயரத்திலுண்டான சினம் தணிந்து இப்பறவைகளால் எனது எண்ணம் நிறைவுறும் என மகிழ்ந்தவளாய்ப் பறவைகளைத் தட்டிக் கொடுத்துக் காரியம் சாதித்துக் கொள்வதற்காகப் பறவை களே என்று கூப்பிடாமல் அழகு என்னும் அடைமொழி சேர்க்கி றாள்.) அழகுள்ள பறவைகளே! உங்களுக்குப் பறக்கும் ஆற்றலுண்டு; அடிக்கடி என் கணவரிடம் போகலாம். எனது வருத்தமும் நேரில் கண்டிருக்கிறீர்கள். ஒரு நாளாவது, ஏன் அம்மா! துன்பப்படுகிறாய் என்று கேட்கவில்லையே, போகட்டும். எனது கணவரிடம், ஒரு பெண் வந்து நாள் தோறும் சோலைகளையும் கழிகளையும் எங்களையும் பார்த்துத் துயரப்படுகிறாள் உங்களிடம் அப்பெண் எதற்காகத் துன் பப்படுகிறாள், என்று கேட்கப்படாதா? எனது கணவர் ராஜாவா யிற்றே! யார் துயரப்பட்டாலும் விசாரிக்க வேண்டியது அவர் கட மையல்லவா? அவர் தம் கடமையை மறந்திருந்தாலும் நீங்களாவது அவருக்கு நினைவுறுத்தும் முறையிலேனும் சொல்லக் கூடாதா?

பறவைகள் — பாவையே! நீங்கள் சொல்லுவது உண்மையே. அவர் ராஜா மட்டுமன்று நடராஜா ஆவார். அவர் நடனத்தால் உல கமே இயங்குகின்றதென்பர். உனது துயரத்தை நாங்கள் நன்கு அறிவோம். அவர் ஆட்டத்தைக் கண்டு களிப்பதற்காக நாங்கள் அடிக்கடி தில்லை வனத்திற்குப் போவோம். போகும் போதெல்லாம் உங்கள் துயரத்தைச் சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டே போவோம். ஆட்டத்தில் ஆனந்தம் கொள்வோம். அருகில் போக அச்சம் கொள்வோம். உனது துயரத்தை அவருக்குக் கூறல் வேண்டு மென்ற ஆசை முன்னே தள்ளுகிறது. அவர் கையிலுள்ள வில் பின்னே தள்ளுகிறது. அச்சத்தை உண்டாக்குகின்றது. அம்ம! என் செய்வோம். அந்த வில்லை — இமைய வில்லை — கையில் வைத் துக் கொண்டு அம்புகள் தொடுக்காமலேயே திரிபுரங்களை எரித்து விட் டாராம். இனி அந்த வில்லிலிருந்து அம்புகளைத் தொடுத்து விட் டாலோ......... உனது துயரம் உனது உயிரை நடுக்குகின்றது; அவ ரது வில்லும் எமது உயிர்களை நடுக்குகின்றது. விழிக்கிறோம்; இரு தலைக் கொள்ளியின் எறும்பு ஆனோம்.

பெண் — பறவைகளே! பயப்பட வேண்டாம். அந்த வில் பகைவர்களை வீழ்விக்கும்; அன்பர்களை வாழ்விக்கும். இவ்வுண் மையை நீங்கள் அறிதல் வேண்டும். எனது கணவர் நடராஜர் இனிய குணமுள்ளவர். குளிர்ந்த அருள் உள்ளவர். இனியாவது நீங்கள் அச்சமின்றி எனது வருத்தத்தைச் சொல்லுவீர்களாக.

நான் இவ்வளவு துயரப்படுவதையும் கண்டு என் கணவரிடம் சொல்லாமலிருக்கும் இதுவோ நன்மை! நீங்களே சொல்லுங்கள்.

குளிந்த அருளுள்ளவர். ஆட்டத்தில் அல்லது ஆட்டுவிப்பதில் என்னை மறந்திருக்கலாம். அவ்வாறு மறந்திருப்பவரிடம் நீங்கள் அஞ்சாது சென்று தண் துறைவரே! ஆட்டத்திலும் ஆட்டுவிப்பதிலும் சிந்தை செலுத்திக் கொண்டு மனதுக்கினிய மனைவியை மறந்தீர் "இதுவோ நன்மை செப்புமின்" எனக் கேளுங்கள்.

உலகம் ஆண் வடிவமும் பெண் வடிவமும் ஆன ஒரு பிண்டப் பொருள் என்பதற்காக மாதைப் பாதியுடம்பில் வைத்திருக்கிறார். மேலும். காதலன் காதலியைத் தாழ்வாகக் கருதாமல் தனக்குச் சமானமாகக் கருதல் வேண்டும் என்பதற்காகப் பாதி உடம்பில் பெண்ணை வைத்திருக்கின்றார். மாதை இடப் பாகத்தில் வைத்திருந்தும் திரிபுரங்களை எரித்த போர் நினைவில் இருக்கின்றார். அதனால் இமைய வில்லைக் கையில் ஏந்தியுள்ளார் என்று எண்ண வேண்டாம் நீங்கள் போய் எனது வருத்த நிலைமையைச் சொன்னால் குளிர்ந்த துறையையுடையவர் அருள் செய்வர். இவற்றை எல்லாம் ஆராய்ந்து எனது கணவரிடம் சொல்லாமலிருக்கின்றீர்களே பொழில்களே! கழிகளே! புள்ளினங்களே! உங்களுக்கு இதுவோ நன்மை செப்புமினே!

இவ்வாறு ஆராய்ச்சிச் சாணை பிடிக்கப் பிடிக்கப் பிடிக்கப் பிரகாசப் பொருள்களைத் தந்து கலை இன்பக் காட்சி தரும் மாணிக்கத்தை மற்றும் கலைவாணர் ஆராய்வதற்காக - மாது உற்ற மேனி வரை உற்ற வில்லி தில்லை நகர் சூழ் போது உற்ற பூம்பொழில்காள்! கழிகாள்! எழில் புள்ளினங்காள்! ஏது உற்று அழிதி; என்னீர்; மன்னும் ஈர்ந் துறைவர்க்கு இவளோதீது உற்றது என்னுக்கு என்னீர் இதுவோ நன்மை! செப்புமினே எனப் பிரித்து வைக்கப்பட்டுள்ளது.

இச்செய்யுள் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் தெரிந் தெடுத்துக் கோர்த்த 400 மாணிக்கங்கள் உள்ள திருக்கோவையாரின் மாணிக்கங்களுள் 174 வது மாணிக்கம்.

★

## அனுபவம்

உண்மையான தத்துவம், கற்பனைச் சுரங்க மன்று அனுபவங்களின் மாணிக்கம்.

— விங்

# விமோசனம் ஏது?

பத்மாவதி ஜெகனாதன்

"விமோசனம் ஏது? இனி விமோசனம் என்பது மறுபிறவியில்தான். என் வாழ்க்கையில் நான் அடைந்த சுகம்தான் என்ன. துன்பத்திற்கே பிறப்பிடமான என்னை எதற்காகப் பிறப்பித்தாய்? ஈசா! என் மீது கருணை என்பது கிடையாதா? நான்தான் மகாபாபியாய் இந்த ஜன்மத்தை எடுத்திருந்தாலும் இந்த சிசு என்ன பாபத்தைச் செய்தது? அதை ஏன் என் வயிற்றில் பிறப்பித்தாய்? இவ்வளவு குழந்தைகளுக்குத் தாய் ஆனபிறகும் என் வாழ்க்கையில் விமோசனம் என்பது இல்லையே. நான் எதற்காக உயிருடன் இக்கொடிய உலகில் வாழ வேண்டும்? என் கண்ணெதிரில் நடக்கும் அக்கிரமங்களை எவ்வாறு சகித்துக்கொண்டு போவேன்? முடியாது, இனி என்னால் கொஞ்சம் கூடப் பொறுக்க முடியாது. ஏ; பவானித் தாயே! என் மேல் நீயாவது கருணை கூர்ந்து என்னையும் இச்சிசுவையும் உன் பாதாரவிந்தங்களில் ஏற்றுக் கொள்வாயோ? இல்லை இந்தப் பாவியை மறுத்து ஒதுக்கி விடுவாயோ? மாட்டாய். ஏன் என்றால் சகல உயிர்களுக்கும் தாய் ஆகிய நீ என்னை வெறுக்க மாட்டாய், என்னை இந்த மாய உலகிலிருந்து விடுதலை செய்வாய் தாயே?" என்று கண்களிலிருந்து கரை கடந்த வெள்ளம் போல் ஓடும் கண்ணீரை அடக்க மாட்டாது நெஞ்சை யழுத்தும் துக்கத்துடன் பலவாறு புலம்பிக் கொண்டிருந்தாள் கல்யாணி. அவள் கைகளில் ஒரு மாதம் கூட நிரம்பாத குழந்தை ஒன்றை அணைத்துக் கொண்டு உயர்ந்த பாறை முனையில் நின்றபடி இருகரையும் புரண்டோடும் வெள்ளத்தை கவனித்துக்கொண்டிருந்த காட்சி அவள் ஓர் வீராங்கனையோ அல்லது வன தேவதையோ என்று பயங்கரமாகத் தோன்றிற்று.

அந்தி மயங்கும் நேரம். வானத்தின் நாற்றிசையிலும் கரு மேகங்கள் கூட்டம் கூட்டமாக ஒன்றை ஒன்று தாக்கி ஓடலாயின. கண்ணைப் பறிக்கும் ஜோதியுடன் பளீர், பளீர் என்ற மின்னல்களும், சிறு சிறு தூற்றல்களும் காற்றுடன் வீசலாயின. திடீர் என்று ஓர் மின்னல். கைகளிலிருந்த சிசு ஓர் துள்ளுத் துள்ளித் தன் சின்னஞ் சிறு வாயைத் திறந்து சற்று சிரிக்கலாயிற்று. அதன் பால் வடிவும் முகம் கல்யாணியின் மனதை என்னவோ செய்தது. குழந்தையை குனிந்து ஓர் தடவை உற்று நோக்கினாள்.

அவள் மனம் கனிந்து உருகலாயிற்று. "சே! களங்கமற்ற இளம் குழந்தை! என்னே என் அறியாமை? இது என்னுடைய பொருள் அல்லவே. இதன் உயிரைப் போக்குவதற்கு நான் யார்? எவ்வளவோ அளவில்லாத பாவத்தைச் செய்து நான் படும் துன்பம் போதாதா? இதில் தற்கொலை செய்துகொண்டு பேயாய் அலைந்து, சிசுஹத்தியும் சேர்ந்து என்னை எந்த நரகத்திற்குக் கொண்டு சேர்க்குமோ. எவ்வளவு துக்கம் இருந்தாலும் இந்தப்

பால்வடியும் முகத்தின் முன் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து விடுமே. தாயே, என்னை மன்னித்து இந்தப் பாவச் செயலிலிருந்து விடுதலை செய் தாயே. உன்னை எவ்வாறு புகழ்வேன் தாயே. என்னை மன்னிப்பாய். இனி எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வேன் தாயே, என் குழந்தைகளின் முகத்திற்காக என் வாழ்வில் எவ்வித துயர்களையும் சகித்துக் கொள்வேன்" என்று மனதைத் திடம் செய்து கொண்டு பாறைகளையும் சிறு சிறு கற்களையும் தாண்டிக் கொண்டு வெகு வேகமாகத் தன் வீட்டை நோக்கிச் செல்லலானாள் மின்னல் ஒளியின் உதவியால் காரிருளில்.

வீடு நெருங்க நெருங்க அவளை அறியாமல் திகில் கொண்டு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் ஒரே நடுக்கம் கொள்ளலானாள். கொல்லைப்புற வழியாக மெதுவாக அடிமேல் அடி வைத்த வண்ணம் யாரும் அறியாமல் சமயற் கட்டிற்குப் போய்விட வேண்டும் என்று பதை பதைப்புடன் சென்றாள். கிணற்றங் கரையின் அருகில் சென்றவுடன் யாரோ பேசும் அரவம் கேட்டுச் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். அடடா! அவள் கண்ட காட்சி! அவள் மனம் திக்பிரமை கொண்டு ஓர் நிமிஷம் கற்சிலை போல் நின்றாள். அவள் உள்ளம் நடுங்கலாயிற்று. உலகமே தலை கீழாகச் சுற்றுவது போல் தோன்றின. தன் சுய உணர்வு பெற்றவளாய் தன்னை எங்கே கவனித்து விடப் போகிறார்களோ என்று தன் விதியை நொந்து கொண்டு உட்புறம் சென்று விட்டாள். குழந்தை அதுவரையில் தாயின் அணைப்பில் சுகமாக நித்திரை செய்து கொண்டிருந்தது. தொட்டிலில் குழந்தையைக் கிடத்தி விட்டுத் தன் கடமைகளைச் செய்யலானாள். ஆறு குழந்தைகள் ஓர் இடத்தில் அமர்க்களம் செய்து கொண்டிருந்தார்கள். சற்று பெரிய பசங்கள் மாடியில் படித்துக்கொண்டிருந்தனர்.

சிறியவர்கள் தங்கள் தாயைக் கண்டதும் "அம்மா! எங்கேம்மா போயிட்டே? அப்பா எங்களை அடித்து அந்த ரூம்லேதள்ளிட்டார். சித்தியும் எங்கேயோ போயிட்டா" என்று பெரிதாக ஆளுக்கொன்று சொல்லிக் கொண்டு ஆவலோடு தங்கள் தாயைச் சூழ்ந்து கொண்டார்கள். குழந்தைகளைக் கண்டவுடன் வாரியணைத்துக் கொண்டு பொங்கி எழும் மனவெழுச்சிகளை ஒருவாறு மறைத்துக் கொண்டு அவர்களைச் சமாதானம் செய்யலானாள். அவர்களுக்குச் சாப்பாடு போட்டுவிட்டு மற்ற வேலைகளையும் முடித்துக்கொண்டு கணவன் வருகைக்காக காத்திருந்தாள். அப்பொழுதுதான், வெளியே சென்ற அவள் கணவன் வீடு திரும்புவதற்குப் பத்து மணியாகும். கடிகாரத்தை நோக்கினாள். மணி எட்டுதான் ஆகியிருந்தது. சமயற் கட்டின் வாயிற்படியில் தலைப்பை விரித்துப் படுத்தாள். அவள் மனதில் எண்ணற்ற அலைகள் போன்ற எண்ணங்களும்தான் அன்று கண்ட காட்சியின் பயங்கரத் தோற்றமும் அவள் முன் தோன்றிக் கொண்டு ஒரே கிலி பிடித்துக் கொண்டது. "என்னை இந்தப் பூமி வெடித்து அப்படியே விழுங்கி விடலாகாதா. என்ன ஜன்மமெடுத்தேன். பிறந்தது

லிருந்து துயரத்தைத் தவிர வேறு ஒன்றும் அறியேனே. தாய் தந்தையற்ற என்னை மாமா எடுத்து வளர்த்தார். ஏதோ தன் சக்திக் குத்தக்கபடி மணம் செய்து கொடுத்தார். சிறு வயதில் மாமியின் கொடுமைகளை எவ்வளவோ சகிக்கலானேன். பிறகு விவாகமாகியதும் நமக்கு விடுதலை என்று மனக் கோட்டை கட்டலானேன். அந்தக் காலத்தில் என் மனதில் தோன்றிய இன்ப ஊற்றுகள் இன்று நினைத்தாலும் இன்பமாக இருக்கின்றன. ஆனால் விவாகமாகிப் புக்ககம் வந்தசில நாட்களிலேயே என் மனக் கோட்டைகள் இடிந்து விழுந்து தூள் தூள்களாய் சிதறியது. மாமி, நாத்திகளாகிய கொடிய விலங்குகளின் மத்தியில் காலம் செல்லலாயிற்று. இந்தத் தேகம் எவ்வளவு கொடுமைகளை ஏற்றுக் கொண்டது? எவ்வளவு வசை மொழிகளை ஏற்றுக் கொண்டிருப்பேன்? எல்லாம் இன்றுதான் போல் இருக்கிறது. என் மனதில் நினைத்துக் கொண்டாலும் என் உடல் நடுங்குகிறது.

ஒரு நாள் அடுப்பில் இலுப்பக் கரண்டியில் கடுகு கருகிப் போய்க்கொண்டிருந்தது. ஏதோ கவனப் பிசகாய் இருந்த நான் திடுக்கிட்டு எடுக்கப் போனேன். உடனே என் மாமியார் காளி தேவி போல் மாறி, "அங்கே எதையடி கவனித்துக் கொண்டிருந்தாய்? அடுப்பில் கடுகு தீய்ந்து போய் விட்டது. ஒங்கப்பன் வீட்டுச் சொத்தா? இல்லை; உன் பாட்டன் சம்பாதித்து வைத்ததா, மூதேவி!" என் பலவாறு திட்டியபடி குனிந்து கொண்டிருந்த என் சிரத்தின் மத்தியில் கரண்டியில் புகைந்து கொண்டிருந்த கடுகு முழுவதையும் கொட்டி விட்டாள். ஆவென்று அலறித் துடித்தேன். "ஈசா உனக்குக் கருணை என்பது இல்லையா?" என்று கதறலானேன். அங்கும் இங்கும் ஓடித் தத்தளித்தேன். தலையின் மத்தியில் ஒரே நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது. என் அவஸ்தயைக் கண்டு அந்தப் பாபிகளின் மனதில் சற்றுவது இரக்கம் இல்லையே. அதற்குப் பதில் நீலி என்றும் பாசாங்குக்காரி என்றும் அளவில்லாத வசை மொழிகளைப் பொழிந்த வண்ணம் இருந்தார்கள். துடித்து, துடித்து என் நினைவை இழக்கலானேன். கொல்லைப் புறத்தின் தாழ் வாரத்தில் படுத்திருந்த என்னை ஏன் என்று கேட்பாரில்லை. மாலையில் வீடு கூட்டும் கிழவி பார்த்து விட்டு, "ஐயோ, பாவிங்களா இப்படி யாருனைச்சியும் செய்வாங்களா? என்ன அக்கரமாவல்ல இருக்குது. இவுங்க மனுச ஜன்மங்களா ராச்சசிங்களா?" என்று பதறிப் போய் ஏதேதோ பச்சிலைகளைக் கொண்டு தலையில் கட்டினாள். அந்த ரணம் ஆறுவதற்கு ஒரு மாதத்திற்கு மேல் ஆயிற்று.

இது ஒன்றா! என் தேகம் முழுவதும் நான் அடைந்த கொடுமைகளின் ஞாபகச் சின்னமாக விளங்கும் தழும்புகள் கணக்கிலடங்கா. இவையெல்லாம் ஒருவாறு சகித்துக் கொண்டாலும் என்றும் கைவிடேன் என்று கைப்பற்றிய கணவன் யாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தும் என்னை ஏன் என்று கூடக் கேட்காது அலக்ஷியம் செய்து தள்ளுவதை என்னல் எவ்வாறு சகிக்க முடியும். என்னிடம் தன் மிருக இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் தன் சுயநலனை உத்தேசித்தும் ஓர் ஊழியக்காரியாய் நினைத்து நடத்தி வருகிறரே

தவிர இன்று வரையில் என்னிடம் ஒரு அன்பான வார்த்தை பேசி இருக்கமாட்டார். இந்த வீட்டில் வந்த நாள் முதல் உழைத்து ஓடாய்ப்போனேன். இவ்வளவு துன்பங்களை அனுபவித்தும் இன்னும் உயிர்மட்டும் போகவில்லையே. வருஷத்திற்கு ஒரு குழந்தையைப் பெற்று என் உடலில் மிச்சம் இருப்பது இந்த ஜீவன் ஒன்றுதான். குழந்தைகளின் முகத்திற்காக இந்த உயிரையும் போக்கிக் கொள்ள மனம் துணியவில்லை. என் கணவர் நடத்தைகளோ வரவர மோசமாய்ப் போய்க் கொண்டே இருக்கின்றன. இவ்வளவு குழந்தைகளின் தந்தையாய் விட்டுக்கூட தன்னுடன் பிறந்த குணத்தை விடாமல் இருக்கிறார். குழந்தைகள் கவனித்து விட்டால் அவைகளின் தூய ஹிருதயங்களில் எவ்வாறு நினைக்கும். துர்க் குணங்களையே உருவாகக்கொண்ட கணவருடன் எவ்வளவு காலம் வாழ்ந்து கொண்டிருப்பேன்" என்று தன் நினைவு இழந்தவளாய் புலம்பிக் கொண்டும், கண்ணீர் காட்டாற்று வெள்ளம் போல் பெருக விட்டுக் கொண்டும் தரையில் கிடந்தாள்.

வெளியில் சென்றிருந்த அவள் தங்கையாகிய மீனு பக்கத்து வீடுகளில் வம்படித்துக் கொண்டு இருந்துவிட்டு மெள்ள வீடு வந்து சேர்ந்தாள். கல்யாணியின் உதவிக்கு வந்தவள் மீனு. பால்யத்தில் தன் கணவனை இழந்தவள். நல்ல வளர்ச்சியான மேனியும், வசீகரமான முகமும் காண்பவர்களைத் தன் வசமாக்கும் யௌவனத்தின் சோபையும் மெருகிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சற்றேறக் குறைய இருபது வயதுதான் இருக்கும். விவாகமாகி சில வருடங்களில் புருஷனை இழந்து வீடு வந்துவிட்டாள், கல்யாணி மீனுக்ஷியிடம் மிகுந்த அன்புடையவள். அவள் இவ்வளவு சிறு வயதில் இந்தக் கோலம் அடைந்து விட்டதை நினைத்து நினைத்து வருந்துவாள். மீனுவின் சுபாவம் ஒரு மாதிரியானது. உல்லாசமாகப் பொழுது போக்குவதில் மனதை உடையவள். வீட்டு வேலைகளில் கவனம் கிடையாது. வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடுவாள். கல்யாணியின் கணவன் ராமமூர்த்தியுடன் வெகு தாராளமாகப் பேசுவாள். தன் கணவனின் மனப் போக்கை அறிந்த கல்யாணி, மீனுவை ஜாடையாகக் கண்டிப்பாள். ஆனால் கணவனின் அவமதிப்புக்கு ஆளாகிய அப்பேதையின் மொழிகள் யார் செவியிலும் ஏறுவதானே?

மீனு உள்ளே வந்ததும் கல்யாணி வெறுந் தரையில் படுத்திருப்பதைக் கண்டு "அக்கா, அக்கா, எழுந்திரு; இப்படி ஜில் என்று இருக்கும் வெறும் தரையில் படுத்துக் கொண்டு இருக்கிறாயே? இந்த மழை காலத்தில் உன் உடம்புக்கு ஆகுமா?" என்று வினவியவாறு கல்யாணியை எழுப்பினாள்.

கல்யாணியின் சிந்தனை கலைந்து திடுக்கிட்டவளாய் எழுந்து "அவர் இன்னமும் வரவில்லையா? நீ எங்கு சென்றிருந்தாய் இவ்வளவு நேரம்?" என்று வினவினாள்.

"எதிர் வீட்டுப் பாலம் மாமியிடம்தான் கொஞ்சம் பேசிக் கொண்டிருந்தேன். வேறு போக்கிடம் ஏது, அக்கா?" என்றாள்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ராமமூர்த்தி வந்து

197254



விட்டான். அவன் வந்த சற்று நேரத்திற்கெல்லாம் சாப்பிட உட்கார்ந்தான். அவன் முகத்தில் முழிப்பதற்கு கூச்சமுள்ளவளாய் கல்யாணி தன் குழந்தைக்குப் பால் கொடுக்கச் சென்று விட்டாள். மீனா வந்து பரிமாறினாள். தன் மனைவிதான் பரிமாறுகிறாள் என்று எண்ணியவனாய்க் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஏதோ எண்ணியபடி தலை நிமிர்ந்து நோக்கினான். மீனாதான் என்று தெரிந்ததும் அவன் உள்ளத்தில் எழுந்த மன வெழுச்சிகளை முகம் தெளிவாய் காட்டின. மீனாவின் தேகத்தில் உள்ள ஏதோ ஓர்வித கவர்ச்சியில் மனதை லயிக்க விட்டவனாய் உற்று நோக்கினான். மனிதர்களைவிட மிருகங்கள் எவ்வளவோ அறிவுடன் வாழ்கின்றன! வளர்ப்பானேன்! மீனாவின் செழிப்புற்ற யௌவனத்தின் வேகம் தன்னை மறக்கச் செய்தது. ஒருபுறம் தன் சகோதரிக்குத் துரோகம் செய்வது போன்ற உணர்ச்சி மனதை சித்தரவதை செய்தது. உலகம் தன்னை எவ்வாறு தூற்றும்? என்ற பயங்கர எண்ணம் கண் முன் தோன்றலாயிற்று. பேதை தன் மனதையும், உயிரினும் இனிய கற்பையும் உணர்ச்சியின் வேகத்தில் தன்னையும் மறந்து பறி கொடுக்கலானாள். அந்தோ, பரிதாபம்! எல்லாம் இயற்கையின் ஆட்சியின் ஓர் பகுதி.

இரண்டு வருடங்கள் ஓடி மறைந்தன. ராமமூர்த்தியின் நாடகங்களுக்கு முடிவு தோன்றலாயின. ஜெனரல் ஆஸ்பத்திரியின் வார்டில் தேக முழுவதும் தான் செய்த பாவத்தின் சின்னமாய் விளங்கிய பிணிகளின் பாதையை அனுபவித்துக் கொண்டு ஓர் கட்டலின் மீது கிடத்தப் பட்டிருந்தான் — ராமமூர்த்தி. தான் செய்த வினை கண்முன் பயங்கர ஸ்ரூபங்களாகத் தோன்றி அவன் மனதை வதைக்கலாயின. தன் உத்தம மனைவியை ஓர் யந்திரம் போல் நடத்தி வந்ததையும், தன்னால் எவ்வளவு குடும்பங்கள் சீர் குலைந்து பரிதவிக்க நேர்ந்ததையும் நினைக்கவே தன்னால் கை விடப்பட்ட பெண்கள் கோர சாபம் இடுவது போன்ற உணர்ச்சியினால் அவன் மனது நரக வேதனையை அனுபவிக்கத் தொடங்கிற்று. அவன் எப்படி இருந்தாலும் கல்யாணி கொஞ்சங்கூட அரூயை கொள்ளாமல் அவன் அருகில் இருந்து கொண்டு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வரலானாள். அப் பேதையின் மனம் தன் நாதன் சௌக்கியமாய் எழுந்திருக்க வேண்டுமே என்ற கவலையுடன் தவித்தது. டாக்டர் வரும் பொழுது, "டாக்டர், என் கணவர் சௌக்கியமாய் விடுவாரா? எனக்கு மாங்கல்ய பிக்ஷை கிடைக்குமா? டாக்டர், நான் பெரிய சம்சாரி, எங்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும்" என்று பலவாறு கெஞ்சுவாள்.

பேதைக் கல்யாணியின் துயர் யார் மனதைத்தான் உருக்காது? இயற்கையிலேயே உத்தம குணம் உள்ள டாக்டர் கல்யாணியின் பரிதாபகரமான முகத்தை நோக்கி, "அம்மா, ஏதோ என்னால் முடிந்த வரையிலும் நான் பார்க்கிறேன். எல்லாவற்றிற்கும் கடவுளை நம்பி இரு. நம் கையில் என்ன இருக்கிறது?" என்றார். ஒரு வாரத்தில் கணவனின் பிணி அதிகரிக்கலாயின. இரவு, பகல் அவன் கூடவே இருந்து வந்தாள். டாக்டர்கள்

பிழைப்பது கடினம் என்றூர்கள். அவள் மனம் அனலிடை மெழுகு போல் உருகலாயிற்று. ஓர் நாள் இரவு சுமார் இரண்டு மணி இருக்கும். கணவனின் தலைமாட்டில் துயரமே வடிவாக உட்கார்ந்து கொண்டு அவன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். உலகமே நித்திரையில் ஆழ்ந்திருந்தது. திடீர் என்று கல்யாணியைத் தன் சமீபம் வரும்படி சைகை செய்தான் ராமமூர்த்தி. கல்யாணியின் கரங்கள் இரண்டையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, அவன் நெஞ்சுக்குள்ளிருந்து வெடித்து விடும் போல் குமுறிக் கொண்டு வந்த சொற்கள் இவைதாம், "கல்யாணி! இப்பாவியை மன்னிப்பாய்." மறுநிமிடம் அவன் ஆத்மா நிச்சஞ்சலமான நித்திரையை அடைந்தது.

ஏழைக் கல்யாணியிடம் கடவுள் கூட இரங்கவில்லை. இப்பொழும் உலகில் ஏழெட்டு ஜீவன்களுடன் எங்கு செல்வாள் பேதை! உலகமே இருள் மயமாய்த் தோன்றின. கல்யாணியின் துயரங்களுக்கு முடிவுதான் ஏது? அவளைத் தேற்றுபவர் யார்? கணவனின் முகத்தை உற்று நோக்கிய கல்யாணியின் மார்பு வெடித்துவிடும் போன்ற துக்கத்துடன், "எனக்கு விமோசனம் ஏது? விமோசனம் ஏது?" என்று அவள் வாயிலிருந்து மெதுவாகப் புறப்பட்டன சொற்கள்.

★

# மலரின் இன்பம்

துப. வீ. சுப்பிரமண்யம்.

அதிகாலை துயிலெழுந்தேன்.
ஆதவன் உதிக்கக் கண்டேன்.
அருணன் ஒளி வீசிப் பரப்பினுன்
மல்லிகை மலரக் கண்டேன்
மலரின் சுகந்த வாசம் வழி எங்கும்.
மல்லிகை வாசனையில் லயித்திருந்தேன்
மதியின் ஒளிகண்டு மனம் மகிழ்ந்தேன்.
'தொழில் செய் கடமை புரி'
என்ற அமர வாக்கு;
உள்ளத்தில் மெல்ல ஒலித்தது
நெஞ்சம் குழைந்து நிம்மதி நிறைந்தது.
இயற்கை ரகசியம் இதுவே போலும்!

# அலையும் கலையும்

ஆர். கே. விசுவநாதன் எம். ஏ.

அலைக்கும் கலைக்கும் என்ன சம்பந்தம் என்று தோன்றும். ஓவியனுக்கு இன்றியமையாதவை வர்ணங்கள். வர்ணங்களுக்குக் காரணம் பல நிற ஒளிகள். இதைப் போல சங்கீதக் கலைக்கு இன்றியமையாதவை ஒலிகள். பல நிற ஒளிகளும், பலவித ஒலிகளும் அலைகள் அன்றி வேறில்லை. இதுதான் அலைக்கும் கலைக்கும் உண்டான சம்பந்தம். அலையை அறிந்து விட்டால் உடனே கலை உணர்ச்சி உண்டாகி விடும் என்பதில்லை.

ஒவ்வொரு கலைக்கும் இரண்டு அம்சங்கள் உண்டு. ஒரு சித்திரத்தைப் பார்க்கும்போது முதலில் அதன் உருவ வித்தியாசங்கள், வர்ணத்தினால் உண்டான வேற்றுமை இவற்றைத்தான் நாம் கவனிக்கிறோம். இதைப் போல ஒரு பாட்டைக் கேட்கும்போது அதில் அடங்கியுள்ள ஒலிகளின் சுருதி, முழக்க பேதங்களைதான் முதலில் கவனிக்கிறோம். இது ஒரு அம்சம். இதில் உணர்ச்சிக்கு இடமில்லை. எனவே இதை objective side என்று சொல்லுவார்கள். சித்திரத்தில் கண்ட உருவ பேதங்கள் வர்ண வித்தியாசங்கள் நம்முடைய மனக்கண் முன்னால் ஏற்படுத்திய பாவ உணர்ச்சி கலையின் மற்றோர் அம்சம். சித்திரத்தைப் பார்க்கும்போது ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட உணர்ச்சி வேகம் தோன்றும். எனவே இதை Subjective side என்று சொல்லுவார்கள்.

கலையை ரஸிப்பதற்கு பாவ உணர்ச்சிதான் முக்கியம் என்றபோதிலும் முதல் அம்சத்தை நாம் புறக்கணித்து விடமுடியாது. ஒரு பாட்டை நன்றாக ரஸிப்பதற்கு அதன் ராகம், அது அமைந்துள்ள வர்ணமெட்டு, தாளம் இவையும் முக்கியமாக இருப்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். எனவே ஒளிகளைப் பற்றியும், ஒலிகளைப் பற்றியும் அறிந்தால்தான் கலையுணர்ச்சியை நாம் முற்றிலும் அடையலாம். முதலில் அலையின் கலையை பார்த்து விட்டு அலைக்கும் கலைக்கும் உண்டான தொடர்பை பின்பு ஆராய்வோம்.

சமுத்திரக் கரையில் நின்று கொண்டு அலைகளின் தோற்றத்தை பலர் ரஸித்திருக்கலாம். அல்லது சாயந்திர வேளையில் உலாவவென்று குளக்கரையிலோ அல்லது ஏரிக்கரையிலோ உட்கார்ந்து கொண்டு நீரில் கல்லை விட்டெறிந்து, வட்டம் வட்டமாக அலைகள் போவதை ரஸித்திருக்கலாம். கல் விழுந்த போது உண்டான ஒலி காற்றில் அலைகளாகப் பரவியே அவர்கள் காதில் விழுந்தன. மற்றும் அவர்கள் பார்த்ததும் அலைகளின் உதவியைக் கொண்டுதான். எங்கும் வியாபித்திருக்கும் விசும்பில் (Ether) உண்டான அலைகள்தான் இவர்கள் கண்ணில் உண்டான புலன் உணர்ச்சிக்குக் காரணம்? நாம் பார்ப்பது கேட்பது எல்லாம் அலைகளினால்தான். ரேடியோ

அலைகளைக் கிரகிக்கும் "ரேடியோ செட்டு"களைப் போல நம் கண்களும், காதுகளும் ஒளி அலைகளையும், ஒலி அலைகளையும் கிரகிக்கின்றன. நீர் அலைகள், காற்று அலைகள், விசும்பு அலைகள் இவைதான் எல்லா இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் காரணம். இவற்றை அறிந்துவிட்டால் இயற்கையை முற்றிலும் அறிந்து விட்டதாகக்கூடச் சொல்லி விடலாம்.

சமுத்திரக் கரையில் நாம் காணும் அலைகளைச் சற்று உற்று நோக்கினால் அவற்றைப் பற்றிய சில விவரங்கள் தெரியவரும். தூரத்திலிருந்து கரையை நோக்கித் தண்ணீர் ஓடிவருவதுபோல தோன்றும் காட்சி உண்மைத் தோற்றமன்று என்பது விளங்கும். கரையை நோக்கி ஒருவித நெளிந்த அசைவு மட்டும் ஓடி வருவதைக் கவனிக்கலாம். கரைக்குச் சற்று தூரத்தில் மரக்கட்டை ஒன்றை மிதக்கவிட்டு அதுமேலும் கீழுமாக அமுங்குவதைப் பார்க்கலாம். தண்ணீர் ஓடிவரும் பக்ஷத்தில் மரக்கட்டையும் அல்லவா கரையை நோக்கி ஓடிவர வேண்டும். இந்த நெளிந்த அசைவில் ஓர் உயர்ந்த பாகமும் அதை அடுத்து ஓர் தாழ்ந்த பாகமும் முறையே மாறி மாறி ஒன்றையொன்று பின் தொடர்ந்து வருவதைக் கவனிக்கலாம். உயர்ந்த பாகத்தை முகடு (Crest) என்றும் தாழ்ந்த பாகத்தை அகடு (Trough) என்றும் கூறுவார்கள். ஒரே வேகத்துடன் வந்து கொண்டிருந்த அகடும் முகடும் கரையை நெருங்கியவுடன் அவற்றின் வேகம் மாறுபடுவதைப் பார்க்கலாம். கரைக்குச் சமீபத்தில் ஆழமில்லாததால் அங்குள்ள தரை அகட்டின் வேகத்தை அதாவது அலையின் தாழ்ந்துள்ள பாகத்தின் வேகத்தைக் குறைக்கின்றது. இதனால் முகடு அகட்டைவிட அதிக வேகத்துடன் செல்லுகிறது. உடனே பாம்பு படமெடுத்து சீறி விழுவதுபோல தண்ணீர் உயரக் கிளம்பி சுருண்டு கீழே விழுவதை பார்க்கிறோம்.

அலைகளுடன் தண்ணீர் ஓடிவரவில்லை என்றாலும் ஆங்காங்கு உள்ள நீர்த் துளிகளில் அவற்றின் இருப்பிடங்களில் இருந்துகொண்டே வட்டங்களில் சுழன்று ஓடி வருகின்றன. இவ்வட்டங்களின் உச்சியில் நீர்த்துளிகள் வரும்போது அவற்றின் இயக்கம் கரையை நோக்கி இருக்கும்; வட்டங்களின் அடியில் செல்லும்போது இதற்கு எதிர்ப்புறமாக அவற்றின் இயக்கம் அமைந்திருக்கும். இவ்விஷயம் சமுத்திரத்தில் நீந்திசென்றவர்களுக்கு சுலபமாக புலப்படும். ஒருவன் அலைகளின் மீது நீந்திச் செல்லும்போது கரையை நோக்கியும் உடனே அதற்கு எதிர்ப் புறமாகவும் இழுக்கப்படுவான்.

பின்னே இழுக்கும்போதுதான் நன்றாக நீந்த தெரியாதவர்களுக்கு ஆபத்து நேரிடும். இவ்வட்டங்களின் விட்டத்தினளவு Diameter முகட்டின் உச்சி அகட்டிலிருந்து வேறுபடும். இதில் பாதியைதான் அலையின் உயரம் என்று கூறுவார்கள். சமுத்திரத்தில் நாம் பார்க்கும் அலைகளின் உயரம் அதிகம். ஆனால் ஏரி, குளம் முதலிய நீர்த்தேக்கங்களில் இத்தகைய அலைகள் ஏற்படா. இங்கு உயரம் குறைவான சிற்றலைகள்தான் தோன்றும். அலைகளில் நீளம் அதிகமான அலைகளும் உண்டு; நீளம் குறைவான அலைகளும் உண்டு. அலையின் நீளம் என்பது ஒரு முகட்டிற்கும் அதற்கு அடுத்துள்ள முகட்டிற்கும் உண்டான தூர

த்தைக் குறிக்கும். இதைப்போல அடுத்தடுத்துள்ள இரண்டு அகடுகளின் இடைத் தூரத்தையும் அலை நீளமாகக் கொள்ளலாம். சாதாரணமாக நாம் சமுத்திரத்தில் காணும் அலைகளின் நீளம் அடிக் கணக்கில் இருக்கும். அலைகளின் வேகம் அதன் நீளத்தை ஒட்டி வேறுபடும். இது நீரில் செல்லும் அலைகளுக்கு மட்டிலும்தான் காணப்பட்டது. காற்றிலும், விசும்பிலும் செல்லும் அலைகளின் வேகம், அலை நீளத்தை ஒட்டி மாறுபடுவதில்லை. அலையின் நீளம் அதிகரிக்கும்போது நீரில் செல்லும் அலைகளின் வேகமும் அதிகரிப்பதைப் பார்த்தார்கள். சமுத்திரத்தில் செல்லும் அலைகளின் வேகம், ஏரி, குளம் இவற்றில் செல்லும் அலைகளின் வேகத்தைவிட அதிகமாயிருக்கும். இவ்விரண்டு வகை அலைகளும் எவ்வாறு உண்டாகின்றன என்று இப்பொழுது பார்ப்போம்.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு நிறை உண்டு என்று அனைவரும் அறிவார்கள். இரண்டு பொருள்களினிடையே அவற்றின் நிறைகளுக்கு ஏற்ப ஓர் கவர்ச்சி சக்தி தொழிற்படுகிறது. இதற்கு 'பொருட் கவர்ச்சி சக்தி' (Gravitation attraction) என்று பெயர். காந்த கவர்ச்சி சக்தியைப்போல இதுவும் ஓர் சக்தி. பூமியின் நிறை மிக மிகப் பெரியதாகையால் அதன் மீதுள்ள எல்லா பொருள்களும் பூமியால் கவரப்படுகின்றன. இத்தகைய கவர்ச்சி சக்தியினால்தான் சூரியனைச்சுற்றி மற்ற எல்லா கிரகங்களும் ஓடி வருகின்றன. இதே காரணத்தினால்தான் பூமியைச் சுற்றி சந்திரனும் ஓடி வருகின்றது. பூமியின் மேற்பரப்பின் முக்கால் பாகம் தண்ணீர். இத் தண்ணீர்த் தேக்கம் தான் சமுத்திரம். பூமி சூரியன், சந்திரன் இவ்விரண்டின் கவர்ச்சியினாலும் பாதிக்கப் படுகிறது. சூரியன், சந்திரனைக் காட்டிலும் மிகப் பெரிய நிறையுள்ள பொருளான போதிலும், பூமிக்கு சமீபத்தில் சந்திரன் இருப்பதால் சூரியனைக் காட்டிலும் சந்திரன் தான் இத்தண்ணீர்த் தேக்கத்தை அதிகமாகக் கவருகின்றது. இக் கவர்ச்சியின் விளைவாகவே சமுத்திரத்தில் அலைகள் உண்டாகின்றன.

ஏரி, குளம் முதலிய இடங்களில் உண்டாகும் அலைகளுக்குக் காரணம் 'பொருட் கவர்ச்சி' அன்று. நீர்ப்பரப்பு ஒரு தோலைப் போல பிகுவாக அமைந்திருக்கிறது. அது எப்பொழுதும் சுருங்கப் பார்க்கிறது. ஒரு 'பிரஷை' (Brush) தண்ணீரில் முழுக்கி எடுத்தால் அதன் மயிர்களெல்லாம் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு சேர்ந்திருப்பதை பார்க்கலாம். மயிர்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் தண்ணீரின் பரப்பு சுருங்குவதால் மயிர்களெல்லாம் ஒட்டிக் கொள்ளுகின்றன. நீர்ப் பரப்பு பிகுவாய் இருப்பதினால்தான் லேசான பொருள்கள் அதில் அமுங்குவதில்லை. ஒரு சின்ன ஊசியை நீரில் சுலபமாக மிதக்கவிடலாம். சில சமயம் நீரில் அனேக பூச்சிகள் அங்குமிங்கும் ஓடுவதை பார்க்கலாம். பரப்பின் பிகு அவற்றைத் தாங்கிக் கொள்ளுவதால் பூச்சிகள் அமுங்காமல் ஓடுகிறன்ன. சிறிது எண்ணெயை நீர் பரப்பில் விட்டால் பூச்சிகள் அமுங்குவதை பார்க்கலாம். எண்ணெயினால் நீர்ப்பரப்பின் பிகு குறைந்து விடுகிறது. ஆகவே பூச்சிகளின் நிறையை தாங்க மாட்டாமல் நீர்ப் பரப்பு, எண்ணெய் விழுந்த இடத்தில்

விலகுவதால் பூச்சிகள் அமுங்கி விடுகின்றன. தேங்கி நிற்கும் சாக்கடை முதலிய இடங்களில் கொசு முட்டைகளை இம்மாதிரி எண்ணெயை பீச்சித்தான் அவற்றைக் கொல்லுகிறார்கள். சமுத்திரத்தில் அலைகள் உயரக் கிளம்பிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் போது எண்ணெயைக் கொட்டி கொந்தளிப்பை அடக்கி விடலாம் என்று சொல்லுவார்கள். ஆனால் இதற்கு எண்ணெய் ஏராளமாக வேண்டியிருக்கும். நீர்ப் பரப்பிலுள்ள இத்தகைய பிகுவினால் தான் ஏரி, குளம் இவற்றில் அலைகள் உண்டாகின்றன. இவற்றின் நீளமும், உயரமும் சமுத்திரத்தில் தோன்றும் அலைகளின் நீளத்தையும், உயரத்தையும்விட மிக குறைவாக இருக்கும். ஆகவே சமுத்திரத்தில் உண்டாகும் அலைகளுக்கு காரணம் "பொருட் கவர்ச்சி" என்றும், ஏரி, குளங்களில் உண்டாகும் அலைகளுக்குக் காரணம் "நீர்ப் பரப்புப் பிகு" என்றும் உணரலாம்.

★

# கண்ணீர்

கே. ஸ்ரீனிவாசன். எம், எஸ்ஸி.

குளத்தின் பளிங்குப் பரப்பினிலே
நிம்மதியான நள்ளிரவில்
விழுந்து சிதரும் முத்துக்கள்.

விரிந்து செல்லும் சிற்றலைகள்
இருட்டின் ஓரத்தில் மறையும்;
நடு நிசிக் கடலில் அலைபோல.

இருண்ட துக்கத் தண்ணீரில்
விழுந்து சிதரும் நீர்த்துகள்;
நடு நிசிக் கடலில் மழை போல.

ஆயினும் அதனுடைய ஆழத்தில்
கண்கள் அறியாக் கவலைகளும்,
உலகம் அறியா வேதனையும்,
அடக்கத்துடனே ஆட்சி செயயும்;
நடு நிசிக் கடலின் அடிபோல.

# காதலியின் தியாகம்

அரு. பாபனுசம்

மாலைக் கன்னி முல்லை மலர்ப் பற்கள் காட்டிச் சிரித்தாள்.

அவன்......

ஒரு கவிஞன். தன் காதலியைச் சந்திக்க மணல் பரப்பிலே அமர்ந்திருந்தான்.

மாலைக்கன்னி அவனுள்ளச் சுவரில் பல எண்ண ஓவியங்களைக் கிறுக்கினுள்.

அந்தஓவியங்கள் அவனைப் பெருமூச்சலைகளைக் கிளப்பச் செய்தது.

திடீரென்று......

அவன் கண்கள் மறைக்கப் பட்டன.

அவன் எண்ணங்கள் பாழ் பட்டன.

"செல்விழீ! கரங்களையெடு விளையாட்டுப் போதும்" என்ருனவன்.

சிவந்த மலர்களை ஒத்த கரங்கள் எடுக்கப்பட்டன கண்களிலிருந்து.

"என்ன? இயற்கை அழகில் உள்ளத்தை பறிகொடுத்து விட்டீர்களா?"

இது செல்விழியின் சொல்லலைகள்.

"ஆமாம் செல்விழீ! இந்த இயற்கை என் நெஞ்சில் பல எண்ணக் கட்டிடங்களை கட்டி விட்டது. வேறென்றுமில்லை......... ஆமாம் நீ அப்பொழுதே வந்து விட்டாயோ?"

"என் அதைக் குறிப்பாகக் கேட்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை. உன் செந்தாமரைப் பாதங்களை மேலும் சிவப்பாக்கி விட்டேனேயென்று கவலைப்படுகிறேன்"

"உங்களுக்கு எப்பொழுது பார்த்தாலும் குறும்புதான்"

"குறும்பில்லை செல்விழீ. உண்மையைத்தானே உரைக்கிறேன்"

"போதுமுங்கள் வர்ணனை"

செல்விழி இந்த வார்த்தையைக் கூறிக்கொண்டே அவன் கன்னத்தைத் தட்டினுள்.

அவர்கள் சிறிது நேரம் உள்ளங்களைப்பேச விட்டனர்......

அவர்கள் உள்ளங்கள் பேசுவதைக் கேட்க ஆவல்படுவது போல் தென்றல் அவர்கள் ஆடைகளை அலைத்தது.

ஆனல் அந்த இரகசியங்களைத் தென்றல் கேட்டு விடக்கூடாதென்று செல்விழியின் கூந்தல் நெஞ்சிலே விழுந்தது......

மௌனத்திரையைக் கிழித்தாள் செல்விழி.

"சுவாமீ......"

"என்ன?" என்ருன் அவன்.

"இன்று காலையில் இளவரசன் வந்து விட்டுப் போனுன். ஏதோ அவன் என் மீது காதல் கொண்டு விட்டானும். இன்னுமென்ன வெல்லாமோ உளறினுன்......... காட்டாற்றின் ஓலத்தைக் கவனிப்பார் யார்?"

"அப்படியானால் நீ இளவரச னுக்கு மனைவியாகப் போகிறு யாக்கும்"

"விளையாடாதீர்கள்"

"விளையாட்வில்லையம்மா, நானே ஏழைக் கவிஞன், அவனே இளவரசன்......"

"அவன் இளவரசனுகயிருந் தால் என்ன? காட்டுப்பூ அழகா கத்தானிருக்கிறது. ஆனல் அதை விரும்புவார் யார்? அழகான மணமுடைய முல்லையல்லவா விரும்புவார்கள் மக்கள். தாங் கள் முல்லை; அவர் காட்டுப்பூ"

"சேல்விழி! நீ உபமானம் கூறு வதில் என்னையும் மிஞ்சி விடுவாய் போலிருக்கிறதே"

"தென்றலால் முல்லையின் மணம் சிறப்பிக்கப் படுவதுபோல் தங் களால் சிறப்பிக்கப்பட்டவள் தானே......மறந்து விட்டேனே. நேற்று நீங்கள் 'காதலியைத் தேடிக் காத்திருக்கும் காதலன்' என்ற கவிதையைக் கொடுத்து அதற்கேற்றுற்போல் என் தந்தை யிடம் ஓவியம் போட்டு வாங்கி வரச்சொன்னீர்களல்லவா?"

"ஆமாம், அதை வாங்கி வந்தி ருக்கிறுயா?"

"ஆமாம்"

"ஓவியத்தை எடு பார்ப்போம்"

"அதோ அந்த ஆலமரத்தடியில் வைத்திருக்கிறேன். இதோ எடு த்து வருகிறேன்"

சேல்விழி சித்திரத்தை எடுத்து வந்தாள்......

அவள் வளைகிகர் கரம் சித்தி ரத்தைக் கவிஞனுக் கீந்தது......

அவன் சித்திரத்தைப் பார்த்துச் சித்திரமாய் நின்றுன்.

"சித்திரத்தில் சித்தத்தை அடகு வைத்து விடாதீர்கள்"

இதுகேலியின் பண்ணெலி. சேல்விழியின் கீதம்.

"உண்மையிலே இந்தச் சித் திரம் மிக அழகாகத்தான் இருக் கிறது......அது சரி, உன் தந்தை என் கவிதையைப்பற்றி ஏதாவது சொன்னுர்களா?"

"அதற்கு ஓவியம் அவர் வரைந் தால்தானே?"

"பின்னர் யார் வரைந்தது சேல் விழி"

"சேல்விழி யென்ற பெண் ணொருத்தி"

"யார் நீயா?"

"என் இப்படி ஆச்சரியத்தால் கண்களை அகல விரிக்கிறீர்கள்?"

"சேர்விழீ! நீ கள்ளி. உனக்கு ஓவியம்திட்டத் தெரியுமென்று...

"சிறிது காலத்திற்கு முன்தான் கற்றேன், அதுவும் தந்தைவரை வதைப் பார்த்தே வரைந்தேன். வேறென்றும் பிரமாதமில்லை"

"சேல்விழீ.......உண்மையிலே நீதான் எனக்குகந்தவள்; என் வாழ்வுப் பாதைக்கு நீதான் உண் மையான வழி காட்டி. வாழ்க் கையில் படருவதற்கு பந்தலில்லா மல் பரிதவிக்கையில் நிச்சயமாக நீதான் பந்தராய் வருவாய், நான் உன்னை எவ்விதத்திலேனும் மணப் பேன்"

"இந்த வார்த்தை......"

"குளிர்கதிரை மதியம் வீசத் தவருததுபோல் இதுவும் தவருத வார்த்தைதான்"

“ காலை மூடுபனியில்......”

“வழி தவறிப் போக மாட்டேன் சேல்விழி”



வானத்தில் மதியம் தன் கண் கதிர்களை பரப்பினன்.

“அடாடா! நேரமாகி விட்டதே. பேச்சிலே பொழுது செல்லுதலை மறந்து விட்டேனே சுவாமீ தந்தை தேடுவார். நான் வரட்டுமா?”

“ பிரிவென்பது மனதை அரிப்பதாக இருக்கிறது. சரிபோய் வா”

“ எனக்கும் பிரியமனமில்லை

தான். ஆனல் தந்தையின் தேட்டம் எனக்கு வாட்டத்தை அளிக்கிறது. சரி நான் வரட்டுமா?''

பிரிவின் சின்னத்தை......

அவர்கள் அதரங்கள் பதித்துக் கொண்டன......

## 2

காலைப்பொழுது......

கதிரவன் தன் பொன் கிரணங்களைச் சிந்தும் நேரம்.

தன் வீட்டில் சேல்விழி

அலைச்சுருள் கூந்தல் காற்றிலே அலைய வளையொலிக்க சித்திரம் தீட்டிக் கொண்டிருந்தாள்......

தீட்டு கோலைப் பிடிக்கையில் அவள் வளையொலி மெல்லிய சிரிப்பொலியாகக் கேட்கும்.

வாயிலில்......

அவள் அழகைச் சுவைத்து நின்ருன் இளவரசன் சூருவளி.

அவன் உள்ளம் பல நெளிவு வளைவுகளாகியது......

அவனையறியாமல் அவன் கால்கள் அவளருகே இழுத்துச் சென்றன.

அரவம்கேட்ட அணங்கு அஞ்சித் திரும்பினுள்......

"யாரது?"

"நான்தான் சேல்விழீ!"

"நீங்களா! வந்தகாரியம்?" பயத்திரையை விலக்கிக் கேட்டாள்.

"கலங்க வேண்டாம் காரிகையே. வானத்தைக் கலங்க வைக்கும் இடியல்ல நான்......"

"நீர் இடியில்லைதான். ஆனல் நீர் தளிரை ஆடவைக்கும் சூரைக் காற்று......வந்த காரியமென்ன?'

"அழகான கரையை நோக்கி வந்திருக்கிறது அலை"

"அரித்துக் கொண்டு போகவா?"

"இல்லை, இல்லை தழுவிட"

அவள்......

அதன் பொருளைப் புரிந்து கொண்டாள்.

அவளுள்ளத்தை யாரோ கீறுவது போலிருந்தது.

"இந்த மாதிரியான கெஞ்சல்களும் என்னிடம்கூற வேண்டாமென்று எவ்வளவு முறைகூறியிருக்கிறேன், மானம் உமக்கில்லையா? பின்னும் பின்னும் பேசுகிறீரே. நீர் இளவரசராக இருந்தால் உம்முடன்......

"சேல்விழி சினம் வேண்டாம். உன்னை என் உள்ளத்தின் உச்சியில் வைத்திருக்கிறேன்"

"ஆனல் நான் உம்மை உள்ளத்தில் எண்ணுதபடி வைத்திருக்கிறேன்"

இளவரசன் முகம் சுருங்கியது தொட்டால் சுருங்கிபோல"

"சேல்விழீ! உன் தந்தை எம் வேலை பார்க்கும் ஓவியர், அவரை என்ன வேண்டுமென்ருலும் செய்வேன்"

"அவரைச் சிறைப் பிடிக்கலாம்; ஆனல் அவர் கலையை உம்மால் சிறைப் பிடிக்க முடியாது. இனிமேல் நீர் தந்தையில்லாதபோது வரக்கூடாது; போம் வெளியே"

இளவரசன் உடல் குன்றிப் போனன்; குளத்தங்கரையிலே

கொக்குகள் உடலைக் குன்ற வைத்து உட்கார்ந்திருப்பது போல்.

வெளியே போனன்

## 3

"வேந்தா! என்ன எல்லாமோ சொல்லியும் சேல்விழி சரியான பாதைக்கு வரமாட்டேனென்று பிடிவாதம் பிடிக்கிருளே அதற்கு என்ன செய்ய?"

இந்த வார்த்தைகள் சூருவளி தன் நண்பனிடம் கூறியது. அத்துடன் ஒரு பெருமூச்சும் கிளம்பி வந்தது. அந்த பெருமூச்சில் அனல் நடனம் புரிந்தது.

"இளவரசே அந்தப் பெண், கவிஞன் செல்வனிடம் உள்ளத்தைப் பறி கொடுத்திருக்ருளாம். அதனல்தான் உங்களேயவள் விரும்பவில்லே"

வேந்தனின் பதில் இது.

"கவி கட்டிப் பிழைக்கும் கவிஞனுக்கு காதல்"

சூருவளியின் வாய் முணுமுணுத்தது......

"அவனேயும் அவளேயும் எப்பொழுது பார்க்கலாம் வேந்தா?"

"மாலேயில் இருவரும் ஆற்றங்கரையிலே பேசிக்கிட்டு இருப்பாங்க, அப்பொழுது பார்க்கலாம்"

"நானின்று அவர்களேப் பார்க்கப் போகிறேன்"

"அந்தக் கவிஞனே சும்மா விடக்கூடாது"

வேந்தனும் சூருவளியும் பிரிந்தனர்.

## 4

செக்கர் வானம் நதியில் செவ்வோவியம் வரைந்தது.

கவிஞன் செல்வன் காத்திருந்தான் சேல்விழி வரவு நோக்கி...

சேல்விழியும் சதங்கையின் ஒலி கேட்க வந்தாள்......

"சேல்விழி! இன்று என் இவ்வளவு நேரம்?"

"தந்தையின் உடம்பின் நிலே சரியாக இல்லே; ஆகவே அவரைக் கவனிக்க வேண்டியதாகயிருந்தது. அதுதான் இவ்வளவு நேரம்"

"சேல்விழி! உன் சேல்விழிகள் கனத்திருக்கிறதே, காரணமென்ன?"

"ஒன்றுமில்லே" இனிமையான கலக்கம் தோய்ந்த சொற்கள்.

"சும்மா சொல்லாதே...இன்று இளவரசன் வந்தான?"

"ஆமாம், கண்ட மாதிரியாக உளறுகிருன். எனக்குச் சகிக்கவில்லே. இந்த நாட்டை விட்டு எங்கேயாவது ஓடிவிடலாமென்றெண்ணுகிறேன்"

"அதுதான் சரி, உன் தந்தையை விட்டு வரமாட்டாயோ"

"தமிழ் நாட்டுப்பெண்கள் தாய் தந்தையரைவிட காதலன்தான் பெரிதென்று கருதினர்கள்; அவர்கள் வழி வந்த எனக்கும் காதல் தான் பெரிது"

"அப்படியானல் நாளே இரவு ஓடி விடுவோம்"

சிறிது நேரம் அமைதி. கொட்டும் மழை சற்றேநிற்பதுபோல!"

"சுவாமீ........."

"சேல்விழி! இந்தப் பொழுது மிக இன்பமாக இருக்கிறது...... நமது காதல்......"

"வளமிக்க நிலத்தில் வளரும் கதிர்கள்போல் வளரட்டும்"!

"சேல்விழி நீதான் என் வாழ்க்கைப் பூங்காவில் குளிர்தரு"

அன்பு அவர்கள் பேசுவதை தடைப்படுத்தியது.

ஆனல் அந்த அமைதியைக் கலைத்தது சூருவளியின் கத்தி......

அது செல்வன் மார்பென்ற உறைக்குள் பாய்ந்தது......

"ஐயோ!" என்ற சொற்கள் சேல்விழியின் அடிவயிற்றிலிருந்து பிறந்தது.

ஈரத்துணியை ஈரம் உலர முறுக்குவதுபோல் அவள் நெஞ்சம் முறுக்கேறி வேதனையுற்று இருந்தது.

அவள் கண்கள்......

இருட்டுக்குள்ளே இருக்கும் பூனையின் இரண்டு கண்கள்போல் அனலாய்க் காணப்பட்டது.

"சேல்விழீ! இந்தப் பயலிடம் உனக்குக் காதல்; கிளியிருக்கக் காகத்தை கொஞ்சுகிருயே"

அவன் வார்த்தை அவளுக்கேற வில்லை.

அவள் மலர்க்கரங்கள் நடுங்கின. மெள்ள மெள்ளச் செல்வன் நெஞ்ச உரையிலிருந்த கத்தியை எடுத்தது......கரங்கள் தாமாகவே நெஞ்சில் புகுத்தியது கத்தியை... சூருவளி காணுமுன்.

கவிஞன் மார்பில் சாய்ந்தாள்!

சூருவளியின் உள்ளம் பட படத்தது......பறவை தன் இறக்கையைப் பறக்கப்போகும் நேரத்தில் 'பட, பட' வென்றடிப்பது போல்.

"நாளைக்கு ஓடிப்போகும் நாங்கள் இன்றே ஓடிப்போகிறோம்"

சூருவளியின் கண்கள் கண்ணீரைத் துளிர்த்தன.

கால மின்வெட்டில்?

சூருவளி கைதியானன்.

அவன் தந்தை முன் நிறுத்தப் பட்டான் குற்றவாளியாக.

கொலைஞர் ஊனுக்கு ஊன் வாங்கும் தமிழ் நாட்டின் நீதிப்படி அவன் உயிர்பலியாயிற்று.

அவன் தந்தையின் நீதியைப் புகழ்ந்தனர் நாட்டு மக்கள்......

## 5

கால நதியில் பல வருடக் குழிகள் வெடித்தன......

நிலமகள் பல அதிர்ச்சிகளை ஏற்படுத்தி வேடிக்கை பார்த்தாள்.

செல்வனும் சேல்விழியும் இறந்த இடத்தில்......

இப்பொழுது ஒரு நதியும் அதன் அருகே ஒரு ஆலமரமும் இருக்கிறது......

அந்த நதி "காதலியைத் தேடிக் காத்திருக்கும் காதலன்" என்ற பாட்டைப் பாடும்!

அந்த ஆலமரம்...
தன் சருகுகளை உதிர்க்கும்.
அது அந்த நதியில்,
பல அலைகளை எழுப்பும்.

செல்வனும் - சேல்விழியும் கால மூடுபனியில் வழிதவறிப் போக வில்லை என்பதற்கு அழியாச் சின்னம் அந்தஆலமரமும் நதியும்தான்.

# வெற்றி யாருக்கு?

கமலாட்சி சீனிவாசன்

மதுரை மாசி வீதியில் ஒரு அழகிய மாடி வீட்டின் எதிரே இரு இளைஞர்கள் மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"மணி, எனக்கு அன்று பந்தயத்தில் தோற்றது மிகவும் அவமானமாயிருக்கிறது. பரீக்ஷையும் முடிந்து விட்டது. ஷேக்ஸ்பியர் பேப்பர் ஒன்றுதானே பாக்கி; அதற்கு மெதுவாகப் படித்துக் கொள்ளலாம். அன்று காலில் சுளுக்கில்லா விட்டால் உன்னை வெளுத்துக் கட்டியிருப்பேன். ஹூம், இப்பொழுதுதான் என்ன முழுகிப் போய் விட்டது. என்னவானாலும் சரி இன்று உன்னை விடப் போவதில்லை" என்றான் சுந்தரம்.

"அடேயப்பா! என்ன சுந்தர், இன்று பாரதி பாடல் ஏதாவது படித்தாயோ? வீரமும், ஆத்திரமும் தலை தூக்கி நிற்கிறதே. உனது நண்பனான தோல்விக்கு உன்னை விட்டுப் பிரிய மனமில்லையப்பா. நீ தான் சொல்லேன், இது வரையில் எந்த பந்தயத்தில் ஜயித்திருக்கிறாய்? ஒரு நாளுமில்லாத திருநாளாக எங்கிட்ட வீராப்புப் பேச வந்துட்டயே. பாவம் நீ என்ன செய்வாய்? உன்னை அந்த சக்தி அல்லவா ஆட்டி வைக்கிறது" என்றான் மணி.

"போடா முட்டாள். ரொம்பத் தெரிந்தவன் போல பேச வந்துட்டாயே, எந்த சக்திடா ஆட்டி வைக்கிறது? சொல்லேண்டா பார்ப்போம்"

"அட மண்டு, தெரியாதின்னு நினைச்சுவிட்டாயோ? அதுதான் நம்ம வகுப்பு சரோஜா சக்தி.

"அட பிரஹஸ்பதி, நீ மட்டும் என்ன பெரிய யோகியோ? அன்று அவள் கண்வீச்சில் மயங்கி உன்னுடைய நோட்புக்கோடு ஒரு 'தாங்ஸூம்' சேர்த்துக் கொடுத்து விட்டு வந்து பெருமை பேசினது மறந்து போச்சுப் போலேயிருக்கு"

"அடேய் பேச்சை நிறுத்து, அதோ பார் மாடியில் சரோஜா நின்று கொண்டு நம்மைக் கவனிக்கிறாள். நம்ம இரண்டு பேருக்கும் ஒரு பந்தயம். நீ சைகளில் மேல வீதி வழியாக நாலு தெருக்களைச் சுத்திவிட்டு பத்து நிமிடங்களில் இங்கு வந்து சேர வேண்டியது. நான் கீழத் தெரு வழியாக சுத்திவிட்டு வருகிறேன். முதலில் வருகிறவனுக்குத் தோற்றவன் இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டும். என்ன சம்மதமா?" என்றான் மணி.

"ஓ நான் தயார்"

இந்த சமயத்தில் அங்கு ஒரு வாலிபன் வந்தான். மணி சுந்தர், இருவரும் அவன் முதுகில் தட்டி 'அட ரகு, வா நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தாய். நீ இங்கு நின்று கொண்டு குறிப்பிட்ட நேரத்தில் திரும்பி வருகிறவனுக்கு இந்த ரூபாயைக் கொடுக்க வேண்டும்" என்றார்கள். ஒரு சிறிது யோசித்து பின் "நான் வேறு விஷயமாக சரோஜாவின் தந்தையைப் பார்க்க வந்தேன். நீங்

கள் இவ்வளவு சொல்லும் பொழுது தட்டுவானேன் சரி பரவாயில்லே. நான் நிற்கிறேன், சீக்கிரம் வந்து விடுங்கள்'' என்ருன், சுந்தரும், மணியும் சைக்களில் ஏறிக் கொண்டு குறித்த வழியில் செல்ல வாரம்பித்தனர்.

எப்படியாவது பந்தயத்தில் ஜயித்தால் சரோஜாவின் நன் மதிப்பைப் பெறலாம் என்ற எண்ணமே சுந்தர் மனதில் தோன்றியது. தெருவில் கூட்டம் அதிகமாயிருக்கிறது. முழுவதும் சுற்றிஞல் குறித்த நேரத்தில் வந்து சேர முடியாது. அதனல் இரண்டு தெருக்களைச் சுற்றிவிட்டுத் திரும்பிவிட்டால் யாருக்குத் தெரியப் போகிறது என்று தீர்மானித்தான். அவ்வளவுதான் இளைஞன் மனது இன்பக் கேணியல்லவா? விதவிதமான கற்பனை ஊற்றுப் பெருக் கெடுத்தது. பாவம் அடுத்து நேர்வதை அவன் எவ்வாறு அறிவான்? உடல் சைகளிலும், உள்ளம் கற்பனு உலகத்திலுமாகச் சென்ருன். தடார் என்ற சத்தம். அதை அடுத்து ''அட நாசமாப்போக, கடவுள் கொடுத்த கண் அவிஞ்சா போச்சு; மேலே கொண்டு ஏத்திட்டாயே, இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குப் பாட்டிகளைக் கண்டா எளனமாயிருக்கு. தறி தலைகள். இப்படிப்பட்ட சனியன்களிருக்கும் போது ஜனங்கள் எப்படி சுகமாயிருப்பா? அதுதான் பஞ்சமும் நோயும் பிடிங்கித் திங்கறது. கலிமுத்திப்போச்சு, மழையே பெய்யறதில்லே, அப்படி பெய்தாலும் ஒரேயடியாப் பேஞ்சு அழிக்கிறது'' என்று சரமாரியாக சொல்லம்புகள் சுந்தரை நோக்கிப் பாய்ந்தன. கூட்டம் கூடி விட்டது. அவன் இறங்கி சமாதானம் சொல்வதற்குள் கான்ஸ்டேபிள் வந்து கூட்டத்தை விலக்கி விட்டு சுந்தரைப் பார்த்து ''நட ஐயா ஸ்டேஷனுக்கு, ஓட்டத் தெரியாதவங்கள்ளாம் ஏனய்யா சைக்கிளை யெடுத்திட்டு வந்து எங்க உயிரை எடுக்கிறீங்க?'' என்று மிரட்டினன். கெஞ்சினுன் கான்ஸ்டேபிளை சுந்தர். நினைத்ததென்ன நடந்ததென்ன? வேறு வழியில்லாமல் கான்ஸ்டேபிளைத் தொடர்ந்தான்.

இனி மணியைப் பார்ப்போம். வெகு விரைவாகக் கீழ வீதியைக் கடந்து விட்டான். கட்டாயம் வெற்றி தனக்குத்தான் என்ற பெருமிதத்திலும், அவசரத்திலும் நான்கு பாதைகள் சேருமிடத்திற்கு வந்ததும், கான்ஸ்டேபிள் கை காட்டுவதற்கு முன் தன் வழியில் சைக்கிளைத் திருப்பி விட்டான். கான்ஸ்டேபிலுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! 'என்னை மனுஷன்னு நினைச்சயா, மாடுன்னு நினைச்சயா? இங்கே நான் ஒருத்தன் எதுக்காக நின்னுண்டிருக்கறேன்? துரையவர்கள் சைக்கில் சவாரி செய்தது போதும், ஸ்டேஷனுக்கு வந்து இன்ஸ்பெக்டருக்குப் பதில் சொல்லி விட்டு சவாரி செய்யலாம்' என்று கூறி முரட்டுத் தனமாக அவனை ஸ்டேஷனுக்குத் தள்ளிக் கொண்டு சென்ருன்.

இது நிற்க, கைக் கடியாரத்திலேயே கண்ணுகை நின்ற ரகுவை அந்த மாடி வீட்டிலிருந்த பெரியவர் 'ஏன் வாசலில் நிற்கிருய்? உள்ளே வாயேன்' என்று அன்பாக அழைத்தார் உடனே ரகு உள்ளே வந்து அவருக்கு வணக்கம் செய்து 'ஒன்றுமில்லே மாமா, அப்பா உங்களிடம் அந்தக் கேஸில் ஏதாவது துப்பு துலங்

கிற்ரு என்று கேட்டு வரும்படி என்னையனுப்பினர்' எனப் பணிவாக மொழிந்தான்.

"அதுவா ? நான் இப்பொழுது உலாவக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். நீயும் என்னுடன் வா, வழியில்தானே ஸ்டேஷன் இருக்கிறது. தகவல் கேட்டுச் சொல்கிறேன். என்ன வருகிருயா ?

மணியைப் பார்த்தான் ரகு. அவர்கள் சென்று அரை மணியாகி விட்டது. பந்தய நேரந்தான் கடந்து விட்டதே. இவருடன் போகலாம் என்று தீர்மானித்து 'ஆகட்டும் மாமா' என்று கூறிவிட்டான். சிற்றுண்டியருந்திய பிறகு ரகு, சரோஜா, அவள் தந்தை மூவருங் கிளம்பினர்கள். ரகுவும், சரோஜாவும் உல்லாசமாகச் சிரித்துப் பேசிக்கொண்டே வந்தார்கள். மூவரும் ஸ்டேஷனில் நுழைந்ததும் இன்ஸ்பெக்டர் அவர்களை மரியாதையுடன் வரவேற்று அமரச் செய்தார். அவர்களைப் பார்த்ததும் அங்கு நின்ற மணிக்கும், சுந்தருக்கும் தலை குனிந்து விட்டது. சரோஜாவின் தந்தை இன்ஸ்பெக்டரைப் பார்த்து 'இந்தப் பையன்கள் யார் மேலாவது சைக்கிளை ஏற்றி விட்டார்களோ? இந்தக் காலத்துப் பசங்களுக்குத் தெருவில் போகும் போதுதான் யோசனைகள் உதயமாகும்' என்று கூறி விட்டு மணியையும் சுந்தரையும் பார்த்து "என்னப்பா பரிக்ஷை ஒத்திப் போட்ட குஷியோ? பார்த்து விடக் கூடாதா? இந்த வயதிலேயே அமைதியும், ஜாக்கிரதையுமில்லாதவர்கள் எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறீர்கள்?" என்ருர். இதைக் கேட்ட சரோஜா "அப்பா நீங்கள் சொல்லுவது தவறு. இத்தகைய இளைஞர்கள் தான் எதிர் காலத்தில் சுயராஜ்ய மாளிகையைத் தாங்கி நிற்கப் போகும் தூண்கள்' எனக் கேலியாகக் கூறினள். மணிக்கும், சுந்தருக்கும் முகத்தில் அசடு வழிந்தது.

அதிகம் விவரிப்பானேன் 'காத்திருந்தவன் மனைவியை நேற்று வந்தவன் கொண்டு போனன்' என்றபடி ரகுவிற்கும் சரோஜாவிற்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடை பெற்றது. மணியும் சுந்தருங்கூட வந்திருந்து மண விழாவைச் சிறப்பித்தனர் என்ருல் குதூகலத்திற்குக் கேட்கவேண்டுமா?

★

## பாவங்கள்

பாவங்கள், ஒரு போர்வைக்குள்ளாக வந்து நம்மை அணுக்கின்றன. அந்தப் போர்வை புண்ணியமாக நமக்குத் தென்படும்.

— *செனிகா*

# உள்ளம்

ஆ. கி. நடராஜன்

வெள்ளி நிலா பட்டம் பகல்போல் தன் அமுதக் கிரணங்களைப் பொழிந்துக்கொண்டிருக்கின்றது. மோகன நிலா வொளியில் நான் நடந்து கொண்டிருந்தேன். அம்புலியின் ஒளி அழகைப் பெற்றுப் பார்க்குமிடமெல்லாம் புதுமை பூத்துள்ளது. இத்தனை நாள் நானறியாத ஏதோ ஒரு உணர்ச்சி உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. என் இதயம் இன்பத்தால் வெடித்துவிடும்போல இருக்கின்றது.

பக்கத்தில் மரங்கள் அசைந்து பாடிக்கொண்டிருக்கின்றன. எனக்கு முன்னுல் மூன்று பேர் நடந்து கொண்டிருக்கின்றனர். சில்லென்று தென்றல் வீசும் வேளையில் என் அகமும் குளிர்ந்து விட்டது.

எங்கோ ஒரு மூலையிலிருந்து காகம் கரையும் ஒலி கேட்கின்றது. பக்கத்துக் கழனி ஏற்றப்பாட்டும் காற்றில் கலந்தொலிக்கின்றது.

நீல வானத்தைப் பார்த்தால் மேகத்தில் முழுமதி தவழ்ந்து கொண்டிருந்தது. எங்கோ ஒரு இடத்தில் குறைந்த ஒளியுடன் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன.

பக்கத்து வயல்களின் பசுமைக் காட்சியும், பறவைகள் வானில் பறந்து செல்லும் தோற்றமும், அண்மையில் இருந்த மாந்தோப்பு மணமும், அந்த மரக்கிளையில் அழகுடன் அமர்ந்திருக்கும் ஜோடிப் பறவைகளும் என்னை இன்பத்திலாழ்த்தி விட்டன. என் முகம் மலர்ச்சியடைந்தது அல்லி மலர் மாதிரி! ஆஹா! என் கண்கள் கண்ட ரம்மியமான அழகுக் காட்சிகள்தான் எத்தனை!

வறட்டு வாழ்க்கையில் உழலும் மனிதன் வாழும் வகையை அறிந்தும் வாழ்க்கையை வெறுக்கின்றுன். நாம் உலகில் அனுபவிக்க வேண்டிய எத்தனையோ விஷயங்களை உண்மையில் மறந்து விடுகின்றோம். "வாழ்க்கை, வாழ்வதற்குத்தான் வெறுப்பதற்கல்ல" என்பதை மனிதர்கள் சுலபமாக மறந்து விடுகின்றனர்.

வெள்ளி முளைக்கும் முன் கலப்பையைத் தோள்மீது சுமந்து செல்லும் உழவனின் காட்சியைப் பார்த்தால் எனக்கு இன்பமாக இருக்கின்றது. ஆனல் அவனுள்ளம் இயற்கை

இயற்றும் புதுமையைக் கண்டு இன்புறுவதில்லை. தொழில் நாட்டத்தில் நடந்துக் கொண்டிருக்கும் அவனுக்குப் புற அழகைக் கண்டு பூரிப்படைய உள்ளம் செல்லாது; செல்ல முடியாது. உலகில் சில மனிதர்கள் இன்பத்திலாழ்ந்து தம்மை மறந்து வாழ்கின்றனர். பலர், பாழும் வயிற்றுக்குக் காலம் முழுவதும் உழைத்துக் கொண்டு எப்படியோ வாழ்க்கையைத் தள்ளுகின்றனர். மற்றும் சிலர் என்னைப்போல இரண்டையும் அனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்கின்றனர்.

ஆம்! நல்ல லட்சியப் பாதையில் என்றைக்கும் ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையும் செல்லாது; செல்வதற்கு நியாயமில்லை. துன்பத்தில் மூழ்கித் திளைத்தவனுக்குத்தான் இன்பத்தின் இனிமை கிட்டும். வான முகட்டில் தவழும் வெண்ணிலவு திங்கள் தோறும் தேய்வடைவதனல்தான், கலா ரசிகன் பூரண நிலாவைப் பார்த்துப் பூரிப்படைகின்ருன். அடிமைக் கூட்டம் தங்கள் அவதியுற்ற காலத்தை எண்ணிக் கொள்ளும்போது தான் கப்பலேறும் மானத்தைக் காப்பாற்ற சுதந்திரப் புரட்சியை மேற் கொள்ளுகின்றது. உலகில் ஒன்றை நோக்கி மற்ருென்று பெருமையடைவது இயற்கை.

இந்த இடத்தில் என் சிந்தனை ஓட்டம் சட்டென்று நின்று விட்டது. சுற்று முற்றும் பார்த்தேன். என் தனிமையை நன்ருக உணர்ந்தேன். அந்த அம்புலி என்னை நோக்கி சிரித்துக் கொண்டு மேகத்திரையில் மறைந்தது. என்னைச் சுற்றிலும் இருள் கவிழ்ந்து கொண்டது. ஆம்! என் அகமும் அப்படித்தான் இருந்தது.

இயற்கை அழகில் மனம் தோய்ந்து விடுவது மனிதனுக்கு அரிதான விஷயம். ஆனல் முற்றிலும் மூழ்கி விடுவதும் மனிதனுக்கு கேடு விளைவிப்பதாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஆம்! மனிதன் பைத்தியக்காரனகி விடுகின்ருன். உலகிற்கும் அவனுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமற் போய் விடுகின்றது. சில சமயம் மனிதன் தன்னை வேண்டுமென்றே கெடுத்துக் கொள்ளுகின்ருன் — உலகம் தன் நியாயத்தின் அறை கூவலை அலட்சியம் செய்து அநீதியைச் சுமத்தும்போது, தன் எல்லையற்ற ஆசையை மற்றவர்கள் அழுத்தி அடக்கும்போது, சீ! இதெல்லாம் என்ன சிந்தனை! இனிமேல் இப்படியெல்லாம் சிந்திக்கப் போவதில்லை.

மெதுவாக என் கால்கள் நண்பன் வீட்டை நோக்கி நடந்தன.

★

# பரிசு

[ராஜம் ராமமூர்த்தி]

பிரபல சினிமா நட்சத்திரம் நடன ராணி – சங்கீத கோகிலம் என்றெல்லாம் புகழ்பெற்ற நிர்மலகுமாரி, அன்று தனக்கு வந்த தந்தியை நூற்றிரண்டாவது தடவையாகப் படித்துப் பார்த்தாள். அவ்வளவு தூரம் அவளுடைய கவனத்தைக் கவரும்படியாக அத்தந்தியில் இருந்த விஷயம் இதுதான்.

"ஐ. ஸி. எஸ். பாஸ் செய்து விட்டேன், திருச்சி ஜில்லா கலெக்டராகப் போட்டிருக்கிறார்கள். நாளை வருகிறேன் சேகர்."

இந்த சில வரிகள் படித்துப் படித்து அவளுக்கு மனப்பாடம் ஆகிவிட்டன. அப்படியும் அவள் அதை இன்னொருமுறை படிக்கத்தான் செய்தாள். ஐ. ஸி. எஸ். – ஜில்லா கலெக்டர் – யார்? அவளுடைய அருமந்த தம்பி. அவன் அந்தப் பட்டத்தைப் பெற அவள் செய்த தியாகம் அளவற்றது. இம்மூன்று எழுத்துக்களை அவன் தன் பெயரோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக அவள் தன்னுடைய பொருளை – இல்லை – தன்னுடைய வாழ்க்கையையே தியாகம் செய்தாள், பலன்? நாளை தெரிந்துவிடும்.

நிர்மல குமாரியின் மனக்கண் முன் பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களெல்லாம் தோன்றித் தோன்றி மறையலாயின.

## 2

அப்பொழுது அவள் ஒரு சினிமா ஜோதியில்லை. சாதாரணமான பெண்தான். பெயரும் சினிமா ராணி நிர்மல குமாரி இல்லை. சர்வ சாதாரணமான கமலா என்பது தான் அவளுடைய சொந்தப் பெயராயிருந்தது.

அவளுடைய பெற்றோருக்கு அவளையும், சேகரையும் தவிர வேறு குழந்தைகள் கிடையாது. அவளுடைய தந்தை ஒரு ஏழை ஆசிரியர். அவருடைய சொற்ப சம்பளத்தில் அந்தக் குடும்பம் எவ்வாறோ வாழ்க்கை நடத்தி வந்தது. அவளுடைய தந்தை வறுமையில் சிக்குண்டு தவித்தாராலும், அவருக்கிருந்த ஆசையோ அபாரம். "பெண் பெரிய ஹைகோர்ட்டு ஜட்ஜியின் பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டுப் பணத்திலேயே கிடந்து புரளவேண்டும். பையனோ ஐ. ஸி. எஸ் ஆகி பெரிய கலெக்டராகவேண்டும்" என்பது தான் அந்த ஏழை ஆசிரியரின் கனவாயிருந்தது. பாவம்!

கமலாவுக்குப் பதின்மூன்று வயதாயிருக்கும் போது அவளுடைய தாயார் இறந்து போய் விட்டாள். அதன்பின், சேகருக்குக் கமலாவே அக்காவாகவும், அம்மாவாகவும் இருக்க வேண்டி வந்தது. சேகர் இயற்கையிலேயே முரட்டுச் சுபாவ முடையவன். அதுவும் தாயில்லாப் பிள்ளையென்று எல்லோரும் செல்லம் கொடுக்கவே, அடியோடு துஷ்ட

ளுன். ஆனல், படிப்பில் மட்டும் நல்ல துடி. ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேர்ச்சியடைந்தான். அவன் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் ராஜதானிக்கே முதலாகத் தேறிய சந்தோஷச் செய்தியைக் கேட்காமலேயே அவனுடைய தந்தையும் காலமாகிவிட்டார். சேகரும், கமலாவும் இவ்வுலகில் அநாதைகளாக விடப்பட்டார்கள்.

அப்போது கமலா, பத்தாவது படித்து விட்டு, உபாத்தியாயினி ஆவதற்காக டிரெயினிங் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தாள். மெள்ளக் கஷ்டப்பட்டு சேகரை பட்டணத்தில் இண்டர் மீடியேட்டில் சேர்த்து விட்டாள். அவளுடைய தகப்பனர் மரணத் தறுவாயில் அவளிடம் "கமலா, நீ எனக்கு ஒரு பெண் இல்லை. ஒரு பிள்ளை என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். உன்னைப் பற்றி நான் கட்டின மனக்கோட்டை இடிந்து போய் விட்டது. ஆனல், சேகரைப் பற்றி நான் கொண்டிருந்த மனோரதமாவது ஈடேறும்படி செய்ய வேண்டுவது உன் பொறுப்பு. கமலா, என்னுடைய கடைசி காலத்தில் கேட்கிறேன். என் கோறிக்கையை நிறைவேற்றுவாயா நீ?" என்று மிகுந்த உருக்கத்துடன் கூறினர். பேசி முடிப்பதற்குள் அவருக்கு மூச்சு முட்டிக்கொண்டு வந்துவிட்டது. கண்களில் கண்ணீர் திரையிட்டது. கமலாவின் மனம் பாகாய் உருகியது. அவள் ஒன்றும் யோசிக்காமல் ஆவேசம் வந்தவள்போல் உரத்த குரலில் "அப்பா, என் உயிரைக் கொடுத்தாவது நான் சேகரைப் படிக்க வைக்கிறேன் கவலைப்படாதீர்கள். இது சத்தியம்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினள். அவள் தந்தை நிம்மதியடைந்து விட்டவர் போலக் கண்களை மூடிக் கொண்டு விட்டார்.

பிறகு கமலா படாதபாடு பட்டாள். ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாக வேலை பார்த்துக்கொண்டு, பிடிக்காதவர் காலையெல்லாம் பிடித்து உபகாரச் சம்பளம் வாங்கித் தம்பியைப் படிக்கவைத்தாள். அவளுக்குக் கிடைத்த சொற்ப சம்பளம் அவர்கள் சாப்பாட்டுக்கும் துணி மணிகளுக்கும், இதர செலவுகளுக்கும் போதவே போதாதுதான். கமலா தன் சுக சௌக்கியங்கள் எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டாள். எத்தனையோ நாட்கள் உணவு இல்லாமலேயே காலம் கடத்தினள், தன் கஷ்டகாலம் இன்னும் சில வருஷங்கள் தான் பிறகு சேகருக்கு வேலையாகி விட்டால் என்ன குறைச்சல்? கை கட்டி வேலை செய்ய எத்தனை ஆட்கள் காத்திருப்பார்கள்? என்றெல்லாம் இன்பக் கனவுகள் கண்டு வந்தாள் கமலா.

வருஷங்கள் உருண்டோடின. சேகரும் ஹானர்ஸ் வகுப்பில் கடைசி வருஷப் படிப்பிற்கு வந்து விட்டான். பாஸ் செய்து விட்டால் அடுத்த வருஷம் கப்பலேறவேண்டியதுதான். அதற்கு எவ்வளவோ பணம் செலவாகுமே? கமலாவிற்குக் கவலை வந்து கப்பிக்கொண்டது. அவளை நம்பி யார் அவ்வளவு பெரிய தொகையைக் கடனுகக் கொடுப்பார்கள்?

## 3

கவலைக் கடலில் மூழ்கிய கமலாவிற்கு அப்பொழுது ஓர் அபூர்வ யோசனை தோன்றிற்று. சினிமாவில் சேர்ந்து நடித்தால், நிறையப்

பணம் கொடுப்பார்கள் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். தானும் ஏன் அம்மாதிரி நடிக்கக் கூடாது? என்று அவளுக்குத் தோன்றியது. அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை அவள் அரியாதவள் அல்ல. இருப்பினும் தன் தம்பிக்காக, எல்லா வற்றையும் தியாகம் செய்ததுபோல, விலையுயர்ந்த தன் கற்பையும் அவன் பொருட்டுத்தியாகம் செய்யத் துணிந்தாள். தன்னலமற்ற அவள் கோரிய பலனடைந்தாள். சாதாரண கமலாவாயிருந்த அவள், சினிமா ராணி நிர்மல குமாரி ஆகிவிட்டாள். நடன ராணி, கலைவாணி, சங்கீத ராணி, அழகு ராணி என்றெல்லாம் பல பட்டங்கள் அவளைத் தேடிக்கொண்டு வந்தடைந்தன.

சேகருக்கு இப்பொழுதெல்லாம் பணத்தைப் பற்றியே கவலையில்லை. கன குஷாலாக இங்கிலாந்தில் படித்துவந்தான். அங்கே இவனைப்போலவே ஐ. ஸி. எஸ். பரீட்சை படிக்க வந்த ஜில்லா ஜட்ஜின் மகனான பசுபதி என்பவன் இவனுடைய அத்தியந்த சிநேகிதனானான். சேகரின் குடும்ப விவகாரம் பசுபதிக்குத் தெரியாது. அவனுடைய நடை உடைகளையும், பணத்தைத் தண்ணீர் போல வாரி இறைக்கும் தடபுடல் வாழ்க்கையையும் கண்ட பசுபதி, அவன் ஒரு பெரிய ஜமீன்தாரரின் பிள்ளை என்றே நினைத்து வந்தான். சேகரும், தனக்கு பெற்றோர் இல்லையென்றுமட்டும் அவனிடம் சொல்லியிருந்தான். தன் சகோதரியைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. காரணம் தன் சகோதரி ஒரு சினிமா நடிகை என்று சொல்லிக்கொள்ள அவனுக்கு அவமானமாயிருந்ததுதான்! கடைசியில் ஒருவிதமாகப் பரீக்ஷை முடிந்து முடிவும் வெளியானதும், சேகர் மேற்கண்ட தந்தியை அனுப்பிவிட்டுத் தாய்நாடு வரக் கப்பலேறினான்.

## 4

சிந்தனை கலைந்து திடுக்கிட்டெழுந்தாள் கமலா. இனிய புன்முறுவலொன்று அவளுடைய அழகிய இதழ்க் கடைகளிலே தவழ்ந்து விளையாடியது. இனி அவள் சினிமாவிலே நடிக்க வேண்டிய அவசியமில்லை. உடம்பிலுள்ள ரத்தமெல்லாம் சுண்டிப் போகும்படி, கண்களைக் கூச வைக்கும் விளக்குகளின் எதிரில் நின்று, டைரெக்டர், காமிராமென், பட முதலாளி இம்மாதிரி ஒவ்வொருவருடைய கட்டளைக்கும் கீழ்ப்படிந்து, அவர்கள் ஒவ்வொருவரையும் திருப்திப் படுத்த வேண்டிய அவசியமுமில்லை. இனி அவளுக்கு அவளே எஜமானி. கமலா தனக்குத்தானே மெதுவாகச் சிரித்துக் கொண்டாள். அன்று காலை வந்த பட முதலாளியின் ஞாபகம் வந்தது அவளுக்கு 'அன்னையின் உள்ளம்' என்ற படத்தில் நடிக்க அவளுடைய சம்மதத்தைப் பெற வந்திருந்தார் அவர். பெருந் தொகைக்குச் செக்கொன்றை முன்பணமாக எடுத்து நீட்டினார். கமலா, அலட்சியமாக அவரை உற்றுப் பார்த்தாள். இனி அவளுக்குப் பணம் எதற்கு? கை நிறையப் பணம் சம்பாதித்துத் தரத்தான் வரப் போகிறானே அவளுடைய அருமைத்தம்பி? "என்னை மன்னிக்க வேண்டும் ஸார். நான் இனி ஒரு படத்திலும் நடிக்கப் போவதில்லை. சினிமா உலகிலிருந்தே விலகிக் கொள்ளப் போகிறேன். நமஸ்காரம் நீங்கள்

போய் வரலாம்" என்று மிடுக்காகக் கூறியபோது அவளுக்குத் தான் எவ்வளவு பெருமிதம் ஏற்பட்டிருந்தது?

உள்ளக் களிப்பை வெளிக் காட்டும் வண்ணம் உல்லாசமாகப் பாடிக்கொண்டே, அவள் பங்களா வாசற்படியண்டை வருவதற்கும் டாக்ஸியிலிருந்து இறங்கி சேகர் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது. குளிர் ப்ரதேசத்தில் நீண்ட நாள் வசித்ததாலும், பணக் கவலையற்று சுக வாழ்வை நடத்தி வந்ததாலும், அவன் முன்னைக் கிப்போது நன்ருய் வளர்ந்து வெகு சுந்தரமாகக் காணப்பட்டான். அழகும், ஆரோக்கியமும் பொருந்தி திடகாத்திர தேகத்துடன் விளங்கும் தன் தம்பியை ஆவலுடனும், ஆர்வத்துடனும் பார்த்து மனம் பூரித்துப் போனுள் கமலா.

## 5

சேகர் வந்து பல தினங்களாய் விட்டன. அவன் வந்ததிலிருந்தே ஒரு மாதிரியாயிருந்ததையும், தன்னுடனே முன்போல கலகலவென்று பேசாமல் எதையோ பறி கொடுத்தவன் போல் காணப்படுவதையும் கவனித்தாள் கமலா. ஏனே அவள் மனம் துணுக்குற்றது. "ஒருவேளை அவனுக்கு உடம்பு கிடம்பு சரியாயில்லையோ, என்னிடம் சொன்னுல் நான் கவலைப்பட போகிறேனே என்று மூடிவைக்கிருனே?" என்றெல்லாம் எண்ணி ஏங்கினுள் கமலா. சேகரின் எண்ணத்தை அவள் என்ன கண்டாள் பாவம்?

அன்று பிற்பகலில் தான் கமலாவிற்கே விஷயம் இன்னதென்று தெரிந்தது. சாப்பாட்டிற்குப் பிறகு இருவரும் மௌனமாக ஹாலில் இருந்த சோபாக்களில் சாய்ந்து கொண்டிருந்தனர். திடுதிப் பென்று அம் மௌனத்தைக் கலைத்தது சேகரின் கம்பீரமான குரல்.

"அக்கா, நான் இத்தனை நாட்களாக உன்னிடம் ஒரு விஷயத்தைக் கூருமல் மறைத்திருந்தேன். அதை இப்போது சொல்கிறேன். உ......ம்.........வந்து.........லண்டனில் என்னேடு கூட பசுபதி என்று ஒருவன் படித்துவந்தான் என்று சொல்லி இருக்கிறேனில்லையா? அவன் அப்பா ஜில்லா ஜட்ஜு. அவனுக்கு பிரேமா என்ருரு தங்கையிருக்காள் அவளும் அங்கே லண்டனில் மேல் படிப்புப் படிக்க வந்திருந்தாள். நான் அவளை விரும்பினேன். அவளும் என்னை விரும்பினுள். ஜட்ஜும் அவளை எனக்கு மணம் செய்விக்க சம்மதித்திருக்கிருர். நாளை எனக்கும் அவளுக்கும் கல்யாணம். நீ ஒருவேளை இதற்கு ஏதாவது தடை கூறப் போகிருயோ என்றுதான் நான் இத்தனைநாள் இதை உன்னிடம் சொல்லவில்லை. அதோடு, "நீ..............." என்று மேலும் ஏதோ சொல்லப் போனவன் சட்டென்று நிறுத்திக் கொண்டு விட்டான்.

கமலாவின் மனம் சந்தோஷத்தினல் பொருமியது. அவள் தன்னிடம் முன்னுல் ஒன்றும் சொல்லவில்லையே தன் சம்மதத்தைக் கேட்கவில்லையே என்றுகூட அவளுக்குத் தோன்றவில்லை. கல்யாணமா? நாளைக்கா? ஜில்லா ஜட்ஜின் பெண்ணு? அப்பா இருந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவார் என்றெல்லாம் குழந்தை போலக் குதூகலப் பட்டாள்

பேதை கமலா. ஆனல் அவளுடைய அந்த குதூகலம் குழுறிப் போகும்படி இருந்தது சேகர் தொடர்ந்து சொன்ன வார்த்தைகள்.

அவளை நேரே நிமிர்ந்து பார்க்காமல், எதிரிலிருந்த சுவரைப் பார்த்தபடியே பேசினன் சேகர் "அக்கா இன்னெரு விஷயம். நான் அவர்களிடம் எனக்கு ஒரு அக்கா இருப்பதாகச் சொல்லவில்லை. ஏனென்ருல்......ஏனென்ருல்............சேகர் சற்று நேரம் மென்று விழுங்கினன். பிறகு சமாளித்துக் கொண்டு "ஏனென்ருல் நீ ஒரு சினிமா நடிகை என்பதை அவர்களுக்குத் தெரியப் படுத்த நான் விரும்பவில்லை. அது தெரிந்தால் அவர்கள் எனக்குப் பிரேமாவைத் தரமாட்டார்கள். அதனல் என் வாழ்க்கை பலவிதங்களிலும் பாதிக்கப்படும். அவர்கள் சம்பந்தம் கிடைத்தாலோ என் வாழ்க்கை இன்பமயமாகும், கௌரவம் அதிகரிக்கும். சமூகத்திலும் என் அந்தஸ்து உயரும்" என்று தன்னலமேஉருவெடுத்தாற் போல உட்கார்ந்திருந்த அவன் சிறிதேனும் தாக்ஷண்யம், தயை, பரிவு, அன்பு, நேர்மை எவையும் இல்லாமல் மட மட வென்று கூறி முடித்தான். சில நிமிஷங்கள் பொறுத்து அவனே ஒப்புக்குச் சொல்பவன் போல, "அதனல் தான் நீ கல்யாணத்துக்கே வர முடியுமோ முடியாதோ என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இப்போதுதான் ஒரு யுக்தி தோன்றியது. நீ பாட்டிற்கு முகூர்த்த வேளைக்கு வா. அக்கா என்று உன்னை அழைத்தால் தானே தொல்லை? உன்னை என் சினேகிதி என்று சொல்லிக்கொள்கிறேன்!" என்று சொன்னன்.

## 6

கமலா ஸ்தம்பித்துப் போனள். அவளுக்கு என்ன பண்ணுவது, என்ன சொல்லுவது என்றே ஒன்றும் புரியவில்லை. சேகரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளைக் குண்டூசிகளால் குத்துவது போன்றிருந்தன! அவளுடைய இருதயத்தைச் சம்மட்டியால் வேகமாய் யாரோ அடிப்பது போல இருந்தது. கண்களில் பெருகிய நீர் கன்னங்களையும், கழுத்தையும் நனைக்க, வேதனை தாங்காமல் படீரென்று உடைந்து போகும் போல் இருந்த இதயத்தை ஒரு கையினல் அமுக்கிப் பிடித்த வண்ணம் சிலைபோல அமர்ந்திருந்தாள் அவள்.

யாருக்காக அவள் தன்னுடைய சுகம், சௌக்கியம், பொருள், வாழ்க்கை, உயிரினும் அரிய கற்பு எல்லாவற்றையும் தியாகம் செய்தாளோ — யாருடைய சந்தோஷத்தைக் காண ஏங்கினளோ யார் பெயரும், புகழும், பட்டமும் பெற அவள், தான் பாடுபட்டு உழைத்துத் தேடிய பொருளையெல்லாம் வாறி யிறைத்தாளோ — யாருடைய அந்தஸ்தும், கௌரவமும் உயர அவள் தன்னுடைய அந்தஸ்து, சுய கௌரவம், மானம், மரியாதை எல்லாவற்றையும் இழந்து பலருடைய இகழ்ச்சிக்கும் பாத்திர மாகினளோ — அந்த தம்பியின் வாயினலேயே, "ஒரு சினிமா நடிகையான உன்னை என் அக்காவாக நான் கருத மாட்டேன்" என்ற வார்த்தைகளைக் கேட்டுவிட்டாள். அவள் செய்த தியாகத்திற்கேற்ற பரிசு கிடைத்து விட்டது அவளுக்கு. சேகர் தன்னுடைய காதல், தன்னுடைய சுகம், தன்னுடைய கௌரவம் இவற்றையே பெரி

தாக மதித்தானேயன்றி, தன்னுடைய சகோதரியான அவளைப் பற்றிக் கிஞ்சித்தேனும் எண்ணிப் பார்க்க அவனுடைய தன்னலம் இடம் கொடுக்கவில்லை.

ஆம்! இந்தத் தன்னலம் அவளுக்கு இருந்திருந்தால்? அப்போது ஏன் அவள் இப்படிப் பட்ட வார்த்தைகளைத் தம்பியிடம் கேட்டிருக்கப் போகிறாள்? கமலாவுக்குப் பழைய விஷயங்கள் ஞாபகம் வந்தன. அவளுடைய தகப்பனார் இருக்கும் போதும், பிறகு அவர் இறந்த பிறகும், அவளுடைய அழகிற்காகவே பலபேர் அவளை மணக்க முன் வந்தனர். ஆனால், அவள், தான் மட்டும் சுகமாக இருந்தால் போதும் என்று நினைக்கவில்லை. தன்னை மணந்து கொள்பவர் தன் தம்பியைச் சரியாக நடத்துவாரோ, மாட்டாரோ, அவனை, அப்பா விரும்பினது போல ஐ. ஸி. எஸ்ஸுக்குப் படிக்க வைப்பாரோ, மாட்டாரோ என்றெல்லாம் யோசித்துப் பார்த்த அவள் தம்பியின் பொருட்டுத் தன் மணவாழ்வையும் தியாகம் செய்தாள். அதன் பலன்?



## 7

பொங்கி வரும் கண்ணீரைப் புடவைத் தலைப்பினால் துடைத்துக்கொண்டு, துடிக்கும் இதயத்தைத் தன் இடது கையினால் அமுக்கிப் பிடித்தவண்ணமே அவள் தம்பியை ஏறிட்டுப் பார்த்து, "சேகர் நீ செய்தது நல்ல காரியம்தான். ஆமாம்! ஒரு சினிமா நடிகையின் தம்பி என்பதைவிட, ஒரு ஜில்லா ஜட்ஜின் மாப்பிள்ளை என்று சொல்லிக்கொள்வதில் எவ்வளவோ கௌரவம் இருக்கத்தான் இருக்கிறது. அதில் சந்தேகமென்ன? ஆதிநாளில் உன்னைப் பெரிய மனிதனாக்க என் வாழ்வையே தியாகம் செய்த நான், இன்று சமூகத்தின் முன் உனக்குத் தலைகுனிவு ஏற்படாதிருக்கவும், உன் கௌரவத்தைக் காப்பாற்றவும், கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்ட அந்த உறவை – அதாவது நான் உன் சகோதரி என்ற அந்த உரிமையையும் தியாகம் செய்து விடுகிறேன். அதுதானே நீ வேண்டுவதும், நான் கல்யாணத்திற்கு வரவில்லை. ஆனால், என்னுடைய மணப்பரிசு உன்னை நாளை வந்தடையும்.

இந்த அபலை அக்காவை நீ ஞாபகம் வைத்துக்கொள் என்று நான் உன்னைக் கேட்கவில்லை. உன்னையும், உன் மனைவியையும் நான் வாழ்த்தக்கூட இல்லை. ஒரு சினிமா நடிகையின் வாழ்த்துகளை

அந்த பகவான் கூட ஒரு வேளை வெறுப்பாரோ என்னமோ, யார் கண்டது? நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. என் தியாகத்தின் பரிசை நான் பெற்றேன். உன் அதிருஷ்டத்தின் பரிசை நீ பெற்ருய். அவ்வளவு தான்! கடவுள் உன்னேயும், உன் மனைவியையும் என்றும் சந்தோஷத்திலேயே வைத்திருக்க வேண்டுமென்பது என்னுடைய இதய பூர்வமான பிரார்த்தனை" என்று உணர்ச்சிப் பெருக்கினல் குரல் தழு தழுக்கக் கூறியவள் அப்படியே அருகிலிருந்த சோபாவில் தடாலென்று விழுந்து விட்டாள்.

வெகு நேரங் கழித்து, அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்த போது எதிரிலிருந்த சோபா காலியாகக் கிடந்தது! சேகரை அங்கே காணேம்!!

8

மறு நாள் காலை ஜில்லா ஜட்ஜ் சபாபதியின் பங்களா அமர்க்களப்பட்டது. முகூர்த்த சமயம் மாங்கல்ய தாரணம் நடந்தது. "எங்கே மாப்பிள்ளையின் சகோதரி? மூன்ருவது முடிச்சுப் போட கூப்பிடுங்கள் அந்த அம்மாளை" என்று அதிகாரம் செய்தார் சாஸ்திரிகள்.

சேகரின் முகம் களையிழந்தது. குப்பென்று வியர்த்து விட்டது அவனுக்கு. நெஞ்சில் ஏதோ வந்து அடைத்துக்கொண்டது போலிருந்தது. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "இல்லை, எனக்கு சகோதரி யாரும் இல்லை. வேறு யாராவது இங்கேயே இருந்தால் போடுங்கள் முடிச்சை" என்று தட்டுத் தடுமாறிக் கூறி முடித்தான். ஏனே தெரியவில்லை அப்போது அவன் கண்கள் சிறிது கலங்கினற் போலக் காணப்பட்டன.

சரியாக அதே சமயத்தில், அவனுடைய வார்த்தைகளை மெய்ப்பிப்பதே போல கமலாவின் உயிர் அவளுடைய உடம்பாகிய சிறையினின்றும் விடுதலை பெற்றது! சில மணி நேரங்களுக்கு முன் அவள் அருந்திய பொடாஷியம் ஸையனேட் தன் வேலையைச் செய்து விட்டது!!

★

## கலகம்

தம்பதிகள் கலகம், காதற் கலசத்திற்கு பாலீஷ் கொடுக்கிற மாதிரி.

— ஷா.

# இரேகை சாஸ்திரம்

[எஸ். எம். நாராயணசாமி எம். ஏ.]

இரேகை சாஸ்திரத்தைப் பற்றிக் கூறப்புகுவது கொல்லத் தெருவில் ஊசி விற்கப் போவதை ஒக்கும். காரணம் நம் நாட்டில் இரேகை சாஸ்திரம் அவ்வளவு தூரம் கையாளப் பட்டு பிரபலமடைந்து வந்திருக்கிறது. அதைப் பற்றிக் கேள்விப் படாதவரோ சிறிதேனும் அறியாதவரோ இல்லையென்றே கூறலாம். இது நம் நாட்டில் மிகப் பழமையான காலத்திலிருந்து கையாளப் பட்டு வந்திருக்கிறது; இத்தாலி கிரீஸ் சீனா முதலிய அன்னிய நாடுகளிலும் இது கையாளப்பட்டு வந்திருக்கிறது. நம் நாட்டில் நான்கு வேதங்களின் ஆறு அங்கங்களில் நேத்திரமான ஒரு பகுதியாக இது விளங்குகிறது. இது அகத்தியரால் கமலமா முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது என்று கமலமா முனிவர் ரேகை சாஸ்திரம் கூறுகின்றது. இவையே இதன் பழமையைக் குறிக்கப் போதிய சான்றுகளாகும்.

எனினும் இதன் தோற்றம் மனிதன் என்று தோன்றினானோ அன்றே தோன்றியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. மனிதன் தோன்றிய நாளே தன் இனத்தாரை அறிய அவர்களுடைய அங்க அமைப்புகளை அறிய முயன்றிருக்க வேண்டும். காலப் போக்கில் வாழ்விலே மேன்மையடைந்தவர்களின் அங்க அமைப்புக்களின் விசேஷ இலக்ஷணங்கள் குறிப்பிடப்பட்டு அவைகளே அவர்களின் சிறப்புக்குக் காரணம் என்று நிர்ணயம் செய்யப் பட்டிருக்க வேண்டும். இங்ஙனம் ஒருவருடைய அங்க அமைப்பு அடையாளங்களைப் பற்றிய இலக்கணமும் அவற்றால் நேரிடும் நன்மை தீமைகளையும் பற்றி உரைப்பதே சாமுத்திரிகா இலக்ஷண சாஸ்திரமாகும். இரேகை சாஸ்திரம் அதனுள் அடங்கிய ஒரு பகுதியாகும்.

சாமுத்திரிகா இலக்ஷணங்கள் அறிவிப்பதைக் காட்டிலும் கை இரேகை ஒருவரைப் பற்றி வரலாற்றை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் காட்டுகின்றன. மூளை விஷயாலோசனைக் கூடமாக விளங்குகிறது. கைகள் அங்கு செய்யப்படும் யோசனைகளைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கருவிகளாக இருக்கின்றன. நமது உடலில் ஏற்படும் ஒவ்வொரு அசைவும் மூளையாகிய தலைமைக் கூடத்திலிருந்து இடப்படும் கட்டளைகளினால் நடைபெறுகின்றன. கைகள் அக்கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு முக்கிய கருவிகளாயிருப்பதனால் மனதில் நடக்கும் முக்கியமான விஷயங்களின் சாயல் உள்ளங்கையில் இரேகைகளாகவும் குறிகளாகவும் படிகின்றன என்பது சித்தாந்தம். ஆனால் நிகழப் போகிற சில முக்கியமான நிகழ்ச்சிகளின் அறிகுறிகள் கையில் ஏற்படுவதேன். அதற்கு விடை நாம் கோள்களின் கிரண சக்தியினாலே இயக்கப்படுகிறோம், அவற்றின் சூக்கும சக்தியினாலேயே இக்குறிகள் ஏற்படுகின்றன என்பதே. எனில் இது இயற்கையின் விநோத விளையாட்

டாலன்றி வேறென்னவாக இருக்கமுடியும்? இது நுணுகிய ஆராய்ச்சிக் குறியதாகும்.

இனி இரேகை சாஸ்திரம் நமக்குக் கூறுவதுதான் என்ன? அதனல் நாமடையும் பயன் என்ன என்பதைப் பற்றி கவனிப்போம். இரேகை சாஸ்திரம் கையின் மூலம் ஒருவருடைய வாழ்வைப் பற்றிக் கூறும் நூலாகும். ஆனல் அது முக்கியமாக ஒருவருடைய தன்மை அறிவு ஆற்றல் ஆரோக்கியம் முதலியவைகளைப் பற்றிக் கூறுகிறது. அத்துடன் அது ஒருவருக்கு ஏற்படும் நன்மை தீமை, புகழ், பிரயாணம், அன்பு, அன்பினல் ஏற்படும் தொல்லை தொந்தரவுகள் முதலியவற்றைப்பற்றியும் கூறும். அதனல் ஒவ்வொருவரும் தத்தம் தன்மை அறிவு ஆற்றல் முதலியவைகளைத் தெரிந்து அதன் மூலம் தங்களுடைய போக்கையும் முயற்சியையும் சரியான வழியில் செலுத்த ஒரு கருவியாக அமைவதோடு வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு ஒரு வழிகாட்டியாகவும் அமைகிறது. ஆனல் சுயநலத்தைக் கருதி பணம் சம்பாதிக்க முற்படும் போலிகளிடமோ அன்றி அரை குறையாகத் தெரிந்தவர்களிடமோ கைகளை நீட்டிப் பலனறிதல் பயனின்று. சில சமயங்களில் எதிர் மாருன முடிவுகளே கிடைக்கும். ஆகையினல் இரேகை சாஸ்திர விஷயங்களை நேரே நூல்களின் மூலம் அறிவது தான் சாலவும் சிறந்தது; அதுவே பயன் தரக் கூடியது மாகும்.

ஆராய்ச்சியின்றி அருகி வரும் இப்பேர்ப்பட்ட சாஸ்திரங்கள் பல. அவைகளை அரசாங்கங்கள் கவனித்து ஆராய்ச்சிகளின் மூலம் ஆக்கமளித்தால் அவைகள் நாட்டிற்குப் பெரிதும் பயன் படும் என்று கூறுவது கிஞ்சிற்றும் மிகையாகாது.

★

## எதிர் காலம்

வருங்காலத்திய கஷ்டங்கள், நிகழ் காலத்திய அதிர்ஷ்டங்களை விடக் கொடுமையானவை.

— ஸ்லிடுயஸ்

# மல்லிகை மொக்கு

## கா. நாகலிங்கம்

### அத்தியாயம் பதினாறு

ஏதோ பிரமாதமான காரியத்தைச் சாதித்தது போல் நீண்டதொரு பெரு மூச்சு விட்டுக்கொண்டு மதுரை ஜங்ஷனில் வந்து நின்றது 587ம் நெம்பர் பாஸஞ்சர். அதிலிருந்து கூட்டத்தோடு கூட்டமாக இறங்கினார்கள் முத்துசாமி, புவனா, காமாக்ஷியம்மாள் ஆகிய மூவரும். ஒரு போர்ட்டரைப் பிடித்து சாமான்களை வெளியே கொண்டு வந்து வைக்க ஏற்பாடு செய்து விட்டு மூவரும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்தார்கள். முத்துசாமி சுற்று முற்றும் பார்த்தான். அடுத்த நிமிஷத்தில் அங்கு வண்டிக்காரர்களின் கூச்சல் அதிகமாகி விட்டது. சிலர் பெட்டி படுக்கைகளைத் தம் பக்கங்களில் இழுக்கத் தொடங்கி விட்டார்கள். முத்துசாமி தொண்டை கிழியக் கத்தியும் பிரயோசன மேற்படவில்லை. இச்சமயத்தில் யாரையோ எதிர் பார்த்து நின்று கொண்டிருந்த ஒரு பிளஷர் குறிப்பிட்ட நபர் வராததால் புறப்படக் கிளம்பியது. திடீரென்று அது நிறுத்தப்பட்டு அதிலிருந்து ஒரு ஆள் இறங்கி முத்துசாமியருகில் வந்ததும் கை கூப்பி நமஸ்கரித்து விட்டு "நமஸ்காரம் சார்!" என்றார். அவரை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே "நமஸ்காரம்!" என்றான் பதிலுக்கு.

"எதுங்க இவ்வளவு தூரம்? ஏதாவது சொந்த ஜோலி போலிருக்கு?" என்றார் புதிய மனிதர் முத்துசாமியுடன் இருந்த இரு பெண்களையும் பார்த்துக்கொண்டு.

"ஆமாம், சொந்த ஜோலி தான்! மைத்துனர் வீட்டுக்கு வந்தோம்" என்று சாந்தமாய்ப் பதிலளித்தான் முத்துசாமி.

"நம்ம நண்பர் இந்த டிரெயினுக்கு வர்ரதாகச் சொல்லியிருந்தார். ஏனோ வரவில்லை போலிருக்கு. சரி, நீங்க நம்ப காரிலேயே போயிடலாமே!" என்றார் நண்பர்.

இரண்டு மூன்று முறை முத்து சாமியின் பிரசங்கத்தைக் கேட்டவர் அவர். அவரை முத்துசாமியும் இரண்டு மூன்று முறை கூட்டங்களின் முன் வரிசையில் பார்த்திருக்கிறுன். அவர் பேச்சைத் தட்டி விட அவனுக்கு விருப்பமில்லே. சம்பாஷணேகளைக் கவனித்துக் கொண்டிருந்த புவனுவின் முகத்தைப் பார்த்தான் முத்துசாமி. அதில் ஏதும் சலனமில்லே. தன் கணவன் வீட்டைப் பற்றி ஏதாவது நினைத்துக் கொண்டிருந்தாளோ என்னவோ?

"சரி, வாம்மா, வா புவனு" என்று அழைத்துக் கொண்டு காருக்குச் சென்முன். போர்ட்டர் கொண்டு வந்த சாமான்கள் ஒருபுறமாக காருக்குள் திணிக்கப் பட்டன. எல்லோரும் ஏறிக் கொண்டதும் கார் சேகரன் வீட்டை நோக்கிக் கிளம்பியது.

கார் சேகரன் வீட்டுக்கு முன்ஞல் சென்று நின்ற போது சேகரன், சுந்தரேசன் முதலியோர் காப்பி சாப்பிட்டு விட்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ராஜம்மாள் கூட முதுகுக்கு ஒரு தலேகாணியைச் சாய்வாக வைத்து சுவரின் மேல் லேசாய்ச் சாய்ந்த படி கொஞ்சம் தெம்புடன் சுந்தரேசன், சேகரன் பேச்சைக் கேட்டுக் கொண்டு அவ்வப்போது ஈனஸ்வரத்தில் இரண்டொரு வார்த்தை பேசிக் கொண்டிருந்தாள். சுமதியும் காப்பி சாப்பிட்டு விட்டுப் பாத்திரங்களேத் தேய்த்துவரக் கிணற்றடிக்குச் சென்றிருந்தாள்.

கார் வந்து நின்ற சப்தத்தைக் கேட்டுச் சேகரன் எழுந்தோடிஞன் வீதித் திண்ணேக்கு. சுந்தரேசனும் அவன் பின்ஞல் சென்ருன். காரில் இருந்தவர்கள் எல்லோரும் இறங்கியபின் சாமான்களும்கீழே இறக்கி வைக்கப்பட்டன. புவனு எல்லோருக்கும் முன்ஞல் வீட்டிற்குள் நுழைந்தாள். சேகரனே எதிரிலேயே சந்தித்து ஒரு விநாடி வாய் பேசாமல் நின்று பார்த்தாள் அவனே. மூன்று மாதத்திற்குப் பிறகு இப்போது தான் அவனேச் சந்திக்கிருள் புவனு. அவள் உள்ளத்தில் எண்ணப் புயல் வீசியது. ஏதேதோ கேட்க வேண்டும் என்று நினேத்தாள். ஆனுல் அவள் நினைப்பு ஒன்று கூட உருப்பெற்று வார்த்தையாக வெளிவரவில்லே. கடைசியில் எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "அம்மாவுக்கு எப்படி இருக்கிறது?" என்று கேட்டு வைத்தாள். அந்த ஒரு வாக்கியம் அவள் தொண்டையை விட்டு வெளி வருவதற்குள் படாத பாடு பட்டு விட்டது.

சற்று நேரம் அவளேயே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த சேகரன் உள்ளத்திலும் எண்ண அலேகள் மோதின. அவள் கேட்ட கேள்வியால் சுய உணர்வடைந்த சேகரன் தன்னேச் சமாளித்துக் கொண்டு, "தேவலே, உள்ளே போய்ப் பார்!" என்று சொல்லி விட்டு தன் கவனத்தையும் பார்வையையும் திருப்பி இன்னும் யார் வந்திருக்கிருர்கள் என்று பார்த்தான். தன் மாமியார் காமாக்ஷியம்மாளும், மைத்துனர் முத்துசாமியும் வந்திருப்பதையும் பார்த்து சரேலென வெளியே வந்து, "வாங்க, வாங்க" என்று அவர்களே வரவேற்ருன் சேகரன்.

"வர்ரோம்" என்று சொல்லியபடி ஒரு புறம் ஒதுங்கி உள்ளே சென்ருள் காமாக்ஷியம்மாள் கையில் ஒரு பெட்டியை எடுத்துக்

கொண்டு இதற்குள் காருக்கு வெளியே நின்று கொண்டு உள்ளே இருந்தவருடன் பேசி விடை பெற்றுக் கொண்ட முத்து சாமி திரும்பினான்.

"வாங்க அத்தான்" என்றான் சேகரன். "வர்ரேன்" என்று சொல்லிக் கொண்டு, "அத்தை யம்மாளுக்கு எப்படி இருக் கிறது?" என்று கேட்டான் முத்துசாமி, அவனுடன்.

"இப்போது தேவலை; வாருங் கள் உள்ளே போகலாம்!" என்று சொல்லி விட்டு கீழே இறக்கி வைத்திருந்த பெட்டியை யும் தூக்குக் கூடையையும் எடுத் தான். முத்துசாமி அவன் கையி லிருந்த பெட்டியைத் தான் வாங் கிக் கொண்டு இருவருமாக உள்ளே சென்றார்கள். வீதித் திண்ணையில் நின்று கொண்டு எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான் சுந்தரேசன். "வாப்பா, ஏன் இங்கேயே நின்று கொண்டாய், இவரைத் தெரியுமல்லவா?" என்று திண்ணை யிலிருந்த சுந்தரேசனை அழைத்துக் கொண்டு முத்துசாமிக்கு அவனை அறிமுகம் செய்து கொண்டே உள்ளே சென்றான் சேகரன்.

ஏறக்குறைய சேகரனைப் போன்றிருந்த சுந்தரேசனையும் அவன் தோளில் குறு குறுவென் றிருந்த அழகிய சிறுவனையும் வழி யில் சந்தித்த புவனாவுக்கு அவர் யார் என்று தெரியவில்லை. யாரா வது சேகரனுடைய நண்பராய் இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டு, ராஜம்மாளைப் பார்க் கும் ஆர்வத்தினால் உந்தப் பட்டு வேகமாய்ச் சென்றாள். கூடத் தில் கயிற்றுக் கட்டிலின் மேல் உட்கார்ந்தபடி அவரோடு சாய்ந்து கொண்டிருந்த ராஜம்மா ளைப் பார்த்ததும் புவனாவுக்கு ஏனோ அவளையும் மீறித் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. அவள் மூன்று மாதத்துக்கு முன் பார்த்ததுக்கு இப்போது மிக வித்தியாசம் இருந் தது. தளதள வென்றிருந்த அவள் உடல் வெயிலில் காயவைத்து உலர்த்திய வற்றல் போல் வற்றி வறண்டு இருந்தது. முகத்தில் இருந்த அந்த அசாதாரணமான களை இப்போது அடியோடு நீங்கி விடவில்லையென்றாலும் பெரும் பான்மையும் இல்லை என்று தான் சொல்ல முடிந்தது. இந்தக் கோலத்தில் ராஜம்மாளைப் பார்த்த புவனாவுக்கு அழுகை பொங்கி வந் தது. "அத்தே!" என்று ஒரு கூச்சல் போட்டு விட்டு முகத் தைக் கையால் புதைத்துக் கொண்டு பொருமினாள்.

புவனா தன்னை நோக்கி வந்த போதே ராஜம்மாளுக்கு இன்ப மும் துன்பமும் சேர்ந்த ஒரு வகை யான குழப்பம் ஏற்பட்டு அவளை வாய்திறக்கவொட்டாமல் செய்து விட்டது. தன் சக்தியையும் மீறிக்கொண்டு "புவனா!" என் றாள் ஆர்வம் பொங்க. அதில் ஆசை, அன்பு, பாசம், பந்தம் எல்லாம் தொனித்ததை உணர முடிந்தது புவனாவால்!

"ஏனம்மா! இதுக்கு ஏன் அழு கணும்? எனக்குத் தான் சௌக் கியமாகி விட்டதே!" என்று அவளைச் சமாதானப் படுத்தி விட்டு, "கூட யார் புவனா வந் தார்கள்?" என்று கேட்டாள். இதற்குள் அங்கு வந்த காமாக்ஷி யம்மாள், ராஜம்மாளைப் பார்த்து "அக்கா!" என்றாள். ராஜம் மாள் இருந்த நிலை அவள் கண் களிலும் இரண்டு சொட்டுக் கண் ணீரை வடியவிட்டது.

"வாங்க அக்கா, இதென்ன உங்க கண்ணுலே கூட தண்ணி! இப்ப என்ன, எனக்குத்தான் நல்லாயிடுச்சே!'' என்றாள் தெம்புடன். "இந்த ரெண்டு நாளாகத் தான் தேவலே. அதுவும் இண்ணைக்கு நல்ல தூக்கமும் வந்தது. இனியொண்ணும் தொந்திரவு பண்ணாது!'' என்றாள் ராஜம்மாள் தன் நம்பிக்கையுடன். அவளது பலஹீனமான அந்தப் பேச்சில் கூட ஓரளவு உறுதியும், நம்பிக்கையும் தொனித்தது.

இந்தப் பேச்சையெல்லாம் கேட்டுக் கொண்டே சேகர், சுந்தரேசன், முத்துசாமி ஆகிய மூவரும் வந்தார்கள் ராஜம்மாளின் அருகில்.

இம் மூவரையும் திரும்பிப் பார்த்து விட்டு புவனாவும், காமாக்ஷியம்மாளும் ஒரு புறம் ஒதுங்கி சற்று எட்டச் சென்று நின்றார்கள்.

முத்துசாமி அருகில் சென்று, "அத்தையம்மா, உடம்பு தேவலையா? ஜுரம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான்.

"தேவலையப்பா! இப்ப நல்லா உட்கார்ந்திருக்கிறேன் பாரு. நல்லாத் தூக்கமும் வந்தது. எல்லாரும் ஆறுமணி வண்டியிலே வந்தீங்களாக்கும்?'' என்றாள் ராஜம்மாள்.

"ஆமாம்! அது தானே இப்போ சௌகரியமாய் இருக்கிறது.'' என்று சொல்லி விட்டு, "ஏன் அத்தான் இப்போ என்ன ஆகாரம் தருகிறீர்கள்?'' என்றான்.

"இத்தனை நாளும் ஆரஞ்சு ரசமும் காப்பியும் தான் கொடுத்தேன். இனிமேல் தான் கஞ்சி ஏதாவது கொடுக்க வேண்டும். டாக்டரும் நேற்றுத் தான் 'இனிமேல் கஞ்சி கொடுங்கள்! என்று சொன்னார்.'' என்றான்.

எதிரில் இருந்த பெஞ்சின் மேல் உட்கார்ந்து கொண்டு நவீன மருந்துகள் பற்றியும், புது முறையில் ஊசி போடும் மருந்தைப் பற்றியும், பேசிக் கொண்டிருந்தார்கள் மூவரும்.

வீட்டுக்குள் ஏதோ கல கலப்பான சப்தத்தைக் கேட்டு கிணற்றடியில் பத்துப் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்த சுமதி வேகமாய்த் தன் வேலையை முடித்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள். தான் அதுவரையில் கண்டிராத இரண்டு பெண்களும் ஒரு ஆணும் அங்கு ராஜம்மாளின் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். தன்னைப் போன்றிருந்தவள் தான் சேகரனின் மனைவியாய் இருக்குமோ என்றும், அந்தப் பெரியவள் அவள் தாயாராக இருக்குமோ என்றும் அவ்விருவருடைய முகஜாடையைப் பார்த்து உத்தேசித்தாள் சுமதி. இன்னும் கொஞ்ச நேரத்தில் எல்லாம் தெரிந்து விடுகிறது என்று தனக்குள் சமாதானம் செய்து கொண்டவளாய்க் கையிலிருந்த பாத்திரங்களைச் சமையல் அறைக்குள் கொண்டு போய் ஒழுங்காக அடுக்கலானாள்.

(தொடரும்)

★

# அச்சந் தவிர்

டி. சி. ராமசாமி

குழந்தை அழுகிறது. தாய் அதன் அழுகையை நிறுத்த முயலுகிருள். முயற்சி பலிப்பதில்லை. குழந்தை அழுகிறது. மீண்டும் சமாதானம் செய்ய சில முயற்சிகள் செய்கிருள். ஆனல், குழந்தை ஒரே பிடிவாதமாயிருக்கிறது. தாய்க்கு கோபம் உண்டாகிறது. குழந்தையை அடிக்கிருள். குழந்தை வீறிட்டு அழுகிறது. தாயுள்ளம் சகிப்பதில்லை. எப்படியோ அதன் அழுகையை நிறுத்த வேண்டும் என்று "பூச்சாண்டி, இந்தப் பிள்ளையைப் பிடிச்சிட்டுப் போ" அல்லது "பூனை வருது பிடிச்சிட்டுப் போயிரும், பேசாமலிரு" என்று பயமுறுத்துகிருள். இதுவரை அழுது கொண்டிருந்த குழந்தை உடனே அழுகையை நிறுத்தி விடுகிறது. அது மட்டுமல்ல, தாய் சொன்னபடி நடக்கச் சித்தமாயிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

அச்சம் குழந்தையின் ஆசையை அடக்கி விடுகிறது. குழந்தை தன் ஆசைகளை அடக்குவது நல்லதா, கெட்டதா என்பது வேறு விஷயம், ஆனல், குழந்தையின் ஆசைகளை பிறர் அச்சம் விளைவிக்கக்கூடிய முறையில் அடக்குவது நல்லதா கெட்டதா என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ஒருவனுடைய வாழ்வு அவனுடைய குழந்தைப் பருவத்தின் முதல் ஐந்து வருஷங்களைப் பொருத்து அமைகிறது என்று தற்கால மனோ தத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றனர். இதில் எவருக்கும் அபிப்பிராய பேதம் கிடையாது. இதையே நம் முன்னோர்களும் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்று சொல்லியிருக்கிருர்கள்.

குழந்தையுள்ளம் அனிச்சப் பூவைக் காட்டிலும் மிக மென்மையானது. இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறியக்கூடிய சக்தி இந்தப் பருவத்தில் அநேகமாயில்லை என்றே சொல்லலாம். இந்தப் பருவத்தில் வெளியுலகத்தின் நிகழ்ச்சிகள், சப்தங்கள், சொற்கள் முதலியன எந்தத் தன்மையில் வந்து மோதுகிறதோ அது அப்படியே அதன் உள்ளத்தில் ஆழப் பதிந்து விடுகிறது; பிற்கால வாழ்விலும்கூடத் தொடர்கிறது. இதனல்தான் சிலர் தங்களுடைய குணதிசயங்களை மாற்ற முயன்றுலும் முடிவதில்லை!

அன்புள்ள இடத்தில் அச்சத்திற்கு இடமில்லை. அன்பு வழியினில் குழந்தையுள்ளம் பூரண மலர்ச்சி பெறுகிறது. குழந்தை பருவத்தில் பூரண மலர்ச்சியில்லையெனில், பிற்கால வாழ்விலும் அப்படித்தான். குழந்தைப் பருவத்தில் கொடுமையாகத் வளர்க்கப்பட்ட சிலர் பிற்கால வாழ்வில் மகோன்னத நிலையில் இருப்பதுண்டு. இது விதி விலக்கு.

அச்சமுள்ள இடத்தில் சுதந்திரம், தன்னம்பிக்கை, வீரம் முதலியவற்றிற்கு இடமில்லை. அடிமை மனப்பான்மைதான் நிறைந்திருக்

கும். இந்தத் தத்துவத்தை நன்குணர்ந்தே ஹிட்லர் தன் தேசத்துக் குழந்தைகளின் உள்ளத்தில் அச்சத்தை ஊட்டி அடிமை மனப்பான்மையை வளர்த்து தன்னிச்சைப்படி நடத்தினன். இதே தத்துவத்தை நன்குணர்ந்தே நேர் மாருக ரஷ்யாவில் குழந்தைகளுக்கு அச்சந்தவிர்க்கும் முறையில் பாடங்கள் போதிக்கப் படுகின்றன.

ஆண்களில் பலர் பேடிகளாகவும் தன்னம்பிக்கை அற்றவர்களாகவும் இருப்பதற்கும், பெண்களில் சிலர் பேய் பிடித்து ஆடுவதற்கும் அவர்கள் குழந்தைப் பருவத்தில் அச்சத்தின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதே காரணமாகும் என்று சில மனேதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

அச்சமுள்ளவரை அடிமை மனப்பான்மையும் உண்டு. அடிமை மனப்பான்மை உள்ளவரை எந்தத் துறையிலும் முன்னேற்றம் அடைய முடியாது. நம் தேசம் பல துறைகளிலும் அவ்வளவாக முன்னேற்றம் அடையாமலிருப்பதற்கு பிரிட்டிஷ் ஆட்சி மட்டும் காரணமல்ல. நம் தாய்மார்கள் நம்மை குழந்தைப் பருவத்தில் அடக்கியும் ஒடுக்கியும் வளர்த்ததும் ஒரு காரணமாகும்.

நம் தேசம் சுதந்திரம் பெறும் நிலையிலிருக்கிறது, இனி வரும் இந்தியாவை திறமையுடன் நிர்வகிக்க இன்றைய குழந்தைகளைத் தாய்மார்கள் அச்சந்தவிர்த்து அன்பு வழியினில் வளர்த்து வயிரமுடைய நெஞ்சு பெறச் செய்ய வேண்டும். இது தான் வாழும் வகை; நாட்டை ஆளும் வகையுங் கூட.

★

## மருந்து !

கிரீடம் வைத்துக் கொள்வதால் தலை வலி போய் விடுமா?

டச்சுப் பழமொழி

# விளங்காத அதிசயம்

கே. சி. எஸ். அருணசலம்

வெண்ணிலவை, வெங்கதிரைத் தன்னகத்தே காட்டி, கண் சிமிட்டும் வைர மணி மீன்களை எண்ணில்லாத வர்ண சோபைகள் காட்டும் முகிற் கூட்டங்களை பேரிடி ஓசையையும், பொன் மின்னலை தன்னகத்தே காட்டி விந்தை செய்யும் வான் பரப்பும், இந்த அண்ட கோளமும் மனிதனின் அறிவுக்குப் பூரணமாக வசப்படாமலே, தமது உண்மை வடிவை — இயற்கையை வெளிப் படுத்தாமலே இன்னும் இயங்கி வருகின்றன. இடையருத முயற்சியோடு, எண்ணற்ற தொல்லைகளை யடைந்தும் தாளாத உறுதியோடு நின்று புது உலக விஞ்ஞானிகள் இந்த ஜகத்தைப் பற்றிய அற்புதச் செய்திகளைக் கண்டு பிடித்து, ஒவ்வொரு நாளும் நமக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். எண்ணில்லாத புதுமையைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு முற்றிலும் மாறுபட்ட தோற்றத் தோடு தோன்றும் வானப் பரப்பும், மண்டலங்களும், உடுக்கூட்டங்களும் கொஞ்சம் கொஞ்சமாகத் தம் இயல்பான வடிவத்தை தன்மையை, மனிதனது அறிவுக் கண்களுக்குக் காட்ட நேர்ந்து விட்டது. எனினும் மகோன்னதமான இயந்திரக் கருவிகளைக் கொண்டு வானை நோக்கி ஆராயும் விஞ்ஞானிகளும் கூட இந்த அண்ட கோளத்தின் அமைப்பைக் கண்டு திகைத்து நிற்கிறார்கள். எனினும் இந்த இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானம் அண்ட கோளத்தின் ஆராய்ச்சியைக் காண்பதிலே மனிதன் பெருமைப் பட வேண்டிய அளவிலே வெற்றி யடைந்து விட்டது. இந்த ஜக விந்தை பற்றி அறிஞர்கள் கூறும் செய்திகளின் சாரத்தை ஒரு சிறிது நாம் சிந்திப்போம்.

இந்த உலகம் தோன்றிய காலத்தைப் பற்றி உலகிலுள்ள பழைய நூல்களிலே ஒன்றும் தெரிந்து கொள்ள முடிவதில்லை. அவை கூறும் காரணங்கள் மதக்கருத்தை ஒட்டியவைகளாகவும், ஆத்மிக அடிப்படைகளைக் கொண்டதாகவும் இருப்பதோடு பல இடங்களிலே, இயற்கைக்கும், விஞ்ஞானத்திற்கும் முரண்பட்டு வெகு தூரம் அப்பால் போய் விடுகின்றன.

எத்தனை புதுமைகளை இயற்கையிலே, காட்டி மனிதனை மருட்டுகின்ற இந்த உலகம் பிறந்து முன்னூறு கோடி வருஷங்கள் ஆயின. எண்ணிலாத நக்ஷத்திர மண்டலங்கள் வானத்திலே இருக்கின்ற ஒவ்வொரு மண்டலத்திற்கும் இடையேயுள்ள இடை வெளி கற்பனை கடந்ததாகும். இந்த மண்டலங்கள் வினடிக்கு 60000 மைல் வேகத்தில் இயங்குகின்றன. நாமோ மணிக்குப் பலநூறு மைல் வேகத்தில் உலக அச்சைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறோம். பூமியுடன் சேர்ந்து வினடிக்கு 15 மைல் வேகத்தில் சூரியனைச் சுற்றுகிறோம். சூரியனுடன் சேர்ந்து கணத்திற்கு 12 மைல் வேகத்தில் ஹெர்குலிஸ் என்ற நக்ஷத்திர மண்டலத்தை நோக்கி நாம் பாய்ந்து கொண்டிருக்கிறோம். பால் வீதி மண்டலத்

துடன் (நக்ஷத்திரக் கும்பல்) சேர்ந்து விஞடிக்குப பல நூறு மைல் வேகத்தில் ஒரு வானளாவிய, பிரம்மாண்டமான சகடத்தில் தங்கிய அணுவைப் போல நாம் ஓயாது சுழன்று கொண்டேயிருக்கிரேம்.

இந்தப் பிரம்மாண்டமான ஜக சக்கரம் இத்தனை வேகத்தோடு சுற்றினுலும் அது ஒருமுறை சுற்றுவதற்கு முப்பது கோடி வருஷங்கள் ஆகின்றனவாம். இத்தனை கோடி வருஷங்களாக, இந்த உலக கோளம் தோன்றியதிலே யிருந்து இந்தச் சக்கரம் ஆறு தடவைதான் முழுச் சுற்று சுற்றி முடித்திருக்குமென்று வான ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இருநூறு கோடி வருஷங்கள் தான் இந்த உலகம் தோன்றி ஆகியிருக்கும் என்ற முடிவு வந்தபின் அதற்கு முன் இந்தப் பொருள் என்ன வடிவத்தில் இருந்திருக்கும் என்ற கேள்வியும், ஆராய்ச்சியும் பிறக்குமல்லவா?

இந்த உலகம் உண்டாவதற்கான ஆதி வித்து ஏதோ ஒரு நிர்ணயிக்க முடியாத பொருளான ஒரு சிறு கட்டியாக இருந்து, இரும்பு, நெருப்பு முதலியவைகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாயிருந்து, சூரியனைவிட எண்ணற்ற கோடிப் பங்கு வெப்ப நிலையில் இருந்து, பிறகு தானே வெடித்து விடவே அதன் பலனுகத்தான் நம் கண்முன் தோன்றும், இந்தப் பேருலகம் பிறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அண்ட கோளத்திலே தாறுமாருக ஓடும் பிரகிருதிகளின் எல்லையற்ற வேகங்களைக்கூட 'வர்ண ஸ்பீடா மீட்டர்' என்னும் அற்புதமான கருவியால் அளந்து விட்டார்கள் விஞ்ஞானிகள்.

வானப் பரப்பில் நட்சத்திரங்களும், தூம படலங்களும் மிக அபாரமான வேகத்துடன் பாய்ந்து வரும்போது அவற்றின் வர்ணங்கள் மாறுகின்றன. அந்த மாறுதலைக் கொண்டு மேற்கூறிய கருவியால் அவற்றின் வேகங்களைக் கணிக்கிருர்கள். இன்னும் ஒரு அற்புதமென்ன வென்ருல் விஞ்ஞானத்தினுலே வேகம் என்பதற்கே ஒரு எல்லை-திட்டமான வரையறை-காண முடிந்துவிட்டது. அதாவது வேகத்தில், ஒளியின் வேகமே நிகரற்றது என்பது தெளிவு. இந்த ஒளியின் வேகம்கூட விஞடிக்கு 1,86,000 மைலுக்கு மேலே செல்ல முடியாதென்பது இன்று தெளிவாகி விட்டது.

பல்லாயிரக் கணக்கான நட்சத்திரங்களின் வேகத்தையும் ஒருவாறு அளவிட்டாயிற்று. அவற்றிலே பல விஞடிக்கு 10 அல்லது 20 மைல் வேகத்தில் செல்லுகின்றன. ஏறக்குறைய இந்த வேகத்தில்தான் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது.

இன்னும் தொலை தூரத்திலுள்ள பால்வீதி மண்டலங்கள் என்னும் நட்சத்திரக் கூட்டங்கள் வானப் பரப்பிலே தனித்து நிற்பதால் ஜகத் திட்டுகள் எனப்படுகின்றன. இவற்றில் மிகச் சமீபத்திலுள்ளது 'அன்ட்ரோமிடா' எனும் மண்டலத்தில் உள்ள ஒரு படலமாகும். இந்தத் தூமபடலம் நம்மைநோக்கி விஞடிக்கு 20 மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறதாம். ஆனல் அதே சமயத்தில் வேறு சில நக்ஷத்திரக் கூட்டங்களைக் கொண்ட ஜகத்திட்டுக்கள் நம்மை

விட்டு அப்பால் போய்க் கொண்டிருக்கின்றன.

ஸீவாய்ட் என்னும் நக்ஷத்திரங்களைப் பற்றி அமெரிக்கா வான சாஸ்திரிகள் சில உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். 10 நாட்களுக்கு ஒரு முறை இந்த நட்சத்திரங்களில் ஒன்று ஒளி வீசினால் அது சூரியனை விட 950 மடங்கு அதிக பிரகாசம் கொண்டதாக இருக்கிறதென்றும், 100 நாட்களுக்கு ஒரு முறை இவைகளில் ஒன்று ஒளி விட்டால் அந்த ஒளியானது சூரியனை விட 20000 மடங்கு அதிக ஒளி கொண்டிருக்கிறதென்றும் கணக்கிட்டு விட்டார்கள்.

நமது குழந்தைகள் வேடிக்கையாக தினமும் ஊதுகிறார்களே அந்தப் பலூனைப் போன்றது இந்த ஜகம். முழுவதும் காற்றை ஊத ஊத உப்பி வருகிற பலூனைப் போலவே இந்த உலக கோளமானது விரிந்து உப்பி வருகிறது. எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே, இந்த நட்சத்திர மண்டலங்கள் பலூனின் மேலே ஒன்றுடன் ஒன்று நெருங்கியிருந்தன. பிறகு பலூன் விரிந்து உப்பியபின் இந்த நக்ஷத்திர மண்டலங்களின் ஒன்றுக்கும், மற்றொன்றிற்கு மிடையில் உள்ள தூரம் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு வேறுபட்டு விட்டது.

மொத்தத்தில் இந்த ஜகப் படைப்பே ஒரு விளங்காத அதிசயம் தான். இந்தப் பூமியிலிருந்து பார்க்கும் போது ஆயிரக் கணக்கான உலகங்களே தாறுமாறாக, எத்தனை எத்தனையோ மாறுபட்ட வேகங்களில் வானப் பரப்பிலே, இயங்குகின்றன.

இயற்கையின் இந்தப் பேரதிசயங்களெல்லாம் மனிதனுக்கு என்று தான் விளங்குமோ? அறிவு, தர்க்க ரீதியான சிந்தனை, ஆராய்ச்சி ஆகிய துணையுடன் வானை நோக்கி நிமிர்ந்து ஆராயும் மனிதன் என்றேனும் ஒரு நாள் ஜக அதிசயத்தை ஓரளவேனும் பூரணமாக உணர்ந்து விடுவதில் தவற மாட்டான்.

★

## உதாரணம்

சிறு கல் பெரிய பார வண்டிகளைக் குடை சாய்க்கும்.

— டச்சுப் பழமொழி

# பொறுமை வேண்டும்

வி. கிருஷ்ணன்

அன்பினால் தான் எல்லா காரியங்களையும் சாதிக்க முடியும். ஒருவனிடத்தில் அன்பு அணுவளவேனும் இல்லையெனில் அவன் என்றும் துன்பத்திற்கு ஆளாக நேரிடும். அன்பினால் ஆகாதது ஒன்றுமே இல்லை. அன்பினால் தான் யாவரையும் கட்டுப் படுத்த முடியும்!

அன்பை புறக்கணித்து, பலாத்காரத்தை உபயோகித்துச் செய்யப்படும் காரியங்கள் ஆரம்பத்தில் சிறிது வெற்றியாகக் காணப்படினும் முடிவில் அது முழுத் தோல்வியே ஆகும். நமது நாட்டு பெரியோர்களும், மகான்களும் அன்பே தெய்வம் என்றும், அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்றும் கூறியிருக்கிறார்கள். இதிலிருந்து அன்பினால் உண்டாகும் தெய்வீக உணர்ச்சிகளைத் தடை செய்ய எந்த சர்வேசனாலும் கூட முடியாது என்று தெரிகிறதல்லவா?

அன்பரே, ஆத்திரம் அறிவிற்கு எமனாகும். அது அறிவைக் குலைத்து சரீரத்திற்கே உலை வைக்கும். ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கொட்டி விடுவதால் பின்னால் நாமே சங்கடப் பட வேண்டிய நிலை வருகிறது. ஆத்திரப்பட்டு செய்யப்படும் காரியங்கள் உருப்படாது போனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

எதற் கெடுத்தாலும் அளவுக்கு மீறிக்கோபம் கொள்ளக்கூடாது. அமைதியாக நின்று சாந்தத் துடனேயே ஆராய்தல் வேண்டும். கோபத்தினால் உங்கள் மனதில் உதய மாகும் கொஞ்ச நஞ்ச உயர்ந்த எண்ணங்களும் மறைந்து விடும்.

கோப தாபங்களை விட்டு விட்டு விரோதியாயினும் அவனையும் நேச பாவத்துடன் வரவேற்கும் பெருந்தன்மையுடன் இந்த உலகில் நடந்துவாரும். பரந்த நோக்கத்தோடு யாவரும் சமம் என்று எண்ணிக் காரியங்களைச் செய்யும். எல்லாவற்றிற்கும் பொறுமையே பூஷணம்.

எதற்காக இந்த போதனையை சொல்லுகிறேன் என்றால் நீங்கள் என்னை அடித்து நொறுக்குவதற்காக வல்ல! நீங்கள் காணும் கனவை நன வாக்கு வதற்குத்தான். அதாவது நீங்கள் நாலு பேர்களைப்போல் முன்னேற்றத்துடன் வாழ வேண்டித்தான்.

உங்களுடைய வருங் காலத்திற்கு இவைகள் எல்லாம் ஒரு அஸ்திவார மாக அமையட்டும் என்று தான் சொன்னேன். நான் தான் ஒரு விசித்திரப் பேர்வழியாயிற்றே!

உண்மையே சொல்கிறேன். கிண்டல் பண்ணுவதற்காகவா நேரத்தையும், பேப்பரையும் வீணாக்கிக் கொண்டு உங்களுக்கு கடிதம் எழுதுகிறேன்? ஒன்றையும் மறைக்காமல் உள்ளதை உள்ளபடியே சுட்டிக் காண்பிப்பதால் தான் என் மீது உங்களுக்கு அசாத்ய கோபம் வருகிறது.

மேலும் நான் சொன்ன யோசனைகளை யெல்லாம் விட்டு விட்டு என் மீது தான் குற்றத்தை சுமத்துகிறீர்கள். இது தர்மமா என்றால் 'கீப் கொயட்' என்கிறீர்கள். இது நியாயந்தானா என்றால் 'ஷட் அப்' என்று வாயார சொல்கிறீர்கள். ஆங்கில பாஷையை சரியாக அறிந்து கொள்ளாமலேயே அதை அள்ளிக் கொட்டிக் கரிந்து வருகிறீர்கள்! நானும் கூடத்தான்! இது நம்மவர் பொது வழக்கம்....

உங்கள் பால் உங்கள் மீதுள்ள அனுதாபத்தினால்தான் எதிர் காலத்தில் நீங்கள் ஒரு 'முட்டாள்' என்ற பட்டத்தைப் பெறக் கூடாது என்ற அடங்கா ஆர்வத்தினால் தான், உங்கள் மீது இரக்கம் கொண்ட நான், உங்களைப் படிக்கச் சொன்னேன். இது குற்றமா?

அப்படிப் படிக்கும் போது, வெறும் எட்டுப் படிப்பு படித்தால் ஒரு பிரயோசனமும் மில்லை என்ற காரணத்தால் ஆங்கில தினசரி களை விடாமல் தினம் 2 மணி நேரமாவது, கஷ்டத்தை சகித்துக் கொண்டு திக்கு முக்காடியாவது படியுங்கள் என்று சொன்னேன். முதலில் அர்த்தம் விளங்கா விட்டாலும், நாளடைவிலே புரியும் என்றேன். அப்படிப் புரியா விட்டால் ஒரு அகராதி வாங்கினால் சரியாகப் போகிறது என்றேன். ஏனென்றால், பல விஷயங்களையும் ஏக காலத்தில் அறிந்து கொள்ளப் பத்திரிகைகள் தான் வெகுவாக உதவுகின்றன. பத்திரிகைகள் இல்லாவிட்டால் ஊரிலே ஒன்றும் நடவாது. ஒன்றும் ஓடவும் ஓடாது. அதனால் தான் பத்திரிகை வாங்கிப் படியுங்கள் என்றேன். இது குற்றமா?

எத்தனையோ பேர்கள் தங்கள் சொத்து சுதந்தரத்தை கூட அடகு வைத்தும், விற்றும் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்கும் பெற்றோர்களை நீங்கள் கண்டதில்லையா? அரைவயிறும், கால் வயிறுமாக உண்டு அரைப் பட்டினியுடன் எங்கெங்கோ போய்ச் சென்று படித்த யுவர்களை பார்த்ததில்லையா?

அப்படி யெல்லாம் இல்லாமல் உங்களுக்கு வசதியிருக்கிறது. ஆனால் மனமில்லை படிப்பதற்கு. உயர்தரமாக இருக்க வேணும் என்று ஆசையிருக்கிறது. ஆனால் அந்த ஆசைக்கு அஸ்திவாரமாக அமைகிறது படிப்பு. அது தான் உங்களிடம் இல்லை.

வயிறு வளர்ப்புக்கு செலவு செய்வது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் கல்விக்கு செலவழிப்பதும். இதை நன்றாக தீர ஆலோசனையுடன் கவனித்துப் பாருங்கள். இதை நான் தெளிவாகச் சொல்வதில் என்ன ஐயா குற்ற மிருக்கிறது?

நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் பகுதிகள் இவை. அன்பினாலே இவ் வையத்தை வெல்லலாம் என்று அறிஞர்கள் கூறுவதை வெகுஉருக்கமாக கலை அழகுடன் கட்டுரையாளர்ஸ்தாபிக்க முயல்கிறார்

உங்களை கேலியாக சில வார்த்தைகள் சொல்லியிருப்பேன். அதையெல்லாம் மனதில் வைக்கலாமா?

நான் இன்று உங்கள் பக்கத்தில் இருக்கிறேன். ஆனல் நாளை உங்களிடமிருந்து மறைந்து விடலாம். நான் மறைந்தாலும் என் மனம் மறக்காது. அது போலவே என் ஞாபகம் உங்கள் மனதில் எப்போதும் இருந்தால் அதுவே போதுமானது.

உங்களுக்கு அறிவு குறைவாக இருப்பதால் — அறிவைப் பெற முயற்சி செய்ய வேண்டுமே யல்லாதுமற்றவரைக்குறை கூறுவதில் பயனில்லை. அளவற்ற முயற்சியில்லா விட்டால் ஒரு காரியமும் சித்திக்காது.

நாம் ஒருவருக் கொருவர் துவேஷ மனப் பான்மையோடு இருந்தால் அது முடிவில் அழிவையே தரும். ஒருவர்க் கொருவர் எந்த சந்தர்ப்பத்திலும் உதவி செய்து கொள்வதுதான் கடமை. உங்களுக்கு வற்ருத செல்வத்தையும், வேண்டிய கல்வி யறிவையும் கொடுக்கும் படி அந்த குற்ற மற்ற குமரனை என் மனமாரப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். வாழ்க நம் நட்பு.

அன்பன்,

..................


★

## லக்ஷியம்

நினைப்பது கைக்கு எட்டாத போது, எட்டுகிறதை நினைக்கலாமே!

— கிரேக்க மொழி

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam



நகைகளில் பெயர் பெற்ற
PAR
சீல் நகைகளே சிறந்தவை
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
ராஜா. கோயமுத்தூர்.
139.